# குருதட்சணை

தெனகம சிரிவர்தன

தமிழில் – திக்வெல்லே கமால்



# குருதட்சணை

(இளைஞர் நாவல்)

சிங்கள மூலம்:
தெனகம சிரிவர்தன

தமிழாக்கம்:
திக்குவல்லை கமால்

தோதென்ன வெளியீடு
உஸ்வெவ வீதி
ஆனமடுவ.
தொலைபேசி: 032- 2263446

குருதட்சணை Gurudatchanai
தெனகம சிரிவர்தன Denagama Siriwardhana

முதலாம் பதிப்பு 2008 First Print
ISBN - 978-955-1848-11-8

© தோதென்ன வெளியீடு © Thothanna Publications

தமிழில் **Translated by**
திக்வெல்லே கமால் Dikwelle Kamal

கணனி எழுத்தமைப்பு **Computer Type Setting**
சோ. சாந்தகுமாரி S. Santha Kumari

அச்சுப் பிரதி **Printed by**
ஜயன்ட் பிரின்ட் கிரபிக்ஸ் Jayan Print Graphics
52 A/1 52 A/1
கலஹிடியாவ Galahitiyawa
கணேமுள்ள. Ganemulla.

வெளியீடு **Published by**
தோதென்ன வெளியீடு Thothanna Publications
உஸ்வெவ வீதி, Uswewa Road, .
ஆணமடுவ. Anamaduwa.
இலங்கை. Sri Lanka.
தொலைபேசி - 032-2263446 T.P. 032-2263446

# சமர்ப்பணம்

வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதனால் தொழிலை இழந்த என்னுடன் ஹம்பாந்தோட்டைச் சந்தைக்குச் சென்று அரிசி விற்ற எனது அன்பார்ந்த மனைவி குஸுமுக்கு.

## இதுவரையில் நாம் தாமதித்து விட்டோம். இனியும் தாமதிக்க வேண்டியதில்லை.

பிரிவினைவாத இலங்கைச் சமூகம் பெரும் கலகத்தை நோக்கி நகர்ந்து கொண்டிருக்கும் காலகட்டம் இது. இவ்விடயம் தொடர்பாக நாம் ஒரு தனிநபரையும் அவர் சார்ந்த இயக்கத்தையும் நோக்கி விரல் நீட்டிய போதும், உண்மையில் அதனைப் பொறுப்பேற்க வேண்டியவர்கள் பலர் இருப்பதை நடுநிலை நின்று சிந்திப்போர் புரிந்து கொண்டுள்ளனர்.

இலங்கைச் சமூக அமைப்பு இயல்பாகவே ஒன்று சேர்வதைவிடப் பிரிந்து கொள்வதிலேயே நாட்டம் காட்டுவது தெரிகிறது. எங்களிடையே இவ்வாறானதொரு நிலைப்பாடு வளர்ந்திருப்பது ஏன்? இனரீதியாகப் பிரிந்து செல்வது தொடர்பாகச் சிந்திக்கின்ற போது, இலங்கையின் அரசியல் சூழல் பிரதான காரணியாக இனங்காட்டப் பட்ட போதும், எங்கள் நாட்டில் பல தசாப்தங்களாக நடைமுறைப் படுத்தப்படும் கல்வி முறைமை, ஊடகங்களின் செயற்பாடு போன்றே கலாசார இணைப்பின்மையும் பிரிந்து செல்வதற்கான கருத்தியல் பின்னணியை உருவாக்கியுள்ளதென்பதை விளங்கிக் கொள்வோர் மிகச் சிலரே.

உலகப் படத்தில் ஒரு துளி போன்றது நமது நாடு. அதற்குள் வழும் மிகச்சிறிய இனக்குழுக்களிடையே உறவை வளர்த்

தெடுப்பதில், இதுகாலவரையில் நிலவிய பின்புலம் திருப்தி தரக் கூடியதாக உள்ளதா?

கடந்த காலங்களில் கல்வி, கலை, இலக்கியம் மற்றும் ஊடகம் முதலான அனைத்தும் குறிப்பிட்டதொரு கலாசாரக் கட்டமைப்புக் குள்ளேயே பயன்படுத்தப்பட்டு வந்துள்ளது. இதனால், இந்நாட்டில் வாழும் வெவ்வேறு இனத்தவர்கள் ஒருவரையொருவர் அறிந்து கொள்வதற்கு, அதனூடாக நடைபெற்றுள்ள சேவை மிகச சொற்பமே. இலக்கியப் பயன்பாட்டின் போது, ஒவ்வொரு இனமக்களும் தமக்கு வாய்ப்பான நாடுகளின் இலக்கியங்களில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டு, அதற்கேற்ப தமது கருத்துக்களையும், நடவடிக்கைகளையும அமைத் துக் கொண்ட போதிலும், நமது நாட்டில் வாழும் அயல் சமூகத்தின் இதயத்துடிப்பைப் பிரதிபலிக்கும் இலக்கியத்தைப் பரீட்ச யமாக்கிக் கொள்ள ஊக்கம் பெறவில்லை. எவரும் ஊக்கமூட்டவுமில்லை. இதுவும் நாம் பிரிந்து நிற்பதில் பலமான தாக்கத்தை ஏற்படுத்தியு ள்ளதென்பது எமது எண்ணமாகும்.

இறுதியாக நாம் அனுபவிக்கும் மோசமான யுத்தத்தின பங்காளியா கவும், துன்பப்படுவோராகவும் மாறியுள்ளோம். இந்த யுத்த நிலை மையை எவ்விதமாகத் தவிர்த்துக் கொள்ளப் பார்த்தாலும், உண்மை யான சமாதானத்தை நிலைநாட்ட வேண்டுமாயின், இந்நாட்டில் வாழும் இனங்களிடையே புரிந்துணர்வு, கௌரவம், அங்கீகாரம், பொறுமை உள்ளிட்ட நற்குணங்கள் கட்டாயமாக விருத்தியடைய வேண்டிய சாதகமான அம்சங்களாகும். வெவ்வேறு இனத்தவர் களின் இலக்கிய வெளிப்பாடுகளை அவர்களுக்கு அறிமுகபபடுத்து வதற்கு நாமெடுக்கும் இம்முயற்சி அதற்கான பகைப்புலத்தை வழங்குமென நாம் உறுதியாக நம்புகிறோம்.

- சிட்னி மாகஸ் டயஸ்
தோதென்ன வெளியீடு சார்பாக.

# நூலாசிரியர் சொல்கிறார்

1980 - ஜூலை வேலை நிறுத்தத்தில் பங்குபற்றிய மையால் தொழிலற்றுப் போன என்னை வாழவைப்பதற்காக, எனது பாட சாலை மாணவர்கள் செய்த உதவிகளை நினைக்கும் போது கண் களில் கண்ணீர் நிரம்புகிறது.

"அதோ................ எங்கட ஸேர் அரிசி விற்கிறார். அம்மா அவரிடம் வாங்குங்கோ!"

ஹம்பாந்தோட்டை ஞாயிறு சந்தையில் நான் அரிசி விற்பதைக் கண்ணுற்ற சிறுபிள்ளை சொன்ன அந்த வார்த்தைகள், இன்னும் என் செவிகளில் நிறைந்திருக்கின்றது.

முழுநாளும் சூரியவெவ, கிரிஇப்பென் ஆர, உடகம சந்தைக ளில் அலைந்து தேங்காய், சின்ன வெங்காயம், கருவாடு விற்றேன். இப்பிரதேசப் பாடசாலைகள் பலவற்றில் நான் ஆசிரியராகக் கடமை யாற்றியதால், அதிகமான பிள்ளைகள் என்னிடம் வந்தார்கள். அவர்க ளது பெற்றோரை எனக்கு அறிமுகப்படுத்தி, எனது சிறிய வியாபார த்தை வளப்படுத்தினார்கள்.

அந்தப் பிள்ளைகள் தொடர்பான நினைவு மீண்டும் மீண்டும் எழுந்து என்னை விழிப்புறச் செய்ததாலேயே 'குருதட்சணை'யை எழுதினேன்.

இந்த மாணவர்கள் நடப்பு வாழ்வுக்கு முகம் கொடுக்கும் உண்மையான வீரர்களாவர். உடலால் சிறுவர்களாயினும், உள்ளத் தால் மனிதர்கள்.

இளம் பருவத்தில் சமுதாயம் அவர்கள் மீது செலுத்துகின்ற செல்வாக்கு அவர்களது எதிர்கால ஆளுமையைக் கட்டியெழுப்பு கிறது. அந்தவகையில் கலை- இலக்கியத்தின் தாக்கம் மிகவும் வலிமையானது. அதனால் தான் குறித்த நாடுகளில் வீரத்தைப் போன்றே, முன்மாதிரியான குண இயல்புகளாலும் அவர்களைப் போஷிக்க, இளைஞர் இலக்கியத்தைப் பயன்படுத்துகின்றனர்.

சமத்துவமான, நியாயபூர்வமான, தன்னிறைவான சமுதாயத்தி ற்கு, சத்திய வாழ்வுக்கு முகம் கொடுக்கக் கூடிய உண்மையான வீரர்களே அவசியம். அப்படியான வீரர்கள் நிறைந்த இலக்கியப் படைப்பை எங்கள் மாணவர்களின் கைகளில் கொடுப்பது வளர்ந் தோரின் கடப்பாடாகும்.

'குருதட்சணை' தமிழ்மொழியினூடாக உங்கள் கைகளில் தவழும் இந்த வேளையில், எனது மனம் மகிழ்ச்சியால் ததும்பு கிறது. துன்பப்படும் சிங்களக் கிராமத்துப் பிள்ளைகளின் வாழ்க்கை முறை பற்றித் தமிழ்பேசும் பிள்ளைகளும் வாசகர்களும் அறிந்து கொள்ள வாய்ப்பேற்படுகிறது.

நீண்ட காலமாக ஆசிரியப் பணியில் ஈடுபட்டு வரும் பிரபல தமிழ் எழுத்தாளரான திக்குவெல்லை கமாலுக்கூடாக இது தமிழ் வடிவம் பெறுவது எனது மகிழ்ச்சியை இரட்டிப்பாக்குகிறது. இதனை தமிழா க்கம் செய்ய மூலகாரணமாகவிருந்த சிட்னி மாகஸ் டயஸும ஓர் ஆசிரியரே.

இந்த ஆசரியர்களின் கைகோர்ப்பு எங்கள் மாணவர்களது வெற்றி க்கு நல்ல வாய்ப்பாகும்.

- தெனகம சிரிவர்தன

7/20, கொஹிலகொடுவ வீதி
கொடிகமுவ
மஹரகம.
2008. 05. 12
தொ. பே : 0112841302

# திறவுகோல்

தெனகம சிரிவர்தன கவிதை, சிறுகதை, நாவல், இளைஞர் நாவல், சரிதை என்று நாற்பதுக்கு மேற்பட்ட புத்தகங்களை வெளியிட்டுள்ளார். திவாயின, ஸிலுமின, விதுஸர போன்ற பத்திரிகைகளில் கடமையாற்றியவர். 'பாலம்' என்ற பத்தியின் மூலம் வாராவாரம் தமிழ் எழுத்தாளர்களை அறிமுகம் செய்து அவர்களது ஆக்கங்களையும் வெளியிட்டவர்.

தெனகமவும் நானும் மாத்தறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள். நீண்டகாலமாக எமக்கிடையே தொடர்பு இருந்து வருகிறது.

எமக்கிடையே இணைப்பை ஏற்படுத்திய எம். எச். எம். சம்ஸ், இவரது சர்வதேச விருது பெற்ற இளைஞர் நாவலை 'நண்பர்கள்' என்ற பெயரில் தமிழாக்கம் செய்தார்.

இவரது பரிசு பெற்ற இன்னொரு படைப்பு 'குருதட்சணை'. சிங்களத்தில் மூன்று பதிப்புக் கண்டுள்ளது. அர்ப்பணிப்புள்ள ஓர் ஆசிரியரையும் அவர் மீது அபிமானம் கொண்ட மாணவர்களைச் சுற்றிச் சுழல்கிறது. இந்த விடயப் பரப்பைக் கொண்ட முழுமையானதொரு நாவல் இலங்கை தமிழ் இலக்கியச் சூழலில் எழுதப்பட்டதாகத் தெரியவில்லை. இளைஞர் இலக்கியமென்ற துறைக்கு இங்கு பெரிதாக வளர்வுமில்லை. எனவே இதனை தமிழாக்கம் செய்வது மிகுந்த பயனளிக்குமென்று கருதினேன்.

அனுமதி தந்த நூலாசிரியருக்கும், தோதென்ன வெளியீட்டகத்திற்கும் எனது நன்றிகள்.

-திக்குவல்லை கமால்

104- அட்டுலுகம
பண்டாரகம.
தொ-பே: 0382292118.

2008. 05. 12.



# 1

"சீக்கிரம் வா கமல்......"

கமல் மேசையில் புத்தகத்தை வைத்து விட்டு நிமிர்ந்தான்.

யன்னல் கம்பிகளுக் கூடாகத் தெரிந்த நிமலின் முகத்திலே ஏதோ கவலை தோய்ந்திருப்பதை அவன் அவதானித்தான்.

"என்னடா ஏதோ பயந்தது போல......?" கமல் கேட்டான்.

"எங்கட சிறிநாத ஸேர் சந்தையில அரிசி விற்கிறார்...."

"நீ கண்டியா?"

"ஆமா..... பொய்யென்ன சந்தைக்குப் போய்ப் பார்த்தாத் தெரியும். நான் திரும்பவும் போகப் போறன்......."

"நானும் வாறன்......"

கமல் சேட்டை அணிந்த படி வெளியே வந்தான்.

"எங்க தம்பி போற நீ?" அவனது அம்மா குறுக்கிட்டாள்.

"சந்தைக்குப் போறனம்மா. சிறிநாத ஸேர் அரிசி விற்கிறாராம்."

"என்ன?" அவளால் அதனை நம்ப முடியவில்லை.

"போய் வந்து சொல்றன்...." அவர்கள் அவசரமாகச் சென்றனர்.

"கமல் அண்ணா! அங்க பாருங்க சிறிநாத ஸேர் அரிசி விற்கிறார்."

"கழுத்திலே சாமான் பையொன்றுடன் வந்த சிறுவன் சத்தமிட்டுச் சொன்னான்."

அவர்கள் உள்ளே போகும் போது அநேகமானவர்கள் சந்தையை விட்டும் வெளியேறியிருந்தனர். சுணங்கி வந்த ஒரு சிலர் மாத்திரமே சாமான் வேண்டிக் கொண்டிருந்தனர்.

முட்கம்பியடித்த தென்னங்குற்றி வேலியினால் சுற்றி வளைக்கப்பட்ட சந்தையின் பாதாள வாயிலால் உட்புகும் போது, அரிசிக் குவியலைச் சீர்செய்து கொண்டிருந்த சிறிநாத ஸேரையும் பணத்தை எண்ணியபடி அவரது அருகிலே நின்ற மனைவியையும் அவர்கள் கண்டனர். எனினும், நெருங்கிச் செல்லவில்லை.

"ஐயோ நிமல்!" கமல் பதறினான்.

நிமல் மௌனமாக நின்றான்.

"ஸேரின் முகம் வெய்யிலுக்கு வாடிப் போய்...."

மெல்லிய உடல்வாகு கொண்ட சிறிநாத ஸேர் ஸாரமும் சேட்டும் அணிந்திருந்தார். தலையில் ஈச்சோலைத் தொப்பி. மனைவியின் கழுத்துக்கும் தோளுக்குமிடையே குடை சிக்கியிருந்தது.

பின் பக்கமாக இரும்புக் கூரொன்றில் தராசு தொங்கியது. கீழே படிகள் காணப்பட்டன. விரித்திருந்த சாக்கில் பால் வெள்ளை அரிசிக் குவியல். அதனைக் கீழே பார்த்தபடி சிறிநாத ஸேர் சரி செய்து கொண்டிருந்தார்.

கையிலே பையொன்றுடன் கம்பீரமான பெண்ணொருத்தி சந்தைக்குள் புகுந்தாள். அவளோடு ஒரு சிறுவனும் வந்திருந்தான்.

"அரிசி வேண்டவா?" கமல் அவளிடம் கேட்டான்.

"ஆம் தம்பி..... நான் கொஞ்சம் சுணங்கிட்டன்......"

"சுணங்கவில்லை...... அதோ அந்த இடத்தில் நல்ல அரிசி இருக்கு....."

கமல் காட்டிய இடத்துக்கு அவள் சென்றாள்.

சிறிநாத அவர்கள் எழுந்து "அரிசி வேண்டுமா?" என்று கேட்டார், கூடவே மலர்ந்த சிரிப்புடன்.

காவியப் பாடலொன்றை சுவையாக விளங்கப்படுத்தும் போது வெளிப்படும் சிரிப்பிருக்கின்றதே, அதே சிரிப்புத்தான் அது என்று கமல் நினைத்தான். அவருக்குக் காணாதபடி இருவரும் மாட்டு வண்டிக்குள் மறைந்திருந்து எல்லாம் அவதானித்துக் கொண்டிருந்தனர்.

அந்தப் பெண் அள்ளியெடுத்துப் பார்த்தாள். அது பால் வெள்ளை அரிசி.

"எவ்வளவு?"

"எட்டிருபத்தைந்து"

"எட்டுக்குத் தாங்களன்."

"முடியாது நோனா. அப்படீன்னா...... எங்களுக்கு ஒரு சதமு மில்லயே....."

அவள் பையைத் திறந்து நீட்டினாள். அவர் அரிசி நிறுத்தார். பை நிறைந்தது. மனைவி காசைப் பெற்றுக் கொண்டாள். அப்போது சூரியன் உச்சியில் நின்றது. நெற்றி வியர்வையைத் துடைத்த படி சிரிநாத ஸேரின் பார்வை இளநீர் விற்குமிடத்தில் நிலைத்தது.

"கமல் என்னிடம் இரண்டு ரூபா இருக்கு. ஸேருக்கு இளநீர் கொண்டு போய்க் கொடுக்க விரும்புறன்...."

"ஸேர் அந்தப் பக்கமாகத் தான் பார்க்கிறார்."

அவர்கள் இரண்டு இளநீர் வேண்டி, வெட்டி எடுத்துக் கொண்டு சிரிநாத ஸேரை நெருங்கினார்.

"இங்க இன்னும் இரண்டு பேர் வாராங்க. என்ன அரிசி வாங்கவா?" சிரிநாத ஸேர் கேட்டார்.

பாடசாலையில் ஆரம்பப் பிரிவு மாணவர்களுடன் உதட்டைக் குவித்து நகைச்சுவை பேசும் சிரிநாத ஸேர், இந்த நெருப்பு வெய்யிலிலும் அதே விதம் தான். கமலால் கதைக்க முடியவில்லை.

அவர் இரண்டு இளநீரையும் பெற்றுக் கொண்டார்.

"இந்த நேரத்திற்கு நல்ல சாமான்." மனைவி சொன்னாள்.

“நல்ல சாமான்தான். இருந்தாலும் இவங்களுக்குக் காசு கொடுக்க வேண்டுமே” சிரிநாத ஸேர் கூறினார்.

“காசு வேண்டாம் ஸேர்.” நிமலின் உதடுகள் நடுங்கின.

“அப்படி முடியுமா...., இப்பொழுது நாங்கள் காசுக்காரர் அல்லவா? அந்தச் சாக்குக்குக் கீழே எவ்வளவு காசிருக்கு பாருங்கள்.”

அவரது முகம் சிரிப்பாலும், அவளது முகம் களைப்பாலும் நிறைந்திருந்தது.

மேலும் சிலர் அரிசி வாங்கினர். இன்னும் அவிழ்க்கப்படாத நான்கு மூட்டைகள் பின்பக்கமாகக் காணப்பட்டன.

“இன்றைக்கு அரிசி வியாபாரிகள் அதிகம். ஒருவாறு இரண்டு மூடை விற்று விட்டேன். பத்து மூடையென்றாலும் விற்க முடியுமென்று நேற்று என்னிடம் ஒரு வியாபாரி சொன்னார்.” சிரிநாத ஸேர் கூறினார்.

“எஞ்சியிருப்பதை.....?” கமல் கேட்டான்.

“மவுலான முதலாளியின் கடையால் தான் எடுத்தேன். எஞ்சியிருப்பதை அவருக்கே திரும்பக் கொடுக்கலாம். காசு கொடுக்காமல் தான் அவரிடம் கொண்டு வந்தேன்.”

காற்று புழுதி கிளப்பியது. அவள் தும்மினாள். சந்தை பாழடைந்து போகும் நேரம். மாட்டு வண்டிக் காரரும், சில வியாபாரிகளும் மாத்திரமே எஞ்சியிருந்தனர்.

“வெய்யில் அகோரம். இரண்டு பேரும் வீட்டுக்குப் போங்க.”

சிரிநாத ஸேர் எஞ்சிய அரிசியைச் சாக்குப் பையில் இடுவதற்குத் தயாராகியபடி சொன்னார்.

“நாங்க போடுறம் ஸேர்...”

“வேண்டாம் வேண்டாம்.”

நிமல் விரித்துப் பிடித்த சாக்குப் பையுள் கமல் ஒன்று சேர்த்த அரிசியை இட்டு நிரப்பினான். கீழே விரித்திருந்த சாக்குப் படங்கை மடித்துத் தனது மனைவியின் கையில் கொடுத்தார் சிரிநாத.

"இனி இந்த அரிசி மூட்டைகளை மவுலானாவின் கடைக்குக் கொண்டு போக வேணும்." என்றவாறு வேலியோரமாகவிருந்த வண்டியைப் பார்த்தார். வண்டித் தண்டில் அமர்ந்திருந்த பையனை அழைத்த கமல், நிமலுடன் சேர்ந்து நான்கு அரிசி மூட்டைகளையும் ஏற்றி மவுலானா கடைக்கு அனுப்பினான். சிரிநாதவும் அவன் மனைவியும் அதன் பின்னால் சென்றனர்.

தராசையும், இரும்புக் கூரையும் நிமல் எடுத்துக் கொண்டான். ஈச்சோலைத் தொப்பியைக் கையிலெடுத்து நெஞ்சுக்குக் காற்றடித்தார் சிரிநாத.

"இன்று கடுமையான வெக்கை. மாலையில் மழை பெய்யும்."

அவர் மவுலானா கடைக்கு ஏறியபடி சொன்னார்.

"எப்படி விஷயம்? ஆறு மணித்தியாலம் கூடப் போகவில்லை. இருபது ரூபா இருக்கு."

கடையிலிருந்து இறங்கி மனைவிக்குப் பணம் கொடுத்தபடி கூறினார்.

"வீட்டுக்குக் கொண்டு போக ஏதாவது எடுக்க வேணும்." அவள் அடுத்த கடைக்கு ஏறிய பிறகு, அவர் இரண்டு பேருடனும் சுருட்டுக் கடைப் பக்கமாகச் சென்றார்.

"ரெண்டு பேரும் வீட்டுக்குப் போங்க. அம்மாமார் தேடுவாங்கள்."

"இல்லை ஸேர். நாங்கள் சொல்லிவிட்டுத்தான் வந்தோம்."


"பரீட்சை அடுத்த கிழமை. படிப்பதில்லயா,"

"படிக்கிறோம் ஸேர்."

"சும்மா இங்கே ஏன் நிற்கிறீங்கள்? வீட்டுக்குப் போய்ப் படியுங்க."

தராசு மற்றும் இரும்புக் கொளுக்கிகளை இருவரும் சிரிநாத ஸேரின் வீட்டுக்குக் கொண்டு சென்றனர்.

அவரது மனைவி "தேநீர் குடித்திட்டு போங்க." என்று சொன்ன போதும் அவர்கள் திரும்பி விட்டனர்.



# 2

இடது கையில் தட்டை வைத்துக் கொண்டு கமல் கயிற்றுக் கட்டிலில் அமர்ந்திருந்தான்.

"சோற்றை பிசைந்து பிசைந்து இருக்கிறதல்லாமல் சாப்பிடுறதா தெரியல்ல". அவள் சொன்னாள்.

அவனது முகம் கவலையால் நிரம்பி வழிவது அவளுக்குத் தெரிந்தது.

"வேலைய இல்லாமல் செய்து கொள்ளும்படி நாங்களா சொன்னோம்? ஆசிரியர்மார் வேலை நிறுத்தம் செய்வது சரியில்லை என்றுதான் உங்கட அப்பாவும் சொன்னவர். சிரிநாத ஸேர் இப்படி நடந்து கொள்வாரென்று நாங்கள் நம்பவில்லை."

அவளுடைய வார்த்தைகள் அவனது முகத்தின் உணர்ச்சியை மாற்றியது. கூடவே அவனுக்குக் கோபமும் கிளம்பியது.

"எவ்வளவு பெறுமதியான தொழிலை இல்லாமல் செய்து கொண்டார்....."

"ஆசிரியர் என்றால் எவ்வளவு கௌரவமான தொழில். இப்பொழுது சந்தையில் அரிசி விற்கிறார்! நீ ஏன் அதைப் பற்றி இவ்வளவு யோசிக்கிறாய்? சாப்பிட்டு விட்டு உனது வேலையைப் பார். அங்கே அப்பாவும் வருகிறார்."

அவள் வெளிச்சாலைக்குச் சென்றாள்.

அவன் ஏதோ சப்பி விழுங்கி உணவுத் தட்டை வெறுமையாக்கினான்.

மண்வெட்டியை சாலைக் கட்டிலடியில் வைத்த அப்பா, கோவணத் துண்டைக் கொடியில் போட்டு விட்டு வீட்டுக்கு ஏறினார்.

"எங்கே இவன்?" அவர் கமலைத் தேடினார்.

அவன் குடத்தை வளைத்துப் பீங்கானில் நீர் வார்த்துப் பருகிக் கொண்டிருந்தான்.

"சிறிநாத ஸேர் சந்தையில் அரிசி விற்றதாய் எல்லோரும கதைத்துக் கொள்றாங்க. சந்திக் கடையில் கதைக்கிறதக் கேட்டன்."

கமல் வீட்டினுள்ளேயிருந்து அப்பாவுக்குப் பதில் சொன்னான். "ஓம் அப்பா. நான் சந்தைக்குப் போனன். ஸேர் அரிசி விற்றார். தராசையும் இரும்புக் கூரையும் வீட்டுக்கே கொண்டு போய்க் கொடுத்து விட்டுத்தான் வந்த நாங்கள்."

அப்பா சிறிது நேரம் அமைதியாக நின்றார்.

"அந்த மனிதன் செய்து கொண்ட வேலை! ஸாரம் உடுத்தித் தொப்பி போட்டுக் கொண்டு அரிசி விற்கிறார் என்றதும் என்னால் நம்ப முடியவில்லை."

அனுதாபம் நிறைந்த தந்தையின் குரல் கமலின் கவலையை மேலும் அதிகரிக்கச் செய்தது.

அம்மா சோற்றுப் பீங்கானும் தண்ணீர்க் கோப்பையுமாக வந்தாள்.

சாலையின் இரு தூண்களுக்கிடையில் கட்டப் பட்டிருந்த கயிற்றுக் கொடியில் ஸாரமும் கோவணமும் தொங்கிக் கொண்டிருந்தன. கிடுகுக் கூரையின் கமுகுப் பறாலையிலிருந்து தொங்கிய நார்களில் குவிந்திருந்த சிறுகொசுக்கள் அவளது கண்களில் முட்டின. அவள் கண்ணை மூடிக் கொண்டு கட்டிலின் மீது சோற்றுப் பீங்கானை வைத்து நீர்க்கோப்பையை அவனது கையில் கொடுத்தாள். களிமண் சுவருக்கு முதுகைக் கொடுத்து அமர்ந்து கொண்டு வாய் அலசி வெளியே கொப்பளித்துவிட்டு சோற்றுத் தட்டைக் கையிலெடுத்தபோது, அரைவாசி பலாக்காய்ச் சுளைகளால் நிரம்பியருப்பதைக் கண்ணுற்றான்.

"யார் பலாக்காய் ஆய்ந்தது?"

தேங்காய்ச் சம்பலுடன் பலாச் சுளையை வாயிலிட்டவாறு கேட்டான்.

"நான் கொக்கியால் இழுத்திழுத்து ஆஞ்சன். மேல் கிளையில் முற்றிய காயொன்று இருக்கு. முடியுமென்னா நாளைக்கு ஆயுங்க."

அம்மாவும் சோற்றுப் பீங்கானுடன் வெளிப்பக்கமாக அமர்ந்தபடி சொன்னாள்.

"எனக்கந்த உச்சிக் கொப்புக்கு ஏறமுடியாது. இக்காஹேன பையனுக்குச் சொல்லி ஆயலாம் தானே. தம்பி சிரிநாத ஸேரின் வேலை இல்லாமல் போன பிறகு நீ அந்தப் பக்கம் போனாயா?"

தோலுரித்த பலா வித்தைச் சோற்றுடன் பிசைந்தபடி அப்பா கேட்டார்.

"போன நான் தானே. ஒரு நாள் கூட ஸேர் வீட்டிலிருக்க வில்லை."

"மாலையில் அந்தப் பக்கம் போக வேணும்." அப்பா சொன்னார்.

சாப்பிட்டுக் கொண்டே தண்ணீர்க் கோப்பையைக் காலி செய்தார். தொண்டைக்குள்ளே 'குடுஸ் குடுஸ்'ஸென்று தண்ணீர் இறங்கும் சத்தம் வீட்டினுள்ளிருந்த கமலுக்குக் கேட்டது.

கமல் புத்தகத்தோடு கட்டிலில் சாய்ந்தான். காலையில் விட்ட இடத்திலிருந்து வாசிப்பைத் தொடர்ந்தான்.

மறைந்து போன எழுத்துக்குள்ளால் அவனது ஆசிரியரின் முகம் தெரிந்தது.

பத்தாம் தரம் மாணவனான கமல் ஐந்து வருடங்களாக சிரிநாத ஸேரிடம் கல்வி கற்றான். அவர் பாடசாலைக்கு வருவதற்கு முதல் நாள் கமலுக்கு நல்ல ஞாபகம்.

❄ ❄ ❄ ❄ ❄ ❄

அன்று அதிபர் கொடுத்த பிரம்படிக்கு நிமல் மேலே போய்க் கீழே வந்து விழுந்தான். கமலுக்கும் பிரபாத்துக்கும் என்ன செய்வ தென்று தெரியாமல் போய் விட்டது. ஓடக் கூட முடியவில்லை.

வாழை மரங்களுக்கிடையால் சத்தமில்லாது வந்த அதிபரை அவர்கள் கண்டு கொள்ளவில்லை.

"இங்க என்னடா செய்றீங்கள்?" அதிபர் கமலின் காதுச்சோணையைப் பிடித்துக் கேட்டார்.

"எங்களுக்கொரு பாடமுமில்லை. சும்மாதான் இருக்கிறம்." பிரபாத் சொன்னான்.

அவரது முகம் சிவந்து போனது.

"சும்மாவா இருக்கிறியள். வாங்கடா வேலை தாரன்."

அவர் மூவரையும் அழைத்துக் கொண்டு சென்றார்.

மண்வெட்டி, அல்வாங்கு, வாளி மற்றும் உடைந்த மேசை, கதிரைகளால் அந்த அறை நிரம்பி வழிந்தது.

"மூன்று வாளி எடுங்கடா..... கிணற்றால் தண்ணீர் அள்ளி வாழை மரங்களுக்கு ஊற்றுங்கோ..... உங்களுக்கு வேலையில்லை என்றெல்லோ சொன்னியள்......"

அவர்கள் வாளிகளுடன் கிணற்றடிக்குச் சென்றனர். மீண்டும் திரும்பிப் பார்த்த நிமலுக்கு, அதிபர் பார்த்தபடியிருப்பது தெரிந்தது. அவர்கள் அவசரமாகச் செயற்பட்டனர். கிணறு கால் மைலுக்கு மேலும், அதில் தண்ணீர் முப்பது அடிக்குக் கீழும் காணப்பட்டது.

'கிரிகிரிஸ்' என்று கம்பி சப்தமிட அவர்கள் மூன்று வாளிகளையும் நிறைத்தனர்.

"பாடசாலைக்கு வராவிட்டால் நல்லதென்று நினைக்கிறன்...." நிமல் சொன்னான்.

அடுத்த இருவரும் அமைதியாக நீர்வாளியைத் தூக்கினர்.

அன்று முழுநாளும் அவர்கள் வகுப்பில் செய்ததெல்லாம பார்த்தெழுதுவது மாத்திரம் தான்.

"பாடப் புத்தகத்தில் மூன்றாம் பாடத்தை முழுக்கப் பார்த்தெழுதுங்கடா."

வகுப்புக்கு வந்த ஆசிரியர் அவர்களது வரவைப் பதிவு செய்தபின் கூறினார்.

“ஸேர் ரெண்டு நாட்களா எழுதியதொன்றும் இன்றும் பார்க் கேல்ல” ஒரு மாணவன் புத்தகத்தைக் காட்டிச் சொன்னான்.

“எல்லாம் ஒன்றாப் பாப்பன். இன்னைக்கும் எழுது. எழுத எழுத எழுத்து வடிவாகும்.” என்றவாறு அவர் அடுத்த வகுப்புக்குச் சென்றார்.

தரம் ஐந்தில் கற்கும் அவர்களுக்கு ஜனவரி முதல் ஆசிரியர் இல்லை. வரவுப் பதிவு செய்யவரும் ஆசிரியர் “ஏதாவது படியுங் கள்” என்பார் அல்லது “பார்த்தெழுதுங்கள்” என்பார்.

பல மாணவர்கள் பாடசாலைக்கு வராமல் வீட்டில் நின்று விட்ட னர். ஒரு மாணவர் நகர பேக்கரி ஒன்றுக்கு வேலை பழகப போய் விட்டான்.

தோட்ட வேலை தொடர்பாக நேர சூசியில் ஒரு நாளைக்கு ஒரு பாட வேளை- அதாவது நாற்பது நிமிடமே ஒதுக்கப்பட்டிருந்தது. இருந்தாலும் தோட்ட வேலைக்கென்று இரண்டு மணித்தியாலத்திற் குக் குறைவாக எடுத்தநாள் மிக அபூர்வம்.

ஐந்து ஏக்கர் கொண்ட பாடசாலைத் தோட்டத்தில் அரைவாசி வாழைத் தோட்டமாகவே காட்சி தந்தது. ஒவ்வொரு ஞாயிற்றுக் கிழமையும், ஒரு வண்டி நிறைய வாழைக்குலைகளை சந்தைக்கு அனுப்புவார் அதிபர்

“பிழையில்லை. அதிபரின் பொக்கட் நிறைய நூறு ரூபாய்த் தாள்கள். கோழிக் கூட்டுக் குலையொன்று இப்போ முன்னூறு ரூபா.......”

அப்பா ஒரு நாள் சந்தைக்குப் போய் வந்து சொன்னது கமலுக்கு இப்பொழுதும் ஞாபகம்.

தண்ணீர் இழுக்கும் போது நிமல் முதுகைத் தடவிப் பார்த்தான். பிரம்படி ஆழாகப் பதிந்திருந்தது. கமலின் காதும் சிவந்திருந்தது.

தண்ணீர் அள்ளித் துன்பப்படும் மூவரையும் பார்த்துச் சகமாணவர்கள் கூச்சலிட்டனர்.

“இவங்களுக்கு நல்ல தண்டனை...... எப்பவும் மூன்று பேரும் வெளியே தான்.....”

பிரபாத் கோபத்தோடு கொதித்தான்.

"உங்களுக்கும் கிடைக்கும்."

அப்பொழுது அதிபர் வந்தார்.

"என்னடா சத்தம் போடுறியள்? எல்லோரும் வாங்கடா வெளியே....... வாளிய எடுத்துக் கொண்டு போங்கடா....."

அடக்கி வைத்திருந்த சிரிப்பு நிமலின் வாயைப் பிளந்து கொண்டு வெளிப் பாய்ந்தது.

"ஆ...... நிமல்...... ரெண்டு முறைதான் தண்ணீர் கொண்டு வந்தியள்....... கிணற்றுப் பக்கம் என்ன செய்தனீங்கள்?"

எவரும் பதில் சொல்லவில்லை.

"காற்றுக்கு வாழைமரம் விழுந்திருக்கு. அதெல்லாம் உங்களுக்குத் தெரியாதென்ன?"

கமல், நிமல், பிரபாத் மூவரும் மீண்டும் சென்றனர்.

அன்றைய தினம் முழுவதும் தண்ணீர் சுமப்பதிலேயே கழிந்தது.

செழிப்பாக வளர்ந்த வாழை மரங்களிடையே நிற்பதே சுகம் தான். அங்கு நிலவும் குளிர்மை மனதுக்கு இதமானது. இருந்தும் அதிக நேரம் அங்கே தங்கியிருக்க முடியாதல்லவா? முற்றிய கோழிக் கூட்டுக் குலைகளைக் கணக்கிட்டு "முப்பதிரண்டு" என்றான் பிரபாத்.

"அதன் பெறுமதி?" நிமல் கேட்டான்.

"இருநூறாக விற்றால் ஆறாயிரத்தி நானூறு ரூபா." கணக்குப் போட்டான்.

வெற்று வாளியொன்றுடன் சில பிள்ளைகள் வகுப்புக்கு ஓடிச் செல்வது தெரிந்தது. அவர்களின் பின்னால் தலையைக் கைகளால் அழுத்தியபடி இன்னொரு பிள்ளை. அவள் அழுது கொண்டிருந்தாள்.

"பார்த்தீங்களா? இன்றும் ஒரு மண்டை பிளந்திருக்கு......" பிரபாத் வேதனைப்பட்டான்.

"என்ன நடந்தது?" கமல் அவர்களிடம் கேட்டான்.

"அவன் பாலயா வாளியால் தலைக்கடித்தான்." ஒருவன் தெளிவுபடுத்தினான்.

அவர்களின் வகுப்புக்கும் ஆசிரியர் இல்லை. பாடசாலையில் பன்னிரண்டு வகுப்புக்கள். ஆனால், ஆசிரியர் எட்டுப்பேர் மாத்திரமே.

"இந்த வேலையென்றால் எங்களுக்கு வீட்டிலும் செய்து கொள்ள லாம் தானே." ஒருநாள் ஆசிரியர் சாணம் சேர்க்கச் சொன்ன போது, இப்படி ஒரு மாணவன் கூறினான்.

"ஆ.... அப்ப வீட்டில நில்லன்" ஆசிரியரின் பதில் இதுதான்.

"சரி நான் வீட்ட போறன்....."

சாணக் கூடையை ஆசிரியரின் காலடியில் வைத்துவிட்டு பாடசாலையிலிருந்து வெளிச் சென்ற அவனுக்கு மீண்டும் வரும் நோக்கம் இருக்கவில்லை.

வியர்வை குளித்தபடி நீர் இறைத்துக் கொண்டிருந்த மாணவர்க ளுக்கு நேரசூசியின் படி கடைசி மணி ஒலிப்பது கேட்டது.

அவர்கள் வாளிகளோடு சாமான் அறைக்கு ஓடிச் சென்றார்கள்.

அதிபரும் கூட அந்த இடத்துக்கு வந்தார்.

"பிரபாத் இங்க வாரும்...."

அவனோடு கூடவே கமலும் நிமலும் சென்றனர்.

"வகுப்பில் பாடம் நடப்பதில்லையென்று நீ தானே சொன்னாய்?"

பிரபாத் வளைந்து நெளிந்தான்.

"நாளைக்குப் புதிய ஸேர் ஒருவர் வருகிறார். அவரை நான் ஐந்தாம் வகுப்புக்குப் போடுறன்...."

இளசுகளின் முகங்களிலே பரவிய ஒளி அதிபரின் கண்களுக்குத் தெரிந்தது.

"ஆசிரியர் கேட்டுக் கேட்டு நானும் ஒ.்.பீஸுக்கு எழுதிறன். அவங்கள் அனுப்புறாங்களில்லை. அதுக்கு நான் என்ன செய்யிறது? சரி நாளையிலிருந்து உங்களுக்கு பிரச்சினையில்லை. ஆனாலும், இன்னும் மூன்று வகுப்புகளுக்கு ஆசிரியர் வேணும்....."

நிமலுக்குப் பிரம்படி மறந்து போய் விட்டது.

அடுத்த நாள் காலை முதல் ஐந்தாம் வகுப்பு மாணவர்களின் கண்கள் பிரதான பாதையிலேயே லயித்திருந்தது.

அன்று வரவுப் பதிவு செய்ய வந்த ஆசிரியர் மாணவர்களைத் திட்டத் தவறவில்லை.

“நாற்பது பேரில் பதினாறு பேர் வரவில்லை. இவங்களுக்கு......” இந்த வசையை நாளாந்தம் வருகை தரும் பிள்ளைகளே கேட்டுத் தொலைத்தார்கள்.

“வந்து தான் என்ன செய்ய? தோட்ட வேலை மாத்திரம் தானே...?” ஒருவன் கமலின் காதுக்குள் முணுமுணுத்தான்.

நிமல் பாதையைப் பார்த்துக் கொண்டிருந்தான். பிரபாத்தும் இடைக்கிடை எழுந்து தலையை நீட்டினான்.

விளையாட்டு மைதானம் தவிர்ந்த ஏனைய இடங்களிலும் நல்ல பயிர்ச்செய்கை மேற்கொள்ளப்பட்டிருந்தது. வாழை போன்றே மரக் கறிகளும் நடப்பட்டிருந்தன. பாடசாலைத் தோட்ட அந்தத்தில காணப் படும் தென்னை மரங்களும் பலா மரமும் பாடசாலை வரலாற்றின் ஒரு யுகத்தைப் பேசுகின்றன. அவ்வாறான பலாமரங்களால் ஒரு காலத்தில் தோட்டம் நிறைந்திருந்தது. விளையாட்டு மைதானம் மற்றும் கட்டிட நிர்மாணமென்று, அதிபர்மார் அவற்றை தறித்து பலகை ஆலைகளுக்கனுப்பி தோட்டத்தை வெளிச்சமாக்கினர்.

“செழிப்பான பலா மரங்கள் நூற்றுக்கு மேல் அந்தக் காணியில் கிடந்தன. அபேவர்த்தன அதிபரின் காலத்தில்தான் அதிகமானவை வெட்டப்பட்டன. அவர் மாடிக் கட்டிடம் எழுப்பியது அந்தக் காசால் தான்.”

அப்பா சொன்ன கதை கமலுக்கு ஞாபகம்.

பாடசாலைக் கட்டிடத்திற்கு அருகாமையில் டேர்பன்டைன் மற்றும் இபில்இபில் மரங்கள் பல நின்றன. பயிர் நடுகை விழாவின் போது அவை ஊன்றப்பட்டன. உயரமாக வளரும் டேர்பன்டைன் மரத்திற்குக் கீழ் வேறெந்த மரமும் வளர்வதில்லை. அதன் இலை விழுந்த நிலம் கூட வெண்மையாகி விடும்.

இரண்டாம் வகுப்புப் பிள்ளைகள் மைதானத்தில் கூத்தாடி புழுதி கிளப்பிக் கொண்டிருந்தனர். காற்று அந்தப் புழுதியை பாடசாலைக்குள்ளும் கொண்டு சென்றது. கூரைத் தகடுகளையும் உசுப்பிச் சென்ற காற்று இற்றுப்போன தகரத் துண்டுகளை நிமலின் முன்னே விழுத்தியது.

"மழை பெய்தால் கதை சரி..... கூரை.... இற்றுப் போய்......" நிமல் புறுபுறுத்தான்.

"ஆமாம் வானம் தெரியிது." கமல் வலியுறுத்தினான்.

புத்தகப் பையிலிருந்து கவணை வெளியெடுத்த பிரபாத், கூரைத் துளைக் கூடாகக் கல்லொன்றை இழுத்தெறிந்தான். அது மேலே சென்று மீண்டும் 'டக்'கென்று தகரத்தில் விழுந்து உருண்டது.

"யாரையும் தலையில் விழுந்திருந்தால்...." கமல் கடுங்கோபத்தோடு பிரபாத்தைப் பார்த்தான்.

பிரபாத் மெல்லிய சிரிப்புதிர்த்து "அந்த ஓட்டையைப் பார்த்ததும் எனக்கு அப்படியொரு எண்ணம் வந்தது." என்றான்.

"இங்கே தா அதை. என்னாலும் முடியுமான்று பார்க்கிறன்...." விமலசேன கெட்டப்பொல்லை எடுத்தான்.

"விமல...... அதை எறிந்து விடு. அதிபர் கண்டால் அடி விழும். யாருக்காவது காயமேற்பட்டால் இந்த இடத்தில் இருக்கக் கிடைக் காது. இன்று புதிய ஆசிரியர் வரும் நாள். பேசாமல் இரு......" கமல் விமலசேனவை எச்சரித்தான்.

"பயந்தாங்கொள்ளி....." என்றவாறு விமலசேன அதனைப் பிரபாத் தின் பையில் போட்டான்.

ஆங்கில ஆசிரியை ரஞ்சினி மிஸ் வகுப்புக்கு வந்தார். ஒரு மாதகாலமாக அவர் வகுப்புக்கு வரவில்லை. நேரகாலத்தோடு வீடு செல்லப் பழகி விட்ட அவர், எப்பொழுதுமே கட்டிலோடிருக்கும் அப்பாவைப் பற்றியே கதைப்பார்.

"அப்பாவுக்குப் பக்கவாதம் பிடித்ததிலிருந்து எனக்கு நிம்மதியே இல்லை. 'ரஞ்சனி ரஞ்சனி' யென்று என்னையே கூப்பிடுவார்."

ரஞ்சினி ஆசிரியைக்கு எந்த நேரத்திலும் வெளியே செல்ல அனுமதியிருந்தது.

ஊர் நிலச்சுவாந்தர் ஒருவரின் மனைவியான அவருக்கு அதிபர் தனிச் சலுகை வழங்குவது வெகு பிரசித்தம். பாடசாலைக்கு வரும் எல்லா அதிபர்களோடும் அவளுக்கு உறவு இருந்தது.

"உங்களுக்குப் புதிய ஸேர் ஒருவர் வாராராம் என்னடா?" மிஸ் கேட்டார்.

"புதிய ஸேருடனும் உறவு இருக்குமோ தெரியாது." கமல் பிரபாத்தின் காதுக்குள் குசுகுசுத்தான்.

"அப்படி இல்லாமல் இருந்தால் நல்லது."

"எனக்கென்னா இப்படியே இருக்கத்தான் விருப்பம். ஸேர்மார் வந்தால் தொல்லை." என்றபடி விக்டர் கொட்டாவி விட்டான்.

பிள்ளைகள் சிரித்தார்கள்.

"வீட்டிலிருந்தால் பலகை இழுக்கணும்..... பலகைத் தூள் சுமக்க ணும்... அதிலிருந்து தப்பிக் கொள்ளத்தான் பாடசாலைக்கு வாராய் என்ன?" நிமல் கேட்டான்.

விக்டர் மௌனம் சாதித்தான்.

அவனது தகப்பன் ஒரு தச்சன். மாலை வேளையில் விக்டர் தச்சுக் கூடத்தில் வேலை செய்வான்.

"அதோ அதோ ஸேர் வாரார். புதிய ஸேர் தான்." மதிலோரமாக வாங்கில் அமர்ந்திருந்த சுஜாதா சத்தமிட்டாள்.

"எங்கே...... எங்கே?" என்றவாறு பிள்ளைகள் கதவருகே ஓடினார் கள். கமலும் ஓடினான்.

'வெள்ளை சேட், கறுப்புக் காற்சட்டை, சப்பாத்து, பக்கமாக வாரிய முடி, உடுப்புப் பை....... ஆமாம் புதிய ஆசிரியர் பாடசாலைத் தோட்டத்திற்குள் புகுந்து விட்டார். நெற்றியில் வியர்வைத் துளிகள். அதோ ஸேர் எங்களைக் கண்டு விட்டார். மெல்லிய சிரிப்பு. அவர் எங்கள் ஆசிரியரென்று எப்படிச் சொல்ல முடியும்! எங்களது ஆசிரி யரேதான். மிக வேகமான நடை, ஏனைய ஆசிரியர்களைப போல் மேல் மீசை இல்லை.' கமலின் மனம் கூத்தாடியது.

அடுத்த வகுப்பாசிரியர் சத்தமிட்டார்.

"பிள்ளைகள் என்ன இது...... எல்லாரும் இருங்கோ-"

கமல் அந்த ஆசிரியரைப் பார்த்தான். புதிதாகப் பாடசாலைக்கு யாராவது வந்தால் ஆசிரியர்கள் குழப்பமடைவார்கள். பிள்ளைகள் வாங்குகளில் அமர்ந்து கொண்டனர்.

புதிய ஸேர் அதிபரின் அறைக்குச் சென்றார்.

"உண்மையில் அது எங்களுக்கு வந்துள்ள ஆசிரியரா?"

சுஜாதாவுக்குப் பிரச்சனை.

"ஆம்.... எங்களுடைய ஸேர்தான். எங்களோடு சிரித்தார்தானே...." விமலா சொன்னாள்.

பிள்ளைகள் கொல்லென்று சிரித்தனர்.

"நல்ல பகிடிதான். சிரித்ததற்காக எப்படி எங்கள் ஸேராக முடியும்? பூச்சி மருந்து தருவதற்கு வந்திருக்க முடியாதா?" இன்னொரு மாணவன் கேட்டான்.

"அது எங்கள் ஸேர் தான். எங்களுப் புதிய ஸேர் வருவதாக அதிபர் சொன்னாரல்லவா?"

"சரி பார்ப்போம். எங்கட ஸேரென்றால் எங்களிடம் வருவார் தானே?"

பிள்ளைகள் எழும்பவில்லை. சண்டை சச்சரவுகளில் ஈடுபடவில்லை.

அதிபரின் மொட்டைத் தலை மதிலுக்கு மேலால் பளபளத்தது. அவருக்குப் பின்னால் அந்தச் சிரித்த முகம்....:.!

"அதோ ஸேர் வாரார்"

எழுந்த விமலா மீண்டும் அமர்ந்து கொண்டாள். அடுத்த வகுப்பில் கூட அமைதி ஆட்சி செய்தது. ஆசிரியர்கள் பாடத்தை நிறுத்தி விட்டு பார்த்திருந்தனர். அதிபர் அவருடன் வகுப்புக்கு வந்தார். பிள்ளைகள் எழுந்து "வணக்கம்" சொன்னார்கள். அவர் புதுமுகத்தை அறிமுகம் செய்தார்.

“இவர் தான் நான் சொன்ன ஸேர். இந்தப் பிள்ளைகள் தை மாதம் முதல் சும்மாவே இருந்தார்கள். நான் காரியாலயத்திற் கெழுதி மிகவும் சிரமப்பட்டு உங்களை வரவழைத்துள்ளேன். இனிமேல் பிள்ளைகள் நன்றாகப் படிக்க முடியும்......”

முன்பு காணப்படாத கருணையும் சிரிப்பும் அதிபரின் முகத்திலே வெளிப்பட்டது. அவர் நிமலின் பக்கமாகத் திரும்பினார். “வகுப்பில் பாடம் நடைபெறுவதில்லையென்று நிமல் அல்லவா சொன்னான். இப்பொழுது ஸேர் வந்து விட்டார். இனி வேலைதான்.....”

அதிபர் செல்ல முற்பட்ட போது மாணவர்கள் எழுந்து வணக்கம் தெரிவித்தனர். புதிய ஆசிரியர் மேசைக்கு முன்னால் வந்து “இப்பொழுது நாங்கள் எங்களை அறிமுகம் செய்து கொள்வோம்” என்றார்.

“என்னுடைய பெயர் சிறிநாத. உங்கள் பெயர்களை அறிந்து கொள்ள விரும்புறன்.”

ஒவ்வொருவரும் எழுந்து தங்கள் பெயரைச் சொல்லிவிட்டு அமர்ந்து கொண்டனர்.

“இப்பொழுது நாங்கள் பாடத்தை ஆரம்பிப்போம். நான்கு மாத மாக ஒன்றும் படிக்கவில்லையென்று அதிபர் சொன்னார் அல்லவா? அதற்குப் பரவாயில்லை. நாங்கள் விரைவாக நான்கு மாதப் பாடங் களையும் படித்துக் கொள்வோம். கஷ்டப்பட வேண்டியதில்லை. ஆனால், தவறாமல் பாடசாலைக்கு வரவேண்டும். வீட்டில் வேலை யுண்டு என்று சொல்லக் கூடாது.”

அவருடைய பேச்சு பிஞ்சு உள்ளங்களிலே பெரும் எதிர்பார்ப் பைத் தூண்டியது. பெரும்பாலோரின் முகங்கள் மலர்ந்திருப்பதைக் கமல் கவனித்தான்.

‘நீண்ட கோடைக்குப் பிறகு வந்த மழை போல... மரம் செடிகள் அந்த மழையில் தோய்ந்து புத்தம் புதிதாய்.... இதமும் சுகமும் நிறைந்த காற்று உடலை ஸ்பரிசிப்பது போல்..... மனதின் மகிழ்ச்சி உடலெங்கும் பரவுவது போல்...... இருந்தது. அதோ அந்தப் புழு திக் காற்று புதிய ஸேரின் முகத்திலும் அப்பி....... கண்கள் குழி

வாகி..... மீண்டும் அதே புன்னகை. ஸேர் எங்களோடு நீண்டகாலம் இருக்க வேண்டும்.' கமலின் மனம் பக்தியால் நிரம்பியது.

அன்று இடைவேளையின் போது, விமலசேன சொன்ன கதை யால் கமல், நிமலுக்கு மாத்திரமல்ல, பிரபாத்துக்குக் கூடக் கோபம் வந்து விட்டது.

“அவர் சொன்னதற்காக எங்களால் ஒவ்வொரு நாளும் பாட சாலைக்கு வர முடியுமே? வயல் வேலை காலத்தில் உங்களாலும் வரமுடியாது தானே? ஸேர் சொல்லுவார் தான்.....”

புதிய ஆசிரியரைப் பற்றி விருப்பமற்ற உணர்வு அவனது வார்த்தைகளிலே வெளிப்பட்டது.

“ஏன் நீ அப்படிச் சொல்றாய்?” பிரபாத்தின் கேள்வி.

விமலசேனவின் முகத்திலிருந்து வெளிப்பட்டது கவலையா சோகமாவென்று விளங்கவில்லை. அவன் பதிலும் சொல்லவில்லை.

நிமல் பிரபாத்தின் கையைப் பிடித்து இழுத்துக் கொண்டு கமலு டன் பலாமரத்தடிக்குச் சென்றான்.

“விமலெ இன்னம் சில நாட்களுக்குத்தான் பாடசாலைக்கு வரு வான். அவனது அப்பா செத்த பிறகு சும்மா வந்து போய்க் கொண்டி ருந்தான். சீக்கிரமாக வீட்டில் நின்றுவிடுவான்.” நிமல் கூறினான்.

“அவன் ஸேரைப் பற்றி அப்படிச் சொல்லியிருக்கக் கூடாது.” இது பிரபாத்.

“ஸேர் வந்ததுக்காக நாங்கள் சந்தோசப்படுறோம். எங்களுக்கு அம்மா அப்பா உண்டு. அவங்க எப்படியாவது எங்களைப் பாட சாலைக்கு அனுப்புவாங்கள். ஆனால், விமலேய்க்கு அப்படி இல் லையே. அதனால்தான், ஸேர் வந்ததுக்காக அவன் சந்தோஷப்பட வில்லை.” கமல் தெளிவு படுத்தினான்.

மூவருக்கும் கவலை மேலிட்டது.

❄ ❄ ❄ ❄ ❄ ❄

கமல் படித்துக் கொண்டிருந்த புத்தகம் அவனது மார்பிலே விழுந்து கிடந்தது. அம்மா அவனருகே வந்து கூர்ந்து பார்த்தாள்.

“நீ நித்திரை என்றல்லவா நினைத்தன். நீ இன்னும் சிரிநாத ஸேரைப் பற்றி யோசிக்கிறீயா? யோசித்து வேலையில்லை. பரீட்சைக்குப் படியன்....”

கமல் கட்டிலிலிருந்து இறங்கினான்.

“ஸேர் பாடசாலைக்கு வந்த முதல்நாள் எனக்கு ஞாபகம் வந்தது. ஐந்து வருடங்களுக்கு முன்பு ஸேர் வந்திராவிட்டால் நாங்களும் வீட்டில்தான்.....”

அவன் புத்தகத்தை மேசையில் வைத்தான்.

அப்பா குறட்டை விடும் ஒலி கேட்டது. பகல் சாப்பாட்டின் பின் வெளிச்சாலைக் கட்டிலில் சாய்ந்து, சிறிது நேரத்தில் தூங்கிப் போய்..... குறட்டை ஆரம்பித்து விடும். சிரமப்பட்டு வேலை செய்யும் காலத்திலென்றால் முனகலும் சேர்ந்தெழும்.



# 3

கமல் மீண்டும் புத்தகம் படிக்க ஆரம்பித்தான்.

'அநுராதபுரம் ராஜதானியின் வீழ்ச்சிக்குக் காரணமென்ன?'

அவன் காரணங்களை ஒன்றன்பின் ஒன்றாக வரிசைப்படுத்தித் தயாரித்த சுருக்கக் குறிப்பைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். சரிந்து விழுந்த அநுராதபுர வாவி மற்றும் கட்டிடங்களுக்கூடாக அவனுக்கு மீண்டும் சந்தையில் அரிசி விற்றுக் கொண்டிருந்த சிரிநாத ஸேரின் முகம் தெரிந்தது. சோர்ந்து போயிருந்தாலும் கூட எங்களைக் காணும் போது மீண்டும் அந்தச் சிரிப்பு மலர்ந்து விடுவதை அவன் எண்ணிப் பார்த்தான்.

பாடசாலைக்கு வருகை தந்து ஒருவாரகாலமாக ஆசிரிய விடுதி அறையிலேயே அவர் தங்கியிருந்தார்.

பின்னர் ஒரு மைலுக்கு அப்பால் அமைந்திருந்த வீடொன்று அவருக்கு வாய்த்தது. மனைவி மக்களோடு அவர் அங்கே குடியமர்ந்தார். அதற்கு முன்பு பத்தாம் வகுப்பு மாணவர்கள் சென்று வீட்டுச் சுவர், நிலங்களைக் கழுவி துப்புரவு செய்தனர். கமல், பிரபாத மற்றும் நிமலும் சென்று முற்றம் செதுக்கினர்.

கமலின் அம்மா கொண்டுவந்த பாண், தேநீர் போன்றவற்றைப் பிள்ளைகளுக்குச் சிரிநாத ஸேர் பகிர்ந்தார்.

அடுத்த நாள் பாடசாலையில் ஆசிரியர் அறையில் வைத்து ரஞ்சனி ஆசிரியை ஸேருக்குச் சொன்ன கதையைக் கமலுக்கும் கேட்க முடிந்தது.

"மிஸ்டர் சிரிநாதவிற்குச் சொல்லத்தான் இருந்தன். இந்த ஊர்ப் பிள்ளைகளுக்கு அளவுக்கதிகம் இடம் கொடுக்க வேண்டாம். நேற்று நீங்கள் பிள்ளைகளுக்கு தேநீர்- பாண் கொடுத்து உபசரித்ததாகக் கேள்விப்பட்டன்."

சிரிநாத ஸேர் கொஞ்சம் சிரித்தார்.

மிஸ் தொடர்ந்து பேசினார். வார்த்தைகளில் கோபம் கலந்திருந்தது.

"இது சிரிப்பதற்குள்ள விஷயமல்ல. என்னிடம் சொல்லியிருந்தால் பக்கத்தில் எங்கட வீடொன்றே தேடித் தந்திருக்கலாம். ஆனா எங்களிடம் சொல்லவே இல்லையே. அதுமட்டுமல்ல, எங்கட வயலில் கூலி வேலை செய்யும் பெண்ணுக்குச் சொல்லித் தேநீர் கொண்டு வந்திருக்கிறியள். இதெல்லாம் சுய கௌரவத்தைப் பாதிக்கச் செய்யும் விஷயங்கள்."

"நான் கொண்டு வரச் சொல்லவேயில்லை."

"எங்கட அவர் சொன்னவர். அவளை வழியில் கண்ட போது, புதிய ஸேருக்குத் தேநீரும் பாணும் கொண்டு போறதாய்ச் சொன்னவளாம். அவர் வந்து என்னிடம் கூறியபோது எனக்கே வெட்கமாயிருந்தது."

"தேநீர் கொண்டு வந்தது எனது வகுப்புக் கமலுடைய அம்மா. தானாக விரும்பிக் கொண்டு வந்திருந்தா. இதிலென்ன தவறு? சுய கௌரவத்துக்கு என்ன பாதிப்பு? எனக்கொன்றும் தெரியவில்லை."

"மிஸ்டர் சிரிநாதவிற்கு பிறகு தெரியவரும். இந்த ஊரில கௌரவமான குடும்பங்கள் நாலைந்துதான். அந்தக் குடும்பங்களுக்குச் சொந்தமான வயல் காணிகளில் வேலை செய்பவர்கள் தான் மற்றவர்கள். அவங்கட பிள்ளைகள் தான் இந்தப் பாடசாலையில படிக்கிறாங்கள். கமலும் எங்கள் வயல்காரனின் மகன் தான். இவர்களை நெருக்கமாக்கிக் கொள்ள வேண்டாமென்றுதான் சொல்றன்."

கதிரைச் சத்தம் கேட்டது. சிரிநாத ஸேர் வெளியே வந்தார். கமல் வகுப்புக்கு ஓடிச் சென்றான்.

சிரிநாத ஸேர் அவசரமாக வந்து தனது ஆசனத்தில் அமர்ந்தார். அவரது கண்கள் மாணவர் முகங்களினூடே பயணித்தது.

'ரஞ்சனி மிஸ்ஸினதும் அவங்க உறவினர்களதும் காணிகளிலும் வயல்களிலும் வேலை செய்பவர்களின் பிள்ளைகள் இவங்கள்.....' என்று ஸேர் நினைக்கக் கூடுமென கமல் எண்ணினான்.

சிரிநாத ஸேர் எழுந்தார். 'எனது தகப்பனின் வாழ்க்கை' என்று கரும்பலகையில் எழுதி விட்டு மாணவர்களைப் பார்த்தார்.

"எனது தந்தையின் வாழ்க்கை...... இதுதான் இன்றைய கட்டுரையின் தலைப்பு. அப்பாவின் வாழ்க்கையைப் பற்றி நன்றாக யோசித்து, அவ்ரோடு கலந்துரையாடி எல்லோரும் இதனை எழுத வேண்டும். நல்ல கட்டுரையை நாம் விரைவில் ஆரம்பிக்கவுள்ள சுவர்ப் பத்திரிகையில் வெளியிடுவோம். பத்தாம் வகுப்பு மாணவர்கள் அதனைத் தயாரிக்கிறார்கள். மற்ற வகுப்புப் பிள்ளைகளுக்கு அதில் எழுத முடியும்....

"இந்தத் தலைப்பிலே எழுதப் போகும் உங்களுக்கு நான் எனது தகப்பனைப் பற்றி ஞாபகப்படுத்துகிறேன்....

"அவர் தலைமுடி கட்டுகின்ற மெல்லிய தோற்றமுள்ள ஏழை விவசாயி ஒருவர். தங்களது சொந்த இடத்தில் ஒழுங்கு படுத்திக் கொண்ட சிறிய வீட்டில் வாழ்ந்து வந்தார். விவசாயியாக இருந்தாலும், விவசாயம் செய்வதற்கு எனது தந்தைக்கு வயல் இருக்கவில்லை. அடுத்தவர்களின் வயலிலேயே வேலை செய்தார். வயல் உரிமையாளர் விதை நெல், களை கொல்லி, பசளை, உழவுயந்திரம் என்பன கொடுத்தார். தகப்பன் அவற்றைப் பெற்று விவசாயம் செய்தார். முழு நாளையும் வயலில் செலவிட்டார். நெல் அறுவடையின் போது அம்மாவும் செல்வாள். அறுவடை செய்து சூடு மிதித்து, நெல் அளந்து பங்கு போடும் வரை நானும் உதவி செய்வேன். ஆசிரியத் தொழிலுக்கு நான் வரும் வரை அப்பாவுடன் விவசாயம் செய்தேன். இறுதி வேளையில் வயல் சொந்தக்காரர் சாக்குக் கட்டுடனும் வண்டியோடும் வந்து நெல் அளப்பார். வயற்காரரின் நான்கில் ஒரு பகுதியை முதலில் எடுத்துக் கொள்வார். அதன் பின்னர் களை கொல்லி, பசளை, விதை நெல் உழவயந்திரக் கூலி முதலான கணக்குப் பார்க்கப்படும். வட்டியுடன் சேர்த்து அதற்கான நெல்லும் எடுக்கப்படும். எஞ்சிய சிறதளவே அப்பாவுக்குக் கிடைக்கும். எனது ஞாபகத்தின் படி நெல்லின் பத்திலொன்று

கூடக் கிடைப்பதில்லை. மாதம் முடிவதற்கிடையில் மீண்டும் கடனாளியாவார். கடனாளியான வாழ்க்கையே அவர் வாழ்ந்தார். அதற்கிடையில் எங்களது சிறிய காணித் துண்டில் அம்மா மரவெள்ளி, வற்றாளை, மரக்கறி போன்றவற்றை அம்மா பயிரிடுவார். உணவு வேளையைச் சமாளிக்க அது உதவியது. வயல் வேலை இல்லாத காலத்தில் வேறு இடங்களுக்குக் கூலி வேலைக்கும் செல்வார். மிகவும் சிரமப்பட்டே என்னைப் படிக்க வைத்தார். எனக்கு நியமனம் கிடைத்து அதிக நாள் செல்லவில்லை. வயலுக்க நீர் திருப்பச். சென்று அணைக் கட்டிலிருந்து விழுந்து இறந்து போனார். தந்தைக்கு உணவு, உடை கொடுத்து கவனிக்க எனக்கு வாய்க்கவில்லை. என் மனதிலுள்ள மிகப் பெரும் சோகமும் அதுதான்.....

"எனது தந்தையைப் பற்றிக் கட்டுரை எழுதும் போது இந்த விடயங்களை என்னால் மறக்க முடியவில்லை. சில வேளை எனது தந்தையின் வாழ்க்கைச் சரிதம் உங்கள் தந்தையரின் வாழ்க்கைக்கு நெருக்கமானதாக இருக்கலாம். மூன்று நாள் அவகாசம் தருகிறேன். வீட்டில் எழுதுங்கள்."

சிரிநாத ஸேரின் விபரிப்பின் பின் விமலசேன எழுந்தான். அவன் எந்தவொரு ஆசிரியருடனும் கதைக்காது ஊமை போல் இருந்து பழகியவன்.

அவன் என்னதான் சொல்லப் போகிறான் என்று அறிந்து கொள்வதற்கு முழு வகுப்பும் ஆவல் கொண்டது.

"ஸேர், எனக்கிருந்தது போல் ஒரு தகப்பன் தான் உங்களுக்கும் இருந்திருக்கார். இப்பொழுது உங்கள் தகப்பனும் இல்லை. எனது தகப்பனும் இல்லை."

அதன் பின் சிரிநாத ஸேரின் முகத்திலே கவலை தோய்ந்த போதும், விமலசேனவின் முகத்தில் மகிழ்ச்சியே படர்ந்தது. அவன் ஆசிரியரோடு ஐக்கியமாகி விட்டமை அந்த மகிழ்வுக்குக் காரணமா?

"விமலசேனாவைப் பற்றி நான் அறிந்திருக்கவில்லையே......" சோகராகம் சிரிநாத ஸேரின் குரலில் ஒலித்தது.

"ஆனாலும், நீங்கள் படித்துத் தொழிலுக்குப் போகும் வரையில் உங்கட அப்பா இருந்திருக்கார். எனது அப்பா சென்ற வருடம்

இறந்து விட்டார். அப்போது நான் நாலாம் வகுப்பு. ஸேர் நான் அடுத்த வாரத்திலிருந்து பாடசாலை வரமாட்டன்."

சலனமற்று முழு வகுப்பும் அவதானித்தது.

சிரிநாத ஸேர் இப்படியொரு சந்தர்ப்பத்திற்கு இதற்கு முன் முகம் கொடுக்கவில்லை. அவர் அமர்ந்து கொண்டார்.

"பிள்ளைகள் வாசிப்புப் புத்தகத்தில் இன்றைய பாடத்தை அமைதியாக வாசியுங்கள்."

அந்தப் பாடவேளை அமைதியற்று நகர்ந்தது. விமலசேன மாத்திரமே அமைதியாக இருந்தான். பிள்ளைகளால் வாசிக்க முடியவில்லை.

பாடசாலை விட்டு வீட்டுக்குச் செல்கையில் தனது தொழில் பற்றிக் கமலுக்கு எடுத்துச் சொன்னான் விமலசேன.

"செங்கல் பட்டறைக்கு வேலைக்குப் போறன். நான் சம்பாதித்து அம்மாவுக்குக் கொடுக்கிறன். தம்பி பாடசாலைக்கு வருகிறான். இந்த முறை நான் தான் அவனுக்குப் புத்தகம் எடுத்துக் கொடுப்பேன்."

'அவனது மனதில் இருப்பது கவலையல்ல. தொழில் காரணமாக ஏற்பட்டுள்ள பெருமை.' கமல் இவ்வாறு நினைத்தான்.

'பாடசாலை' என்ற சுவர்ப்பத்திரிகையில் கமலின் கட்டுரை வெளியாகியிருந்ததைக் கவனித்த பல ஆசிரியர்கள் அவனை அனுதாபத்தோடு பார்த்தனர். ரஞ்சனி ஆசிரியை மட்டும் கோபத் தோடு பார்த்தார்.

"அவனுக்கெழுத வேறொன்னுமில்லையா?" அவர் இன்னொரு ஆசிரியையிடம் கேட்டார்.

வாசிக்கத் தெரிந்த எல்லா மாணவர்களுமே அந்தக் கட்டுரையை வாசித்தனர். கமலுக்குப் பெருமை மாத்திரமல்ல வெட்கமாகவும் இருந்தது.

"மிகவும் வறுமையான பிள்ளை." ஒரு ஆசிரியை சொன்னார். அவனுக்கு வெட்கம் ஏற்பட்டது அதனால் தான்.

“அதில் சொல்லும் அளவுக்குக் கஷ்டமானவங்க இந்த ஊரில் இல்லை. அந்த மனிதர்களோடு கதைத்துப் பார்த்தால் தெரியும். மிகவும் பெருமை பிடித்த பையன்.” இப்படிச் சொன்ன ஆசிரியை சில்லறைக் கடைக்காரரின் மனைவி.

அதிபருக்கு ரஞ்சனி ஆசிரியையிடமிருந்து ஒரு முறைப்பாடு கிடைத்திருந்தது.

“மிஸ்டர் சிரிநாத பிள்ளைகளை மோசமாக்குகிறார். ஐந்தாம் வகுப்புக் கமலின் கட்டுரையொன்று சுவர்ப் பத்திரிகையில் உண்டு. அது அந்தப் பையனால் எழுதப்பட்டதென்று சொல்ல முடியாது. அந்த ஸேர்தான் எழுதியிருக்கிறார். இப்படியான கருத்துக்களைப் பிள்ளைகளுக்குக் கொடுப்பது நல்லதல்ல......”

அதிபரும் கூட சுவர்ப் பத்திரிகையை வாசித்தார்.

எனது தந்தையின் வாழ்க்கை.

தந்தை என்ற சொல்லைக் கேட்கும் போது மனம் அன்பினால் நிறைந்து விடுகிறது. அவர் சகல துன்பங்களையம் அனுபவித்து எங்களுக்காகத் தான் என்பதை நினைக்கும் போது, அந்த அன்போடு சோகமும் கலந்து விடுகிறது.

எனது தந்தை ஒரு விவசாயி. அவருக்கு ஒரு கொத்து நெல் தரக்கூடிய வயல் கூடச் சொந்தமில்லை. வேறொருவருக்குரிய வயலில் அவர் முப்பது வயதிலிருந்த வேலை செய்கிறார். நானும் சிறு வயதிலிருந்து தந்தையுடன் வயலுக்குச் செல்கிறேன்.

இப்பொழுது நானும் வயல் வேலை செய்கிறேன். தந்தையைப் போன்றே நானும் விவசாயியாகுவேன் என்று சொல்லும் போது அவர் வேண்டாம் என்பார்.

“நான் விவசாயியாக வருவதை அப்பா ஏன் விரும்பவில்லை?” என்று, ஒரு நாள் அம்மாவிடம் கேட்டேன்.

அப்பாவின் வாழ்க்கையைப் பற்றி அம்மா சொன்னாள்.

“காலையில் எழுந்து வயலுக்குச் செல்வார். நீர் கட்டுவார். வயலுக்கிறங்கிக் களை பிடுங்குவார். மாடுகளிலிருந்து பயிரைப் பாதுகாக்க வேலியடைப்பார். காலையில் வெறும் வயிற்றுடன்

தான் செல்வார். ஒன்பது மணிக்குப் போல் வீட்டுக்கு வந்து சாப்பிடுவார். மீண்டும் வயலுக்குச் செல்வார். முழுநாளும் வயலில் தான். வயற் சேற்றில் வேலை செய்யும் காலத்தில் அப்பா மிகவும் மெலிந்து போவார். எலும்பும் தோலுமாக மாறுவார். மண்வெட்டியால் வேலை செய்யவே அவர் மிகவும் விரும்புவார். உழவுயந்திரத்தால் செய்வதாயின் கூலி அதிகமல்லவா? பயிர் விதைப்புக் காலத்தில் இரவிலும் வயலிலே தான். வயலின் உயர்ந்த பகுதியில் கொட்டில் அமைக்கப்பட்டுள்ளது. அப்பா இரவில் அதில் தங்குவார். விடியும் வரை விழித்திருப்பார். இல்லா விட்டால், பன்றிகள் வந்து வரப்பை உடைக்கும். மான், முயல் வந்து வேளாண்மையைச் சாப்பிடும். போதாதற்கு நெற்கதிர்களை வெட்டிக் கொண்டு செல்லும் கள்வர்க ளுமுண்டு."

அப்பா மகிழ்ச்சியோடு வரும் நாளுமுண்டு. "இந்த முறை நல்ல விளைச்சல்" என்று அம்மாவிடம் ரகசியமாகச் சொல்வார். நாவூறு பட்டு விடுமென்று பயப்படுவார். அம்மா சிரித்தபடி "எங்கட நெற்குதம் நிறையும்" என்பார். ஆனால், ஒருநாளும் அவ்வாறு நிறைந்ததாக எனக்கு நினைவில்லை.

அப்பாவின் அந்த மகிழ்ச்சி நெல் பகிரும் நாளில் இல்லாமல் போய்விடும். வயல் உரிமையாளரின் சகபாடிகள் சாக்குப் பைகள் சகிதம் வண்டியில் வந்து விடுவார்கள். பெரிய குறுணியும் கொண்டு வருவார்கள். அது எங்கள் குறுணியை விடப் பெரியது. அளப்பது கூட அப்பா அல்ல. உரிமையாளரின் ஆள்தான்.

ஆரம்பத்தில் களை கொல்லி, பசளைச் செலவென்று நெல் கழிப்பார்கள். அப்பாவிடம் பணம் இருந்தால் அவற்றை வாங்கியி ருப்பார். எங்கள் கிராமத்தில் வயல் செய்யும் எவரும் தமது பணத் தில் அவற்றை வாங்குவதில்லை. மொத்த நெல்லில் நாலிலொன்று வயல் உரிமையாளருக்கென்று எடுத்து விடுவார்கள். அவர்கள வண் டிலை நிறைத்து எடுத்துச் செல்வதை அப்பா பார்த்துக் கொண்டி ருப்பார். எஞ்சிய சிறிதளவே அப்பாவுக்குக் கிடைக்கும். அவற்றைச் சாக்கில் போட்டுக் கழுத்தில் சுமந்து வீட்டுக்குக் கொண்டு வருவார். "கடன் அடைக்கக் காணும்" என்றவாறு கைகளைத் துடைத்துக் கொள்வார். குதம் வெறுமையாய்க் கிடக்கும். தந்தைக்கு வெறுப்பு

ஏற்படுவதுமில்லை. அடுத்த போகத்தில் மீண்டும் வேலையை ஆரம் பிப்பார். கடன் எடுக்கவும் முனைந்து விடுவார். துன்பம் அவரு க்குப் பழக்கப்பட்டுவிட்டது. அதற்குள்ளும் எவருக்கேனும் உதவி செய்யக் கிடைத்தால் அதையும் விட்டு விடமாட்டார். "எங்களுக் கென்று வயல் இருக்குமாயின் தம்பி விவசாயம் செய்வதில பிரச் சினை இல்லை." என்று தந்தையார் சொல்வாராம். அம்மாதான இவ் வாறு என்னிடம் சொன்னாள். அவருக்க எப்போதாயினும் சொந்த மாக ஒரு வயலைப் பெற்றுக் கொடுப்பதாயின் அதற்காக நன்றாகப் படிக்க வேண்டும். துயர வாழ்விலிருந்து அப்பாவை விடுதலை செய்ய நான் நன்றாகப் படித்து அரச தொழிலுக்குச் செல்வேன். பணம் கொஞ்சம் சேகரித்து வயலொன்று வாங்குவேன்.....

இந்தக் கட்டுரையை அதிபர் இரண்டு தடவை வாசித்துவிட்டு ரஞ்சனி ஆசிரியையின் பக்கம் திரும்பினார்.

"எனக்கென்னா இதில் ஒரு தவறும் தெரியேல்ல. அப்பா அடை யும் கஷ்டங்கள் சொல்லப்பட்டிருக்கு. அதிலிருந்து அவரை விடுவிப் பதற்கான பிள்ளையின் உறுதிப்பாடு சொல்லப்பட்டிருக்கு. அது மற்றப் பிள்ளைகளுக்கும் முன்மாதிரியா இருக்கு. இதில என்ன மிஸ் தவறு?"

"ஸேருக்கு ஒன்னும் விளங்காது. வயல் சொந்தக்காரரை வசை பாடியிருக்கிறதப் பார்த்தீர்களா? எங்கட வயல்ல தான் கமலின் அப்பா வேலை செய்கிறான்...." ரஞ்சனி ஆசிரியை சொன்னாள்.

"சரியம்மா இதில் சொல்லியிருக்கும் விடயங்கள் பிழையா?"

"ஸேர் இவங்களுக்கு இப்படியெல்லாம் பேச இடங்கொடுத்தால், எங்களுக்கு இந்த ஊரை விட்டுப் போக வேண்டி வரும்."

அதிபருக்குச் சிரிப்பு வந்தது.

"ரஞ்சனி மிஸ் இதைப் பொருட்படுத்த வேண்டாம். பிள்ளைகள் அல்லவா?"

"இந்தக் கருத்துக்களோடு பிள்ளைகள் மேலோங்கினார்க ளென்றால் என்ன நடக்கும்?"

அவளது முகம் கோபத்தால் வெடித்தது. உதடுகள் துடி துடித்தன.

அன்று ஆசிரியர் அறைக்குள் ரஞ்சனி மிஸ் சுவர்ப பத்திரினைக் கட்டுரைக்கு எதிராகப் பேசினார். அது நிமல் மற்றும் பிரபாத் காதிலும் விழுந்தது.

"மிஸ்டர் சிரிநாத இந்த ஊர்ப் பிள்ளைகளைக் கொண்டு இந்த விதமாக எங்களுக்குச் சேறு பூசுவது நல்லதல்ல."

சிரிநாத ஸேர் அமைதியாகவிருந்தார்.

"இதென்ன? எப்படி நான் ரஞ்சனி மிஸ்ஸுக்குச் சேறு பூசுறன்?"

"ஆமா சேறு பூசவில்லை. எங்க கூலி விவசாயின் மகனுக்குச் சொல்லிச் சேற்றை வாரி அடித்திருக்கிறீங்கள்."

"நாங்கள் வட்டிக்குக் கடன் கொடுக்கிறோமாம்........ அவங்கட நெல்லைக் கொள்ளையடிக்கிறோமாம்...... அவங்களுக்கு நாங்கள் கடன் கொடுக்காவிட்டால், வயல் வேலை கொடுக்காவிட்டால் இன்னக்கி அவங்களைப் புதைத்த இடத்தில் மரம் கூட வளர்ந்திருக்கும்....."

"ரஞ்சனி மிஸ்....... நான் எந்தக் குறுகிய எண்ணத்தோடு எழுதுவிக்கவில்லை. அந்தப் பிள்ளை தனது தகப்பனின் வாழ்வை நன்கு விளங்கிக் கொண்டு சுவைப்பட எழுதியிருந்தான். அதனால் தான் அதனை அங்கீகரித்தேன். சுவர்ப் பத்திரிகைக்கும் தெரிவு செய்தேன். சேறு பூசும் குற்றச்சாட்டு எனக்குப் பொருத்தமானதல்ல." என்றவாறு சிரிநாத ஸேர் வாசற் படிக்கு வந்தார்.

பிரபாத்தையும், நிமலையும் கண்டார். அவர் மீண்டும் அறைக்குத் திரும்பினார்.

ஆசிரியர் ஒருவர் பெரும் சத்தமிட்டுச் சிரிப்பது கேட்டது.

"சரி நான் பார்த்துக் கொள்றன்-" என்றவாறு ரஞ்சனி ஆசிரியை வாசற்படிக்கு வந்தார்.

பிரபாத்தும் நிமலும் வகுப்புக்குச் சென்றனர். அவர்கள் சொன்ன விடயத்தைக் கேட்டு கமல் துணுக்குற்றான்.

"உங்கட அப்பாவுக்கு வயல் கொடுக்காமல் விடுவார்கள்-" பிரபாத் அபிப்பிராயப்பட்டான்.

"ஆம் ரஞ்சினி மிஸ்ஸின் கணவன், உங்கட அப்பாவுக்குக் கடன் கொடுக்கமாட்டார்-" விக்டர் சொன்னான்.

கமலுக்கு அதிர்ச்சியாகவிருந்தது.

"அப்படி நடந்தால் ஸேரிடம் சொல்வோம்" சுஜாதாவின் யோசனை.

"ஸேர் என்ன செய்ய......... அவங்க பெரியாக்கள்." நிமல் கூறினான்.

கமல் எழுந்தான். ஓய்வறையிலிருந்து வகுப்புக்கு வரும் சிரிநாத ஸேரைக் கண்டான். அவரது முகத்தில் சிரிப்பு இருந்தது.

எல்லாம் ஓய்ந்திருக்குமென்று கமல் நினைத்தான். அப்பொழுது கணிதப் பாடம்.

ஈர்மூன்று ஐந்து என்று சொல்லும் மாணவர்களும் அந்த வகுப் பில் இருந்தார்கள்.

"அதற்குப் பரவாயில்லை. நாங்கள் படிப்போம். சிறுகற்கள் கொஞ் சம் கொண்டு வாருங்கள்." சிரிநாத ஸேர் மாணவர் ஒருவருக்குக் கூறினார்.

"என்னிடம் சிறுகற்கள் இருக்கு"

பை நிறையக் கற்களுடன் பிரபாத் ஆசிரியரிடம் சென்றான்.

"பிரபாத்துக்கு இவ்வளவு கற்கள் எதற்கு?"

பிள்ளைகள் வாய்விட்டுச் சிரித்தார்கள்.

பிரபாத் நெளிந்தான்.

"உனக்கு பன்னிரண்டாம் வாய்ப்பாடும் தெரியுமல்லவா? பிறகு எதற்காக இந்தக் கற்கள்?"

பிரபாத் நெளிந்தானே தவிர பதில் சொல்லவில்லை.

"ஸேர் பிரபாத் கெட்டபொல் வைத்திருக்கிறான்." விமலசேன வெளிப்படுத்தினான்.

"உண்மையா? எங்கே பார்ப்போம்...."

பிரபாத்தின் பொக்கற்றிலிருந்து இறப்பர் நாடாவொன்று வெளியே வந்தது. பிள்ளைகள் மீண்டும் சிரித்தனர். அவனது முகம் ஜம்புப் பழம் போல் சிவந்து கீழ் நோக்கியது. பலகைத் தண்டும் வெளியே வந்தது. ஆசிரியர் கவணை மேலே உயர்த்தி, "இதனால் எத்தனை உயிர்கள் செத்துப் போயிருக்கும்?" என்று கேட்டார்.

"ஒன்று கூட இல்லை." அவன் முணுமுணுத்தான்.

"புறாவொன்றைக் காயப்படுத்தினான். பிரபாத் பொய் சொல்கிறான் ஸேர்." ஒரு பெண் பிள்ளை கூறினாள்.

"உண்மையா?"

பிரபாத் தலைகுனிந்தான்.

"இவன் வேறு உயிர்க் கொலை செய்யவில்லையா கமல்?"

ஆசிரியர் கமலின் பக்கமாகத் திரும்பினார்.

கமல் சிரித்தபடி பிரபாத்தின் பக்கம் பார்த்தான்.

"இல்லை ஸேர். இவன் உயிரினங்களுக்கு அடிப்பான். ஆனால், பட்டதில்லை. அந்தப் புறாவுக்கு மாத்திரமே பட்டது."

"இவர் தனது கவணால் உயிரினங்களின் வாழ்க்கையப் பலியெடுக்கப் பார்த்திருக்கிறான். அந்த உயிரினங்கள் பிரபாத்திற்கு ஏதாவது தவறு செய்துள்ளனவா? அந்தப் புறா உமக்குச் செய்த குற்றமென்ன?"

பிரபாத் மௌனித்திருந்தான்.

"அது பிரபாத்தின் உணவைக் களவெடுத்துச் சாப்பிட்டதா?"

"இல்லை"

பிள்ளைகள் மீண்டும் சிரித்தார்கள்.

"அந்த உயிருக்குச் செய்த அநியாயத்துக்காகப் பிரபாத் கவலைப்படவில்லையா?"

அவன் ஸேரின் முகத்தைப் பார்த்துவிட்டு மீண்டும் கீழே பார்த்துக் கொண்டான்.

"போ, இடத்துக்கு"

அதன் பின்பு சிரிநாத ஸேர் 'உயிர்களிடத்தில் அன்பு' என்ற பாடத்தைச் செய்தார். வரலாற்றுக் கதைக்கூடாக விடயங்களைத் தொட்டு, உயிர்கள் மீது அன்பு கொள்வது பௌத்த குணாம்ச மென்பதைத் தெளிவுபடுத்தினார்.

"மனிதர்களைப் போலவே விலங்குகளுக்கும் இந்த உலகம் சொந்தம்."

இவ்வாறு அவர் பாடத்தை நிறைவு செய்தார்.

"நல்லது பிரபாத் உமக்கு கவண் வேண்டுமா?"

பிரபாத் தலையசைத்துத் தனக்கு அது தேவையில்லையென்று தெரிவித்தான். சிரிநாத ஸேர் இறப்பர் நாடாவைக் கழற்றி மரத் தண்டைக் குப்பைக் கூடைக்குள் இட்டார்.

அதனை அடுத்து வந்த சமய பாடவேளையின் போது, தலா இரண்டு கற்களாக வேறுபடுத்தி இரண்டாம் வாய்ப்பாட்டைக் கற்பித் தார். பல மாணவர்கள் அதில் பங்கு கொண்டனர். கமல், நிமல், பிரபாத், சுஜாதா, லதா போன்றோர் பாடப் புத்தகத்தில் கணிதப் பயிற்சி செய்தனர்.

அடுத்தநாள் காலை சுவர்ப் பத்திரிகை ஒட்டியிருந்த பலகை சகிதம் காணாமல் போயிருந்தது.

"பரவாயில்லை. நாம் இன்னொரு சட்டகம் செய்வோம். இன் னொரு பத்திரிகை ஆரம்பிப்போம்."

சிரிநாத ஸேர் தைரியமிழந்த- தயாரிப்புக்குழு மாணவர்களுக்கு நம்பிக்கையூட்டினார்.

❄ ❄ ❄ ❄ ❄ ❄

புத்தகம் மீண்டும் மார்பின் மீது விழுந்திருப்பது கமலுக்குத் தெரிந்தது.

சிரிநாத ஸேர் சந்தையில் அரிசி விற்கும் விதம் அவனது மனதை வெகுவாகப் பாதித்தது. படிப்பதற்கு மனதிலே நிம்மதி இல்லை. அவன் எழுந்தான். தந்தை விறாந்தையில் இல்லை. மண்வெட்டி கட்டிலின் கீழ் காணப்படவில்லை. கோவணம் கொடியில தொங்கவில்லை.

“அம்மா நானும் வயலுக்குப் போறன்.” அவன் தோட்டம் கொத்திக் கொண்டிருந்த அம்மாவிடம் சொன்னான்.

“மண்வெட்டியைத் தாருங்கள்” அவன் தாயின் கையிலிருந்த மண்வெட்டியைக் கேட்டான்.


“உனக்கு இன்று வரவேண்டாம் என்று அப்பா சொன்னார்.”

எனினும், அவனால் படிக்க முடியவில்லை. சிரிநாத ஸேரின் வாழ்வில் கவலை நிரம்பியுள்ளது. அவருக்கு உதவ எங்களுக்கு ஏதாவது வழியில்லையா?

யோசித்தபடி கமல் வீட்டினுள்ளே சென்றான். உள்ளத்தைப் போலவே உடலும் சோர்ந்திருந்தது. பிரபாத்தையும், நிமலையும் சந்திக்க வேண்டும் போலிருந்தது. அவர்கள் இப்பொழுது படித்துக் கொண்டிருப்பார்கள். சிலவேளை அவர்களும் ஸேரைப் பற்றிச சிந்தித்துக் கொண்டிருக்கக் கூடும். இன்று ஸேர் சந்தையில் அரிசி விற்ற கதையை நிமல் பிரபாத்துக்கும் நிச்சயம் சொல்லியிருப்பான்.

அவன் அம்மாவைச் சிறிது நேரம் பார்த்துக் கொண்டிருந்தான். உடல் மெலிந்த போதும், அவளது உள்ளம் உறுதியானது. துன்பம் அனுபவித்து அவளுக்குப் பழகி விட்டது. சிரிநாத ஸேர் ‘நாங்கள் துக்கம் அனுபவிக்கும் மனிதர்கள்’ என்று சொன்னாரே- அவளுக்குத் துக்கம் புதிய விடயமோ, நினைத்து நினைத்து அதிர்வுறும் விடயமோ அல்ல. துயரங்களை அவள் பெற்ற உரிமையாய் கருதுகிறாள். அவளது ஒரே எதிர்பார்ப்பு கமல்? வயல் வேலையிலிருந்து என்னை விடுதலையாக்கிப் படிக்க வைத்தது அதனால்தான்.

அவன் மீண்டும் வீட்டினுள் சென்று புத்தகத்தைக் கையிலெடுத்து வாசிக்கத் தொடங்கினான்.



# 4

சிரிநாத ஸேரைப் பற்றிய நினைவு, பாடப் புத்தகத்தை விரட்டி விட்டது. கமல் மீண்டும் புத்தகத்தை மார்பின் மீது வைத்துக் கொண்டு, கூரையைப் பார்த்துக் கொண்டிருந்தான். கூரை வேய்ந்து நான்கு மாதம் கூட நகரவில்லை. சென்ற வாரம் பெய்த சிறிய மழைக்கே வீடு நனைந்து விட்டது அப்போது "இம்முறை மோசமான கிடுகு" நனையும் இடத்துக்குப் பாத்திரம் வைத்தபடி அம்மா சொன்னாள்.

சிரிநாத ஸேரின் வீடு அவனுக்கு ஞாபகம் வந்தது. உள்ளூர் ஓடு அடுக்கிய கூரையின் ரீப்பை இற்றுப் போயிருந்தது. மழை நாளில் நனைகிறது. ஒருநாள் பிரபாத், நிமல் ஆகியோருடன் கமல் அந்த வீட்டில் நிற்கும் போது உள்ளே நீர் கொட்டிய விதம் அவனுக்கு ஞாபகம் வந்தது. சிரிநாத ஸேருக்குப் புத்தகங்களைப் பாதுகாத்துக் கொள்ளவதே முக்கியமாகப்பட்டது. அவர் சேர்த்து வைத்திருந்ததெல்லாம் புத்தகங்கள் தான். மேசை, இரண்டு கதிரைகள், இரண்டு கட்டில்கள் இவற்றோடு மேலும் ஒரு நீண்ட வாங்கு மாத்திரமே அங்கு காணப்பட்டன. ஒரு கட்டில் சிரிநாத ஸேரின் நோயாளி மாமாவுக்கு வேறாக்கப்பட்டிருந்தது. பெரிய ராக்கைகள் இரண்டில் புத்தகங்கள் நிறைந்திருந்தன. அவர் மாணவர்களுக்குப் புத்தகம் கொடுப்பார். வாசித்து முடிந்ததும் கேள்வி கேட்பார்.

"சிரிநாத ஸேரின் புத்தகம் வாசித்தால் எங்களுக்குத் தான் கஷ்டம்" சிலர் கூறினர்.

"புத்தகத்திலிருந்து கேள்வி கேட்பார். பிழையானால் ஸேருக்குக் கோபம் வரும். புத்தகங்களில் இருப்பதெல்லாம் ஞாபகம் வைத்துக்

கொள்ள யாரால் முடியும்?" அவர்கள் அதற்குக் காரணமும் கற்பித்தனர்.

சிறிநாத ஸேர் தன்னிடமிருந்த சிறுவர் கதைப் புத்தகங்களை வகுப்புக்குக் கொண்டு வந்தார். ஐந்தாம் வகுப்பிலிருந்த போதும், மூன்றாம் வகுப்புப் புத்தகம் வாசிக்கவே சிலர் சிரமப்பட்டனர். இந்தப் பிள்ளைகளுக்குத் தனிப்பட்ட உதவி தேவைப்பட்டது. அவர்கள் சிறுவர் நூல்களைக் கூடப் பார்த்ததில்லை. மிகுந்த ஆசையுடன் அப்புத்தகங்களைப் புரட்டிப் பார்த்தனர்.

"எங்கள் பாடசாலைக்கு வாசிகசாலை வேண்டும்."

பெற்றார் ஆசிரியர் சங்கத்தின் போது சிறிநாத ஸேர் சொன்னார்.

"நெல் பங்கு போடும் இடங்களிலிருந்து கொஞ்சம் கொஞ்சம் சேகரித்துப் பணம் தேடுவோம். அதனால் ஓரளவு புத்தகம் வாங்கலாம்."

விவசாயிகள் அதற்கு உடன்பட்டனர்.

"பாடசாலைத் தோட்டத்தில் நிற்கும் வாழைக்குலை விற்றுக் காசாக்கும் பெரிய ஸேரும் இதற்கு உதவினால் என்ன?" என்று கேட்பதற்கு மகதூன் எழுந்த போதும் இன்னொருவர் அதனைத் தடுத்துவிட்டார்.

அடுத்த தவணை ஆரம்பிக்கும் போது ஆரம்பப் பிரிவு மாணவர்களுக்கு வாசிக்க ஒரு தொகைப் புத்தகங்கள் கிடைத்தன.

"நூலகத்தைப் பொறுப்பெடுத்துப் பிள்ளைகளுக்குப் புத்தகம் கொடுங்கள்." அதிபர் சிறிநாத ஸேரை வேண்டினார்.

வகுப்பில் ஆசிரியர் இல்லாத வேளையில் அவர் பிள்ளைகளுக்கு வாசிக்கப் புத்தகம் கொடுத்தார்.

"பிள்ளைகள் இப்பொழுது ஆசிரியர் இல்லையென்று சத்தமிடுவதில்லை."

அதிபர் ஒருநாள் சிறிநாத ஸேரிடம் சொன்னார்.

"இந்தப் பிள்ளைகள் இப்பொழுது ஒரு புத்தகத்தை இரண்டு மூன்று தடவை வாசிக்கிறாங்கள். கொஞ்சம் தரம் கூடிய புத்தகங்கள் இனிக் கொண்டு வரவேண்டும்."

சிரிநாத ஸேர் பிரேரணையொன்றை முன் வைத்தார்.

"எங்கே பணம்?"

"அதுதான் பிரச்சினை. இந்தப் பிள்ளைகளைப் பற்றி நான் பத்திரிகைக்கு ஒரு கட்டுரை அனுப்பினேன்."

அதிபரின் புருவங்கள் மேலுயர்ந்தன.

"என்ன எழுதினீங்கள்? பாடசாலையின் குறைபாடுகளையா........? என்னை அனுப்பி விடுவார்களே."

சிரிநாத ஸேர் சிரிப்பை மறைத்துக் கொண்டார்.

ஞாயிறு செய்திப் பத்திரிகையில் அந்தக் கட்டுரை பிரசுரமாகியிருந்தது. விவசாயியின் பிள்ளைகளுக்கு வாசிப்பதிலுள்ள ஆர்வமும் புத்தகத் தட்டுப்பாடும் அதில் விபரிக்கப்பட்டிருந்தது.

அது வெளிவந்து சில நாட்களுக்குப் பிறகு, தபால் மூலமாகப் புத்தகப் பொதியொன்று வந்து சேர்ந்தது. அடுத்த வாரம் மேலும் சில பொதிகளும் மணியோடர்களும் கிடைத்தன.

"அனுதாபப்படுற மக்கள் இன்னும் எமது நாட்டில் இருக்கிறாங்கள்." புத்தகப் பொதியொன்றை அவிழ்த்துப் பார்த்தபடி அதிபர் சொன்னார்.

செய்திப் பத்திரிகை காரணமாக சுமார் நூறு புத்தகங்கள் கிடைத்தன. வாசிக்க முடியாதிருந்த பிள்ளைகள் எழுத்துக் கூட்டி வாசித்துக் கதைகளை விளங்கிக் கொள்ள முயன்றனர்.

ஐந்தாம்தரப் புலமைப் பரீட்சை மாணவர்களுக்காக மாலை வகுப்பொன்றை ஆரம்பிக்கும் யோசனையை, ஸேர் முன் வைத்த நாள் கமலுக்கு ஞாபகம்.

"நாங்கள் புலமைப் பரிசில் வகுப்பு ஆரம்பிக்கப் போறோம். மாலையில் வர முடியுமா? தூரத்திலிருந்து வாரவங்க சாப்பாடு கொண்டு வரவேண்டும். பக்கத்திலுள்ளவங்க சாப்பிட்டு வரலாம். நானும் வீட்டுக்குப் போய்ச் சாப்பிட்டுவிட்டு வருவன். எங்க பார்ப்பம். யாருக்கெல்லாம் வகுப்புக்கு வரமுடியும்?"

விக்டர் மற்றும் இருவரைத் தவிர ஏனையவர்கள் கை உயர்த்தித் தமது விருப்பத்தை வெளியிட்டனர். கை உயர்த்தாதவர்களிடம் ஸேர் கேள்வி கேட்கவில்லை.

புலமைப் பரிசில் வகுப்பு ஆரம்பித்த அடுத்த நாள் காலையில் ரஞ்சனி மிஸ்ஸுக்கு சிரிநாத ஸேருடன் கதைப்பதற்குத் தேவையிருந்தது. கல்பொறுக்கிக் கொண்டிருந்த போது டேர்பன்டைன் மரத்தடியில் அவரைச் சந்திக்க முடிந்தது.

"இப்போது ஸ்டாப் ரூம் பக்கமும் வரமாட்டீங்க. நிறைய வேலை தானே..... உங்களைச் சந்திக்க வேண்டுமென்று இருந்தன்."

அவள் குத்து வார்த்தை சொன்னாள்.

"சொல்லுங்க ரஞ்சின் மிஸ்- நான் என்ன செய்ய வேணும்?"

சிரிநாத ஸேர் நெருங்கி வந்து நின்றார்.

"அந்தச் சுவர்ப் பத்திரிகையைக் கிழித்தது என்ர வேலையென்று நீங்கள் நினைக்கக் கூடும்! அது பற்றி எனக்கு எதுவுமே தெரியாது."

"நான் அப்படி நினைத்ததாக நீங்கள் எப்படிச் சொல்ல முடியும்?"

"இல்லை இது ஒவ்வொருவர் சொல்ற கதையல்லவா? அது வல்ல மிஸ்டர் சிரிநாத, நேற்று மாலை வகுப்பு ஆரம்பித்ததாகக் கேள்வி. அதனால் ஏதாவது பயன் கிட்டுமென்று நினைக்கிறீங்களா?"

"ஏன் அப்படிச் சொல்றீங்க.....?"

"இங்க...... பிச்சைக்கார விவசாயிகளின்ற பிள்ளைகள். இவங்க மரமேறவும், நிலம் கொத்தவும் தான் சரி. வேறொன்னுக்கும் பழக்க முடியாது. நான் வந்த புதிதில் ஆங்கிலம் படிப்பிக்க எவ்வளவு கஷ்டப்பட்டன். மிஸ்டர் சிரிநாத காலமே இருந்து நீங்கள் எடுக்கும் முயற்சி எனக்குத் தெரியும். வெறும் மடையர்கள் ஒரு நாளும் சரிவரமாட்டார்கள். மாலை வகுப்பு வைப்பதில் ஒரு பயனுமில்லை. இந்தப் பள்ளிக்கூடப் பிள்ளைகள் புலமைப் பரிசில் பரீட்சையில் ஒரு நாளும் பாஸ் பண்ணியது கிடையாது."

"அப்படியென்னா ஒருவரையாவது பாஸ் பண்ண வைக்க முயற்சிப்போம்."

“முடியாது மிஸ்டர் சிறிநாத. மாலையில் பொழுது போகாவிட்டால், நான் என்னுடைய மிஸ்டருக்குச் சொல்லி வயல் துண்டொன்று ஏற்பாடு செய்யிறன். இரண்டு ஏக்கர் குத்தகைக்கெடுத்தால் காணும். குறைந்த பட்சம் உங்கட சாப்பாட்டையாவது பார்த்துக் கொள்ளலாம்.”

“நன்றி. எனக்குப் பொறுப்பளித்த பிள்ளைகளின்ற கண்களைத் திறந்துவிட முடிந்தால் அது எனக்குப் போதும். புலமைப் பரிசில் பாஸ் பண்ணினாலும், இல்லாவிட்டாலும் இந்த வகுப்பால் கணக்கு- எழுத்து- வாசிப்பென்றாலும் தெரியவரும் தானே?”

ரஞ்சினி மிஸ் செருப்பு நுனியால் மண்ணில் கோடிழுத்தாள்.

“நான் உங்கட நன்மைக்காகத்தான் சொன்னன். நான் சொன்ன தன் உண்மை பொய் பின்னர் தெரியவரும்.”

அவள் எங்கோ பார்த்துக் கொண்டாள்.

மாலை வகுப்புத் தொடர்ந்து நடைபெற்றது. ஐந்துமணி வரை ஸேர் வகுப்பு நடத்தினார். ஒருநாள் அதிபர் கூட அங்கு வருகை தந்தார். அவர் சிறிநாத ஸேரை ஆசிரியர் விடுதிக்கு அழைத்துச் சென்று தேநீர் வழங்கினார்.

இதற்கிடையில் நடைபெற்ற ஒரு நிகழ்வு கமலுக்கு நினைவு வந்தது.

அன்று ஆசிரியர் மேசையிலிருந்த பூச்செண்டுக்குப் புதுப் பூக்களுடன் நேரகாலத்தோடு கமல் பள்ளிக்கூடத்திற்கு வந்திருந்தான். வகுப்புக்குள் புகும் போது ஏதோ நாற்றமடித்தது.

ஆசிரியர் மேசை, கரும்பலகை, வாங்குகளிலெல்லாம் சாணம் காணப்பட்டது. கமல் இருபக்கமாகவிருந்த வகுப்புக்களைப் பார்த்தான். அங்கு சாணம் காணப்படவில்லை.

சுவர்ப் பத்திரிகையின் இரண்டாம் மூன்றாம் வெளியீடுகள் கிழித்துப் போடப்பட்டிருந்தன. அவை ஒட்டப்பட்டிருந்த பலகைச் சட்டகம் உடைந்து ஆசிரியர் மேசைக்குக் கீழே கிடந்தது.

கமல் பாடசாலைத் தோட்டத்தின் எல்லை வரை ஓடினான். அவனது நண்பர்கள் இன்னும் வரவில்லை. அதிபர் பாடசாலைக்கு வருவது தெரிந்தது. அவன் அவரது அருகே சென்றான்.

“ஸேர் எங்கள் வகுப்புக்குச் சாணி அடித்து........”

அதிபர் ஆழமான பார்வையொன்றைக் கமலை நோக்கி வீசினார்.

“சிரிநாத ஸேரின் வகுப்புக்கா?”

“ஆம்...... சாணி அடித்து...... சுவர்ப் பத்திரிகையைக் கிழித்து......... பலகைச் சட்டகத்தையும் உடைத்து......”

அதிபர் காரியாலயத்திற்குச் சென்றார்.

கமலையும் அழைத்தார்.

“யார் முதலில் கண்டது?”

“நான் தான்”

“ஏன் இன்று எல்லோருக்கும் முதலில் வந்தநீ”

“இன்று பூச்செண்டு ஒழுங்குபடுத்துவது நான்.”

“சரி போ..... நான் வந்து பார்க்கிறன்.”

“ஸேர். வகுப்பைச் சுத்தம் செய்யட்டுமா?”

“நான் வரும் வரை பொறு.”

கமல் வாயில் பக்கமாகப் ஓடினான். நிமல், பிரபாத் மற்றும் பல நண்பர்கள் உள்ளே வந்தார்கள்.

“இண்டக்கி எங்கட வகுப்புக்குச் சாணி அடித்து,ஸேரின் மேசையை சாணியால் குளிப்பாட்டி...”

கமலிடமிருந்து செய்தி அறிந்த பிள்ளைகள் வகுப்புக்கு ஓடினார் கள். அடுத்த வகுப்புப் பிள்ளைகளும் மூக்கைப் பொத்தியபடி எட்டிப் பார்த்தார்கள்.

“சாணம் மட்டுமல்ல, இன்னொரு மணமும்.....” நிமல் ஊகித்தான்.

“ம்..... கீழ்த்தரமான வேலை....” பிரபாத் குழம்பினான்.

அங்கு வந்த அதிபரும் மூக்கை அழுத்திக் கொண்டார்.

“சீக்கிரம் சுத்தமாக்குங்கள்..... நான் பத்தாம் வகுப்புப் பிள்ளை களையும் அனுப்புறன்....”

பல மாணவர்கள் வாளிகளுடன் கிணற்றடிக்குச் சென்றனர். கமல் சேட்டைக் கழற்றிக் கொண்டு, மேசை கதிரைகளை வெளியே எடுத்தான். நிமல், பிரபாத் விமலசேன ஆகியோரும் அவனோடு சேர்ந்து கொண்டனர். மண்வெட்டியால் சாணம் அகற்ற முடியாது. கழுவத்தான் வேண்டும்.

அவர்கள் தென்னம் மட்டைகளைக் கொண்டு ஆசிரியர் மேசையிலிருந்த சாணத்தை அகற்ற ஆரம்பித்தனர்.

சிரிநாத ஸேரும் வருவது தெரிந்தது.

பரபரப்பற்ற தோற்றமே அவரில் காணப்பட்டது.

தண்ணீர் கொண்டு வரும் பிள்ளைகள் இடையில் சொல்லியிருந்தார்கள்.

அவர் வகுப்பை எட்டிப் பார்த்தார்.

"நான் கையொப்பம் போட்டு விட்டு வாறன். எல்லோருமாகச் சுத்தம் செய்வோம்."

சிரிநாத ஸேரின் நடவடிக்கைகள் பிள்ளைகளுக்குப் புதுமை தான்.

முதல் நாள் மாலை வகுப்பில் எழுதிய கட்டுரைகளைச் சரிபார்த்துப் புள்ளியிட்டுக் கொண்டு வந்திருந்தார். கமல் அதனை மதில் மேல் வைத்தான்.

அடுத்த வகுப்பு ஆசிரியர்களும் வந்தார்கள்.

ரஞ்சனி மிஸ்ஸுக்குச் சுகமில்லையென்று யாரோ சொன்னார்கள். அவர் இன்று வரவில்லை.

வகுப்பை நாலைந்து வாளித் தண்ணீர் அடித்த பிள்ளைகள் கூட்டுமாற்றால் தேய்த்தனர். சிரிநாத ஸேரும் கூட்டுமாறொன்றைக் கையிலெடுத்தார்.

"நாங்க செய்றோம் ஸேர். நீங்கள் வெளியே நில்லுங்கள்." பிள்ளைகள் சொன்ன போதும் அதற்கவர் காது கொடுக்கவில்லை.

மேசை கதிரைகள் உலரும் வரை, பலா மரத்தடிக்குப பிள்ளைகளோடு சென்று பாடங்கள் தொடர்பாகக் கலந்துரையாடினார்.

இடைவேளையின் போது, ஏனைய ஆசிரியர்களுடன் 'சாணம் அடித்தல்' விடயமாகக் கதைத்தார். அவர்கள் கவலையை வெளியி ட்டனர்.

சிரிநாத ஸேர் சிரித்த முகத்தோடு சொன்னார்......

"சாணி அடிக்கும் வேலை நான் ஒருநாளும் செய்யேல்ல. செய்யப் போறதுமில்ல. அதேபோல நான் செய்து கொண்டிருக்கும் வேலைய விடப் போறதுமில்ல."

அவரது குரலில் உறுதி தொனித்தது.

பயிற்சியை முடித்துக் கொண்டு புதிதாக வந்த குலரத்ன ஸேரும், அவருடன் இணைந்து கொண்டார்.

"சிரி, உனக்கு ஏன் இப்படிச் செய்தாங்களென்று எனக்குத தெரியும். புலமைப் பரிசில் வகுப்புக்கு நானும் உதவி செய்றன். என்னால் கணிதப் பாடம் எடுக்க முடியும். சாணி அடிப்பார்கள் தான் பரவாயில்லை."

சிரிநாத ஸேர் குலரத்ன ஸேரின் கையைப் பிடித்த வண்ணம் சிறிது நேரம் அவரையே பார்த்துக் கொண்டிருந்தார்.

"குலே, எனக்கு நீயொரு பலம்." அந்தச் சொல்லின் அர்த்தம் கமலுக்கு விளங்கவில்லை. இடைவேளையின் பின்னர், மேசை, கதிரைகள் மீண்டும் வகுப்பறைக்குள் கொண்டு வரப்பட்டன. ஆசிரியர் தமது கதிரையில் அமர்ந்தார்.

"எங்கள் வகுப்பு புதிதாகி விட்டது. சாணி அடித்து- துப்புரவு செய்து- இப்போது முன்பை விட நன்றாக இருக்குது. இந்த இழி செயலுக்காக மனதைப் பழுதாக்கிக் கொள்ள வேண்டாம். இன்னும் நன்றாக இயங்குவோம். இன்று மாலையும் வழமைபோல் வகுப்பு நடக்கும்."

புலமைப்பரிசில் வகுப்பு நாளாந்தம் நடைபெற்றது. ஏழெட்டுப் பிள்ளைகள் வராமலிருப்பதையிட்டு சிரிநாத ஸேர் தேடிப் பார்த்தார். அவர்களது பெற்றோரையும் சந்தித்தார்.

"காலையில சாப்பிடாம இந்தப் பிள்ளைகள் பாடசாலைக்குப் போறாங்கள். அந்த நிலையில எப்படி ஸேர் பின்நேரமும் போக முடியும்?"

ஒரு தாயின் கவலை தோய்ந்த பதில் சிரிநாத ஸேரை ஊமை யாக்கியது.

குலரத்ன ஆசிரியரும் வாரத்தில் ஒரு நாளில் மாலை வகுப்பில் கற்பித்தார். பத்தாம் வகுப்பு மாணவர்களுக்காகவும் மாலை வகுப்பு ஆரம்பிக்கப்பட்டது. சிரிநாத ஸேருடன் குலரத்ன ஸேரும் புதிதாக வந்த விஜேரத்ன ஆசிரியரும் ஒன்று சேர்ந்தனர்.

புலமைப்பரிசில் வகுப்பில் ஐந்து பேராவது சித்தியடைவார்க ளென்று சிரிநாத ஸேர் எதிர்பார்த்த போதும் லதா மாத்திரமே சித்தியடைந்தாள்.

ஏழை விவசாயி ஒருவரின் மகள் மத்திய மகா வித்தியால யத்தில் சேர பாடசாலையிலிருந்து விலகிச் செல்லும் போது அவளது தாயார் சிரிநாத ஸேரை வணங்கி நின்றாள்.

அவரது முகம் வெட்கத்தால் சிவந்தது.

"ஏன் என்னை வணங்கிறியள்? நான் உங்களது தம்பி போன் றவன்."

லதா அன்று விக்கி விக்கி அழுதாள். அவளது வெற்றி பள்ளிக் கூடத்துக்குப் பெரிய எதிர்பார்ப்பை ஏற்படுத்தியது. பாடசாலை வரலாற்றில் முதற் தடவையாக சித்தியடைந்த அவள் மீது எல் லோரது பார்வையும் குவிந்தது.

"மிஸ்டர் சிரிநாதவின் முயற்சிக்கு பயன் கிடைத்துள்ளது. எனக்கும் மகிழ்ச்சி." ரஞ்சனி மிஸ்ஸும் ஏனையவர்களைப் போலவே மகிழ்ச்சியை வெளிப்படுத்தினாள்.

அடுத்த வருடங்களிலும் அவர் புலமைப்பரிசில் வகுப்பு நடாத்தினார். அப்பாடசாலையிலிருந்து மத்திய மகா வித்தியால யத்திற்கு இருபதுக்கு மேற்பட்டவர்கள் சென்று விட்டனர். கல்விப் பொதுத் தராதரப் பத்திர சாதாரண தரப் பரீட்சையில் கடந்த ஐந்து வருடங்களில் ஆண்டு தோறும் ஏழெட்டுப் பேர் சித்தியடைந்தனர். ஆங்கிலப் பாடத்திலென்றால் எவருமே சித்தி பெறவில்லை.

"ஆங்கிலம் படிப்பிக்க இன்னொரு ரீச்சர் கேட்போம்."

சிறிநாத ஸேர் அதிபரிடம் முன்வைத்த யோசனைக்கு எந்தப் பயனும் கிடைக்கவில்லை.

ஒரு நாள் வெளிப் பாடசாலை ஆசிரியர் ஒருவர் சிறிநாத ஸேரை சந்தித்து விடுத்த வேண்டுகோள் கமலுக்கு ஞாபகம் வந்தது.

"மிஸ்டர் சிறிநாத, நான் எங்கள் ஊர் விகாரையில் புலமைப் பரிசில் உதவி வகுப்பொன்றை ஆரம்பித்திருக்கன். சாதாரண தர வகுப்பும் உண்டு. ஆங்கிலப் பாடமும் ஆறாம் வகுப்பிலிருந்து இருக்கு. புலமைப் பரீட்சை வகுப்புக்கு நூற்றுக்கு மேற்பட்ட மாணவர்கள் வாறாங்க. நான் அதை உங்களிடம் கையளிக்க விரும்புகிறன்."

அந்த ஆசிரியர் ஆசையூட்டினார்.

"ஐயா நீங்கள் அந்த ஊர்ப் பள்ளிக்கூடத்தில் தானே படிப்பிக்கிறீர்கள்?"

"ஆமாம்"

"நான் வாரத்தில் ஒவ்வொரு நாளும் வேலை செய்யிறன். எனக்கு நேரமில்லை...... நீங்கள் செய்ற வேலை பற்றி நான் மகிழ்ச்சியடையிறன்."

"அப்படிச் சொல்லாதீங்க மிஸ்டர் சிறிநாத. பிள்ளைகள் நூறுக்கு மேல. வருவாயில அரைவாசி தருறன். ஸ்கொலஷிப் வகுப்புக்குப் படிப்பித்த அனுபவம் உங்களுக்கு இருக்கிறதால் தான் தேடிக் கொண்டு வந்தன்."

"நீங்கள் எவ்வளவு தந்தாலும் என்னால முடியாது. இந்தச சம்பளத்தோட நானும் கஷ்டத்தோட தான் வாழ்றன். பிள்ளைகளுக்குப் படிப்பித்திட்டு எப்படிக் காசெடுக்க முடியும்?"

அந்த ஆசிரியர் எழுந்து சென்றார்.

கல்வி அதிகாரி ஒருவர் வந்த நாளொன்றில் நடந்த சம்பவமொன்றும் கமலுக்க ஞாபகம் வந்தது.

வருடாந்தப் பரீட்சிப்புக்காகக் கல்வி அதிகாரி பாடசாலை வரவுள்ள தகவல் அதிபருக்குக் கிடைத்தது. அவர் அதனை ஆசிரியர் குழுவுக்கும் மாணவர்களுக்கும் அறிவித்தார்.

அதிகாரியை வரவேற்பதற்கான முன்னேற்பாடுகளில் காலை-மாலை பாராமல் அதிபர் ஈடுபட்டிருந்தார்.

"பாடக்குறிப்பு, தினக்குறிப்பெல்லாம் சரியாக இருத்தல் வேண்டும்." அவர் ஆசிரியர்களுக்குச் சொன்னார்.

"உங்கள் பயிற்சிப் புத்தகங்களெல்லாம் தூய்மையாக இருக்க வேண்டும்." மாணவர்களுக்குச் சொன்னார்.

அன்று ஒரு ஆசிரியர் கூட சுணங்கிவரவில்லை. எப்பொழுதுமே சுணங்கிவரும் ரஞ்சனி மிஸ் அன்று ஏழு மணிக்கு முன்பே வந்து விட்டார்.

எல்லா ஆசிரியர் மேசைகளிலும் பூச்செண்டுகள் மலர்ந்திருந்தன. கூரையில் சிலந்திவலை எதுவும் காணப்படவில்லை.

பாடசாலையில் எப்பொழுதுமே தூங்கி வழியும் மல்லிகா ஆசிரியை அன்று கதிரையில் அமரவேயில்லை. அங்கமிங்கும் ஓடியாடி பிள்ளைகளைக் கொண்டு குப்பை கூழங்களை அகற்றிய அதிபர் எட்டு மணியாகும் போது வியர்வையால் குளித்து நின்றார்.

சிரிநாத ஸேர் மாணவர்களின் பயிற்சிப் புத்தகங்களை வாசிக்கத் தொடங்கினார். எப்பொழுதுமே அவரது மேசையிலிருக்கும் மலர்ச் செண்டில் ரோசா மலரும் நாகவல்லி இலைகளும் காணப்பட்டன. முன்பு பூச்செண்டுகளே இல்லாத வகுப்புக்களில், இன்று பலவித மலர்கள் நிறைந்த செண்டுகள் பூத்திருந்தன.

அதிகாரி மோட்டார் வாகனத்திலிருந்து இறங்கிப் பள்ளிக்கூடத்துக்கு வந்தபோது அமைதி மேலோங்கியது.

அதிபர் அதிகாரியோடு வகுப்புக்கு வந்தார். ஆசிரியர்கள் பிள்ளைகளோடு எழுந்து அவரை வரவேற்றனர்.

சிரிநாத ஸேரின் மேசையை சூழ்ந்து பிள்ளைகள் நின்றனர். அவர் பிள்ளைகள் எழுதிய விடைகளில் காணப்பட்ட குறைபாடுகளைக் கூறினார். பிள்ளைகளுக்கூடாக வரமுடியாத அதிபர் அதிகாரியோடு சிறிது நேரம் பார்த்திருந்தார். பிறகு அவர் பிள்ளைகளை இருபக்கமாக்கி முன்னே வந்து "மிஸ்டர் சிரிநாத" என்றார்.

பிள்ளைகளை இடத்துக்குப் போகச் சொன்னபடி அவர் எழுந்தார்.

அதிகாரி மேசையருகே வந்த போது பிள்ளைகள் எழுந்தனர். மரியாதை தெரிவித்துவிட்டு மீண்டும் அமர்ந்தனர்.

"இவர் மிஸ்டர் சிரிநாத." அதிபர் வகுப்பாசிரியரை அறிமுகப் படுத்தினார்.

"எங்கே தினக்குறிப்புப் புத்தகம்?" என்றவாறு அதிகாரி அமர்ந்து கொண்டார்.

"தினக்குறிப்புப் புத்தகம் இல்லை."

"தினக்குறிப்பு எழுதுவதில்லையா?"

"எழுதுறன். புத்தகத்திலல்ல. என்னுடைய பயன்பாட்டுக்காக ஒற்றைகளில்....! எங்களுடைய திணைக்களம் அதற்காகப் புத்தகம் எதுவும் தரவில்லையே. எங்களுக்குக் கிடைக்கம் சிறிய சம்பளத்தில் இதற்கெல்லாம் செலவிட முடியாது."

"எங்கே எழுதிய குறிப்புகள்....?"

"அது என்ற தனிப்பட்ட விஷயம்....."

"அப்படியா? நீர் அவற்றைக் காண்பிக்கவில்லையென்றால், உமது கற்பித்தலைப் பற்றி நான் எப்படி அறிந்து கொள்வது?"

சிரிநாத வகுப்புப் பக்கமாகப் பார்த்தார். அவரது முகம் சிவந்து போனது.

"நீர் பிள்ளைகளிடம் கேள்வி கேளும். அவர்களது பயிற்சிப் புத்தகங்களைப் பாரும். அப்போது எனது கற்பித்தலைப் பற்றி விளங்கிக் கொள்ளலாம்."

"மரியாதையாகக் கதையும்."

"நீர் எனக்குத் தந்த மரியாதையைத்தான் நான் உமக்குத் தந்தேன்."

பிள்ளைகள் சிரித்தார்கள்.

அதிபர் வெளிறிப் போனார்.

அதிகாரி எழுந்தார். அவர் வகுப்புக்குப் போவதை நிறுத்தி விட்டு, அதிபரின் காரியாலயத்திற்குச் சென்றார். 'எல்லாம் நாசம்' என்று எண்ணியபடி அதிபர் சிரிநாத ஸேரையும் பிள்ளைகளையும் பார்த்தார்.

"எல்லாரும் புத்தகத்தை எடுங்கள்." என்றார் சிரிநாத ஸேர்.

இந்த சம்பவத்திற்குப் பிறகு சிரிநாத ஸேரைத் தூர இடமொன்று இடமாற்றம் செய்யப் போவதாக மோசமான கதை பரவியது. பெற் றார்கள் பாடசாலைக்கு வந்து அவருடன் அதுபற்றி விசாரித்தனர்.

"ஆம் என்னை இடமாற்றம் செய்யப் போறாங்கள். துரு வலைக்குரிய வேலை என்னவென்று தெரியுமல்லவா? எங்கு சென் றாலும் தேங்காய் துருவுவதுதானே! அதே போல படிப்பிப்பது தான் எனக்குரிய வேலை. இடமாற்றத்தைத் தவிர்த்துக் கொள்ள வேண்டியதில்லை எனக்கு!"

"அப்படியெல்லாம் செய்ய இடங்கொடுக்க முடியாது ஸேர்."

அவர்கள் அதிபரைச் சந்தித்தார்கள்.

"பிள்ளைகளின் முன்னிலையில் அந்த அதிகாரி மோசமாகக் கதைத்திருக்கார். வெட்கம் வரத்தானே செய்யும். அதிகாரி தான் தவறு செய்திருக்கார்-" கமலின் தகப்பன் சொன்னார்.

"கமல் விபரங்களை சொல்லியிருக்கான். என்ன இருந்தாலும் அதிகாரியின் முன்னால் கொஞ்சம் அடக்க ஒடுக்கமாக நடந்து கொள்ளத் தானே வேணும்."


'சோமே அண்ணன்' என்று சொல்லப்படும் ஜயசூரிய வாய் திறந்தார்.

"சரி ஸேரை மாற்றச் சொல்லுங்கள். அப்படிச் செய்தால் அவரையும் விட்டு விடமாட்டோம். அந்த அதிகாரி இருக்குமிடம், அவர் யார்? என்பதெல்லாம் எனக்குத் தெரியும்."

அதிபர் மௌனமானார்.

"நாங்கள் இன்னக்கி மந்திரியிடமும் போறோம். சிரிநாத ஸேரில் கை வைத்தால் அவர் திரும்ப இந்தப் பக்கமும் வரமுடியாது. அதையும் ஞாபகம் வைத்துக் கொண்டால் நல்லது."

ஒரு சாரார் மந்திரியையும் சந்திக்கச் சென்றனர். சிரிநாத ஸேருக்கு இடமாற்றமென்றால் கிடைக்கவில்லை.



5

# 5

தவணைப் பரீட்சைக்கு இன்னும் ஆறு நாட்களே இருந்தன. கமல் புத்தகத்தோடு எழுந்தான்.

“ஓரிடத்தில் அமர்ந்தபடி புத்தகம் வாசியுங்கள். சாய்ந்து கொண்டு வாசிக்க வேண்டாம். அப்பொழுது சோர்வடைந்து தூக்கம் வரும். சிரமமென்றால் எழுந்து நின்று வாசியுங்கள். உலாவியபடி வாசிக்கும் பிக்குகளை விகாரையில் கண்டிருப்பீங்களே.”

ஒருநாள் சிரிநாத ஸேர் சொன்ன அறிவுறுத்தல் அவனுக்கு நினைவு வந்தது. கமல் கதிரையில் அமர்ந்து கொண்டான்.

யன்னல் கதவுகள் காற்றுக்கு ஆடின. அது ஆடாமல் பலகைத் துண்டொன்றை இறுக்கி விட்டுச் சுருக்கக் குறிப்புப் புத்தகத்தை வாசிக்கத் தொடங்கினான்.

“காலமே படித்ததை மாலையில் வாசியுங்க. சிறுகுறிப்பு எழுதிக் கொள்ளுங்கள். ஒரு மாதத்தின் பின் அந்த மாதத்துக்குரிய சுருக்கக் குறிப்பை வாசியுங்கள். பரீட்சை நெருங்கியதும் சுருக்கக் குறிப்பை மேலோட்டமாகப் பார்த்துக் கொண்டார் சரி.”

இந்த ஒழுங்கை சிரிநாத ஸேரே சொல்லிக் கொடுத்தார்.

காலையிலிருந்து சுட்டெரிக்கும் வெயிலில் அரிசி விற்பனையில் ஈடுபட்ட ஆசிரியர்..... ஐந்து வருடங்களாகப் பிள்ளைகளுடனும் பாடசாலையுடனும் பிணைந்திருந்த ஆசிரியர்..... சிரித்த முகத்துடன் சொல்பவை அவனுக்கு ஞாபகம் வந்தது. சந்தையில் எழும் புழுதி

க்கும் வெக்கைக்கும் அவரது அன்பான சிரிப்பை மாற்ற முடிய வில்லை. வியாபாரிகளிடம் காணப்படும் வஞ்சகச் சிரிப்பல்ல அது. பிள்ளைகள் மத்தியில் பிரவகித்த சிரிப்பு. அரிசி விற்றுக் கிடைத்த இருபது ரூபா லாபத்தை ஒரு பெரிய விடயமாகவே அவர் எங்களு க்குக் காட்டினார்.

கமலின் இதயம் கவலையில் ஆழ்ந்தது.

பாடசாலையின் சகல ஆசிரியர்களும் இணைந்து நடத்திய அந்தக் கூட்டம் கமலுக்கு நல்ல ஞாபகம்.

"பிள்ளைகள் வெளியே செல்லுங்கள். இந்தக் கட்டிடத்தில் ஒரு கூட்டமுண்டு."

சிரிநாத ஸேர் பிள்ளைகளுக்குச் சொன்னார்.

'இந்த அவசரக் கூட்டம் எதற்கு?' கமலுக்குச் சற்றுக் கசப்புணர்வு ஏற்பட்டது. அவர்களது வகுப்பும் அந்தக் கட்டிடத்திலேயே இருந்தது.

பிள்ளைகளுக்கு மைதானத்துக்குச் செல்ல வேண்டி நேர்ந்தது. கூட்டத்திற்கு காது கொடுக்க வேண்டுமென்று ஆவல் அவனுக்கு!

வேறு பாடசாலை ஆசிரியர்கள் பலரும் அந்தக் கூட்டத்திற்கு வருகை தந்திருந்தனர். கீழ் தாடி வைத்திருந்த ஓர் இளைஞர் அவர்க ளுக்குள் முக்கியத்துவம் பெற்றார். பலரதும் அவதானம் அவரைச் சுற்றியிருந்தது. அந்த ஆசிரியத் தொழிற்சங்கத்தின் பிராந்தியத் தலைவர் அவரென் மற்றொரு ஆசிரியர் அறிமுகம் செய்து வைத் தார்.

"சகல அரச ஊழியர்களும் பங்குபற்றும் மாபெரும் வேலை நிறுத்தம் இது."

ஆசிரியர் சங்கத் தலைவர் தனது பேச்சை ஆரம்பித்துக் கூறினார்.

"ஆசிரியர்கள் வேலை செய்யும் ஏனைய ஊழியர்களோடு ஒன்று சேர்வது முக்கியம். இதற்கு முன்பு ஆசிரியர்களாகிய நாங்கள் பல வேலை நிறுத்தங்கள் செய்தோம். விசேட பயிற்சி, சாதாரண பயிற்சிச் சம்பள வேறுபாட்டை சமமாக்கி சம்பளத்தை உயர்த்து

மாறு கோரி வேலை நிறுத்தம் செய்தமை உங்களுக்கு ஞாபகமிருக்கலாம். அதில் நாங்கள் வெற்றி பெற்றோம். அதிபர் ஒருவருக்கெதிராக இப்பிரதேசத்தில் ஆதிக்கம் உள்ள ஒருவர் மேற்கொண்ட அச்சுறுத்தலைக் கண்டித்து அடையாள வேலை நிறுத்தம் செய்து வெற்றிபெற்றோம். இப்பொழுது பல வேண்டுகோள்களை முன் வைத்து நடாத்தவிருக்கும் மாபெரும் வேலை நிறுத்தம் எங்கள் முன்னாலுள்ளது."

அவன் பாதணியில் காலூன்றி உடலின் முழுப்பாரத்தையும் முன்னால் கொடுத்து கொஞ்சம் நிமிர்ந்து பார்வையாளர் பக்கமாகப் பார்த்தான்.

"வாழ்க்கைச் செலவு உயர்வுக்கேற்ப எங்களால் ஓடமுடிகிறதா?"

அவரேதான் பதிலையும் சொன்னார்.

"'முடியாது. நாங்கள் வாழ்க்கைச் செலவின் ஒரு புள்ளி உயர்வுக்கு ஐந்து ரூபா தரும்படி கேட்கிறோம். முன்னூறு ரூபா சம்பளம் உயர்த்துமாறு கேட்கிறோம். தற்பொழுது சாதாரணமாக ஆசிரியர் ஒருவரின் சம்பளம் எவ்வளவு? எண்ணூறு ரூபா மாத்திரம் தான்......

"அந்தப் பணத்தால் எங்களால் என்னதான் செய்ய முடியும்? ஒருவாறு உயிரைத் தக்க வைத்துக் கொள்வதற்காகவாவது போதுமானதா? போதாது. ஆனால், எங்களது மந்திரிமார்கள் அரசாங்கம் அமைத்த உடனேயே அவர்களது சம்பளத்தை உயர்த்திக் கொண்டார்கள். எங்கள் சம்பளத்தையும் உயர்த்துமாறு கேட்ட கோரிக்கை கவனத்திற் கொள்ளப்படவில்லை. எங்களது பிரச்சினையைத் தீர்த்துக் கொள்ள உள்ள ஒரேவழி இதுதான். தொழிலாளர் வர்க்கம் முழுவதும் இதில் ஒன்று சேர்ந்தால் எங்களுக்கு வெற்றி நிச்சயம். எல்லோரும் ஒன்றுபட்டு அணிதிரள்வோம்."

ஆசிரியர் மத்தியில் குசுகுசுப்பு ஆரம்பித்தது.

பலர் வெளியேறினர்.

"வேலை நிறுத்தம் செய்தாலென்ன செய்யாவிட்டாலென்ன? கூட்டத்திற்கு நின்று விட்டுச் செல்லுங்கள்."

பேச்சாளர் உரத்த குரலில் சொன்னார். அவர்கள் மீண்டும் உள்ளே வந்தனர்.

“ஜூலை பதினேழில் வேலை நிறுத்தம் ஆரம்பிக்கிறது. ஆசிரியர்களாகிய நாங்கள் ஜூலை இருபத்திரண்டில் இறங்குகிறோம். இது தொடர்பாக நீங்கள் சேர்ந்து ஆலோசியுங்கள். அவசியமான அறிவுறுத்தல்கள் எங்களுக்குக் கொழும்பிலிருந்து கிடைக்கின்றன. தாமதிக்காது அவற்றை உங்களுக்கு அறியச் செய்வோம். பாடசாலை விடுவதற்கிடையில் நான் இன்னும் இரண்டு இடங்களுக்குப் போக வேண்டும். இப்பொழுது ஒரு முடிவெடுங்கள். வேலை நிறுத்தமும் வேலை செய்யும் மக்களும் வாழ்க.”

தலைவர் சென்றபின் ஆசிரியர்கள் அதுபற்றி ஆலோசித்தார்கள்.

“எனக்குக் கிடைக்கும் சம்பளம் தாராளமாகப் போதும். நான் இதற்கு விரும்பவில்லை.” என்றவாறு ரஞ்சனி மிஸ்தான் முதன் முதலில் வெளியே பாய்ந்தார்.

மேலும் இரண்டு ஆசிரியர்கள் அவருடைய பின்னால் சென்றனர்.

சிரிநாத ஸேர் மேசையருகிலிருந்து அவதானித்தார். குழுக் குழுவாகப் பிரிந்து ஆசிரியர்கள் கதையிலீடுபட்டனர். குலரத்ன மற்றும் விஜேரத்ன ஆகியோரும் கதவண்டை நின்றனர். அவர்களது முகங்களில் அச்ச உணர்வு காணப்பட்டது.

“எல்லோரும் செய்தால் நானும் செய்வேன்.” ஓர் ஆசிரியர் எல்லோருக்கும் கேட்கக் கூடியதாகச் சொன்னார்.

“எல்லோரும் செய்யப் போவதில்லை. ரஞ்சனியோடு எத்தனை பேர் சென்றார்களென்று பார்த்தீர்களா? அவர்கள் இதற்கு எதிரானவர்கள்” ஆசிரியை ஒருவர் தனது கருத்தை வெளியிட்டார்.

“ரஞ்சனி செய்தால் என்ன? அவர்களுக்குக் காணி உண்டு. வயல் உண்டு. வேலை இல்லாமல் போனாலும் பயம் இல்லை. எங்களுக்கு வேலை இல்லாமல் போனால் பிச்சைதான் எடுக்கவேணும்.” இன்னொரு ஆசிரியையின் கூற்று.

“இல்லாத இயலாதவர்கள் தான் எப்பொழுதும் வேலை நிறுத்தம் செய்கிறார்கள். இருப்பவர்களுக்கு ஸ்ட்ரைக் அவசியமில்லை. ரஞ்சனி செய்யவில்லை என்பதற்காக நாங்களும் செய்யாமல் விடுவது தவறு.” குலரத்ன ஸேர் உண்மையை உணர்த்தினார்.

"செய்வதென்றால் எல்லோரும் செய்ய வேணும்."

முதலில் பேசிய ஆசிரியை சொன்னார்.

"அதிபர் செய்வாரா?"

"அதிபர் செய்யப் போவதில்லை. அதனால் தான் கூட்டத்துக்கே வரவில்லை."

"நாங்கள் என்ன செய்ய?"

"அந்தக் கோரிக்கைகள் மிகவும் நியாயமானவை, சாதாரண மானவை. நாங்கள் வேலை நிறுத்தம் செய்தால் அரசாங்கத்துக்கு விளங்குமா? போக்குவரத்து, துறைமுகம், தொழிற்சாலை, தோட்டத் துறை, காரியாலயங்கள், ஆஸ்பத்திரி, வங்கிகள் செய்தால் தான் அதன் பாதிப்பு விளங்கும்."

"சரியாச் சொன்னீங்கள். அவங்கதான் வேலை நிறுத்தம் செய்ய வேணும்...... ம்.... வென்றால் எங்களுக்கும் சம்பளம் கூடும்."

"கோரிக்கைகளை ஏற்றுக் கொண்டால் அது எல்லோருக்கும் கிடைக்கும். ஸ்ட்ரைக் செய்யாதவர்களென்ற வேறுபாடு கிடையாது. ஒருமுறை யாரோ செய்தார்கள். எங்களுக்கும் பதினேழு ரூபா ஐம்பது சதம் கூடியது."

பலபேர் சிரித்தனர்.

"ஆசிரியர்கள் முன்மாதிரியாக இருக்க வேணும். வேலை நிறுத் தம் செய்து விட்டு எப்படி மாணவர்களுக்கு முகம் கொடுப்பது?"

நகரத்தில் பலகைக் கூடம் வைத்துள்ள ஆசிரியர் கேள்வி எழுப்பினார்.

"நாங்க ஸ்ட்ரைக் செய்வதென்றால் பிள்ளைகளுக்குப் படிப்பிக் காமல் இருப்பது தானே? அது சரியல்ல."

இன்னொரு ஆசிரியர் இணைந்து கொண்டார். அவர் டவுனில் சில்லறைக் கடை வைத்துக் கிராமத்தவர்களுக்கு வட்டிக்குப் பணம் கொடுப்பவர்.

"நாங்க சிரிநாத ஸேரிடம் கேட்போம். என்ன ஸ்ட்ரைக் செய்றதா?"

பலகை வியாபாரி வினவினார். சகலரது கண்களும் அவர் பக்கம் திரும்பின.

"யார் செய்தாலும் செய்யாவிட்டாலும் நான் செய்கிறன்."

அவரது வசனம் இன்னும் அவனது செவிகளில் எதிரொலிப்பதாகக் கமல் உணர்ந்தான்.

"அதிகமானவர்கள் அதற்கு விருப்பமில்லை."

சில்லறைக் கடைச் சொந்தக்கார ஆசிரியரின் கணிப்பு.

"அது எனக்குத் தெரியும். இருந்தாலும் நான் செய்கிறன். பாடசாலைக்கு வெளியே வேலை நிறுத்தம் செய்யும் ஏராளமானோர் இருக்கிறாங்க. இந்தக் கோரிக்கைகள் நியாயமானவை. இந்த நேரத்தில் நாம் இதற்கு கைகொடுக்காவிட்டால் என்றுமே எமக்கு வெற்றி கிட்டப் போவதில்லை."

சிரிநாத ஸேர் குலரத்ன மற்றும் விஜேரத்ன ஆசிரியர்களின் பக்கமாகத் திரும்பி அவ்வாறு கூறினார். எப்பொழுதும் சமூக அநீதிகளைப் பற்றிப் பேசும் அவர்கள் வேலைநிறுத்தத்திற்கு நிச்சயம் ஆதரவளிப்பார்களென்று அவர் எதிர் பார்த்திருப்பார்.

கமல், நிமல், பிரபாத் ஆகியோர் வீடு செல்லும் போது ஏதோ விபரீதம் நடக்கப் போகிறதென்று அனுமானித்துக் கொண்டனர்.

"சிரிநாத ஸேர் ஸ்ட்ரைக் செய்கிறார். புதிய ஸேர்மார் இருவரும் செய்யக் கூடும்." கமலின் ஊகம் இது.

"பருத்தித் தொழிற்சாலையில் வேலை நிறுத்தம் செய்து பொலிஸாரிடம் அடி வேண்டியது ஞாபகமா?"

பிரபாத் பழைய விடயமொன்றை நினைவூட்டினான்.

"ஆசிரியர்களுக்கு அப்படி அடிக்கமாட்டார்கள்" நிமல் கூறினான்.

வானொலி வேலை நிறுத்தம் செய்வோரை வேலையிலிருந்து நீக்குவதாக அடிக்கடி எச்சரிக்கை செய்தது.

வேலையற்ற பெருந்தொகையானோர் பதில் வேலை செய்ய முன்வருவதாகவும், வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோருக்கு எவ்வித மன்னிப்பும் வழங்குவதில்லையெனவும் பல அமைச்சர்கள் கூறினர்.

“வேலை நிறுத்தக்காரரை மயானத்துக்கு அனுப்புவதாக ஒரு மந்திரி கூறியமை கமலுக்கு அச்சத்தை ஏற்படுத்தியது.”

“சிரிநாத ஸேர் என்ன செய்து கொள்ளப் போகிறார்?” என்று நிமல், கேட்டான்.

“நான் ஆசிரியர் சங்க ஸேரின் கதையைக் கேட்டுக் கொண்டிருந்தேன். அவர் சொன்னபடி பார்த்தால் ஆசிரியர்கள் வேலை நிறுத்தம் செய்ய வேண்டும். ஆனால், அவர்களுக்குத் திரும்பவும் வேலை கிடைக்காது.” கமலின் பதில் இது.

“தொழிலுக்கு என்ன நடந்தாலும் நானொரு ஸேராக இருந்தால் ஸ்ட்ரைக் செய்வேன்.”

“உனக்கென்ன கெட்டபொல் இருக்கும் வரை நீ வீரன் தான். ஸ்ட்ரைக் செய்ய வேண்டாமென்று ஸேருக்குச் சொல்லுவோம்.” நிமல் யோசனை முன் வைத்தான்.

“ஸேருக்குப் புத்திசொல்ல நாங்கள் யார்?”

கமல் அடுத்த நாள் “ஸேர் நீங்கள் வேலை நிறுத்தம் செய்வதில்லையல்லவா?-” என்று கேட்டான்.

அவர் பதில் சொல்லவில்லை.

என்று மாலையில் கச்சேரி எழுதுநர் ஒருவரின் மகன் ஸிரிமலைக் கமல் சந்தித்தான்.

“இன்று கச்சேரியில் வேலை நிறுத்தம் ஆரம்பித்தாங்க. இன்னும் பல காரியாலயங்களிலும் ஸ்ட்ரைக். நாளை இன்னொரு கூட்டத்தினரும் சேர்றாங்க. உபேசிங்ஹ மாமாவும், மெத்தானந்த மாமாவும் தான் கச்சேரியில் ஒழுங்கு செய்றாங்க. நான் பார்க்கச் சென்றேன். எங்கட அப்பாவும் வேலை நிறுத்தம். அம்மா அப்பாவைப் பேசினார். அவர் அதனைக் கேட்கவில்லை. எல்லோரும் பனை மரத்தின் கீழ் ஒன்று கூடினர். கச்சேரியில் காசாளர் நோனாவின் சங்கம் ஸ்ட்ரைக் பண்ணவில்லை. ஆனாலும், அந்த நோனாவும் வந்து சேர்ந்தார். உங்கள் சங்கம் முடிவு செய்யாததால் வேலைக்குச் செல்லுமாறு அப்பா கேட்டுக் கொண்டார். அவர் சங்கத்தைத் திட்டி அழுதார். பின்னர் வேலை செய்தார். வேலை நிறுத்தம்

செய்தவர்கள் கூட்டமொன்று நடத்தி ஊர்வலமாகச் சுருட்டுக் கடைச் சந்திக்கு வந்தனர். பொலிஸார் பார்த்திருந்தனர். பிரச்சினைகள் ஏற்படவில்லை.”

ஸிரிமல்லின் பேச்சினால் கமலின் மனதிலிருந்த பயம் இல்லாமல் போய்விட்டது.

“வேலை நிறுத்தம் செய்தால் பொலிஸ் அடிப்பார்களாம்.” கமல் சஞ்சலப்பட்டான்.

“இல்லை. இன்று அடிக்கவில்லை.”

அன்று இரவு வானொலிச் செய்தி கேட்பதற்காகக் கமல் சந்திக் கடைக்குச் சென்றான்.

‘வேலை நிறுத்தம் செய்தவர்கள் அத்தனை பேரும் சேவையிலிருந்து விலகியவர்களாகக் கருதப்படுவர். அவர்களுக்குப் பதிலாகப் புதியவர்களைச் சேர்த்துக் கொள்ள அமைச்சரவை முடிவு செய்துள்ளது. தகைமையுள்ளவர்கள் இருபத்திரண்டாம் திகதி விண்ணப்பப் பத்திரம் மற்றும் சான்றிதழ்களுடன் பிரதேச அரச அதிபர் காரியாலயத்திற்கு வருகை தரவும்.’

இந்த வானொலிச் செய்தியைக் கேட்ட கமலுக்கு இரவுச் சாப்பாடு இறங்கவில்லை. விடிகாலையில் தான் அவனுக்கு நித்திரை கூட வந்தது. அடுத்த நாள் காலையில் கேட்ட ஆசிரியர்களின் கதைகளால் அவனது மனம் மேலும் சிக்கலடைந்தது.

“நேற்று இரவு செய்தி கேட்டீங்களா? அதில் சொல்றபடி பார்த்தால் வேலை நிறுத்தம் செய்தவர்களின் கதை அவ்வளவுதான். அது தற்கொலை செய்து கொள்வது போன்ற விஷயம்.” ஓர் ஆசிரியர் விபரித்தார்.

இருபத்தோராம் திகதி காலையில் ஆசிரியர் சங்கப் பிரதேசத் தலைவர் பாடசாலைக்கு வந்தார்.

“வேலை நிறுத்தம் வெற்றி. எல்லாப் பிரிவினரும் பங்குபற்றுகிறார்கள். ஆசிரியர்கள் என்ற வகையில் நாங்களும் சேர்கிறோம். காலையிலேயே பாடசாலைக்கு வந்து, கேற்றடியில் ஒன்று சேர்ந்து பின்னர் சென்றுவிடுங்கள். உள்ளே போக வேண்டாம். கூடி நிற்

போரைக் கைது செய்யுமாறு பொலிஸுக்கு உத்தரவிட்டுள்ளார்கள்." அவர் ஆசிரியர்களை நெறிப்படுத்தினார்.

அன்று இரவு அமைச்சரொருவர் நாட்டு மக்களுக்கு உரையாற்றினார்.

"வேலை நிறுத்தக்காரருக்கு மன்னிப்பில்லை. நாட்டைக் கட்டியெழுப்பி வரும் இவ்வேளையில் வேலை நிறுத்தத்தில் ஈடுபடுவோர் அநியாயக்காரர்கள்."

கமலின் பயந்த சுபாவம் அவனது அம்மாவுக்குத் தெரிந்தது.

"உனக்கென்ன தம்பி. விருப்பமானவங்கள் வேலை நிறுத்தம் செய்யட்டும். எங்களுக்கென்ன? வாழ்வதற்கு வேறு வழி இருப்பதால் தான் தொழிலை இல்லாமல் செய்து கொள்ளப் பார்க்கிறாங்கள். பிள்ளைகள் கூடினால் அதுபற்றித்தான் கதைக்கிறாங்கள். தங்கட பாடங்களை படிக்கவும் விருப்பமில்லை. யாராக இருந்தாலும் அரசாங்கத்துடன் முட்டப்போவது நல்லதுக்கல்ல."

கமலுக்குக் கோபம் வந்தது.

"அம்மாவுக்கு விளங்காது. ஸேராக்கள் வேலை நிறுத்தம் செல்வது விளையாட்டுக்கில்ல. ஒரு நியாயமான விஷயம். இருந்தும் அரசாங்கம் அவங்களை விலக்குறது."

அம்மாவுடன் இது பற்றிப் பேசிப் பயனில்லை. தன்னைப் பற்றி மட்டுமே யோசிக்கத்தான் அவளுக்குத் தெரியும். அவன் மெல்ல விலகிச் சென்றான்.

இருபத்திரண்டாம் திகதி காலையில் கமல் பாடசாலைக்குச் சென்றான்.

தாய் சத்தம் போடா விட்டால் அவன் காலையில் சாப்பிடாமல் தான் போயிருப்பான். இடையில் மகா வித்தியாலயத்தில் உயர்தரம் படிக்கம் சுனிலை சந்தித்தான். நீட்டக்கை சேட்டும் கறுப்புக் கால்சட்டையும் சப்பாத்துமாகக் கையிலொரு ஃபைலுடன் காணப்பட்டான். முகத்தில் சந்தோஷம் வேறு.

"சுனில் அண்ணா எங்கே போறீங்க?"

அவன் நின்றான்.

"தம்பி. உன் முகத்தில்தான் விழித்திருக்கேன். இன்று கச்சேரியில் நேர்முகப் பரீட்சையொன்று இருக்கு. ஸ்ட்ரைக் செய்தவங்களுக்குப் பதிலா புதியவங்களை எடுக்கிறாங்கள். பாராளுமன்ற உறுப்பினரும் வாறார். எனக்கு கட்சிக் கிளைச் செயலாளரின் கடிதம் இருப்பதால் வேலை நிச்சயம் கிடைக்கும்."

கமலின் உதடுகள் துடிதுடித்தன.

"இன்று எங்கள் ஸேரும் வேலை நிறுத்தம் செய்கிறார்."

சுனில் சிரித்தான்.

"நான் போறன். இப்பொழுதே கியூ ஆரம்பித்திருக்கும்."

அவன் மறையும் வரை பார்த்திருந்தான் கமல். சுனிலுக்கு வேலை கிடைக்கும். சிரிநாத ஸேருக்கு வேலை இல்லாமல் போகும். இந்த நேரத்தில் சுனிலின் நடவடிக்கை சரியானதா? நிச்சயமாக இல்லை.

கமலின் சிந்தனைகள் குழம்பின.

கமல் பாடசாலைக்குள் புகுந்தான். நுழைவாயிலில் ஆசிரியர்களது சைக்கிள்கள் காணப்பட்டன.

மற்ற நாட்களில் காலை ஏழரைக்குப் பிறகு வரும் ஆசிரியர்கள் இன்று ஏழுமணிக்கு முன்பே வருகை தந்திருந்தார்கள்.

கேற்றடியில் ஒருவரையும் காணவில்லை. ஆசிரியர் அறையும் மௌனம் சாதித்தது. கமல் கேற்றடிக்குச் சென்றான். நிமலும் பிரபாத்தும் வந்தார்கள்.

சிரிநாத ஸேர் சைக்கிளில் வந்திறங்கினார். சைக்கிளை மரத்தடியில் நிறுத்தி விட்டு பாதையைப் பார்த்தார். பாடசாலை அமைதியாயிருந்தது. ஒருவரும் இன்னும் வரவில்லையென அவர் எண்ணியிருப்பார். கமல் அவரருகே ஓடிவந்தான்.

"கமல் நாங்கள் இன்று உள்ளே வரமாட்டோம்." மெல்லிய புன்னகையோடு அவர் சொன்னார்.

"ஸேர்மார் மிஸ்மாரெல்லாம் உள்ளே இருக்கிறாங்கள்."

"அப்படியா?"

"ஏழு மணியாகும் போதே எல்லோரும் வந்திட்டாங்க."

அவர் குழப்ப நிலைக்குள்ளானார்.

"குலரத்ன ஸேருக்கு வரச் சொல்லுங்கள்."

"நல்லது ஸேர்."

குலரத்ன ஸேர் கேற்றடிக்கு வந்தார்.

"குலே, யாராவது கையொப்பமிட்டார்களா?"

"உன்னைத் தவிர எல்லோரும் கையொப்பமிட்டுள்ளார்கள்."

சிரிநாத ஸேரின் உதடுகள் இறுகின. அவர் சைக்கிளில் ஏறினார்.

"சிரிநாத"

குலரத்ன ஸேர் சத்தமிட்டார்.

"நீயும் உள்ளே வா. நீ மாத்திரம் ஸ்ட்ரைக் செய்து என்ன பிரயோசனம்? விஷர் வேலை செய்யாமல் வா."

அவர் நிறுத்தவில்லை. வீட்டுக்குப் போய்விட்டார்.

கமலும் நண்பர்களும் வெளியே பாய்ந்து அவர் மறையும் வரை பார்த்திருந்தனர்.

"சிரிநாத ஸேர். வேலை நிறுத்தம் செய்கிறார்."

அவன் வகுப்புக்குப் போய்ச் சொன்னான். என்ன நடந்ததென்று விளங்கிக் கொள்ள முடியாத நிலையில் முழு வகுப்பும் அமைதிக்குள் ஆழ்ந்து போனது. பிரபாத் மேசையில் தலையை வைத்துக் கொண்டான்.

அந்த அமைதியை முதலில் குலைத்தது மாலனிதான்.

"ஸ்ட்ரைக் செய்தவர்களை வேலை நீக்கம் செய்கிறார்கள்ல்லவா?" அவள் கமலிடம் வினவினாள்.

அவனுக்கு அவளது கேள்வி விளங்கவில்லை.

"ஸேரின் மனைவிக்கும் தொழில் இல்லை. இனி ஸேர் என்ன செய்யப் போறார்?" சுஜாதா கேட்டாள்.

"ஸேரின் மகனும் மகளும் இன்று பாடசாலைக்கு வரவில்லை." ஆரம்பப் பிரிவுக்குப் போய் வந்த நிமலின் அவதானம்.

காலை ஆராதனை ஆரம்பித்தது. நிமல் பஞ்சசீலம் சொல்வதற் கிருந்தான். கமலின் முகம் நிலத்தை நோக்கியிருந்தது. மாணவர்க ளுக்கு முன்பாக ஆசிரியர்கள் படிக்கட்டில் நின்றனர்.

பிள்ளைகளுக்கு ஏதோ குறைபாடு தெரிந்தது. ஆம் அந்தச் சிரித்த முகம் அங்கில்லை. மேல் வகுப்பு மாணவர்களின் முகம் இருண்டு போயிருப்பது அதிபருக்கு விளங்கியது. காலைக் கூட்டத் தின் பின்பு பிள்ளைகளை வகுப்புக்கனுப்பி விட்டு, ஆசிரியர் சிலரு டன் அவர் கலந்துரையாடினார்.

"மிஸ்டர் சிரிநாதவை எப்படியாவது வரப் பண்ணுவோம். அவருக் குக் கையொப்பமிட நான் இடம் வைக்கிறன்."

"ஆம் அப்படிச் செய்வோம் ஸேர். சிரிநாதவுடன் கதைப்பதற்குச் ஸேர் போனால் தான் நல்லது." குலரத்ன ஸேர் வலியுறுத்தினார்.

"ஸேர் போனால் நல்லது. நாங்கள் போனால் அவர் எங்களைப் பேசுவார்." விஜேரத்ன ஸேரும் உறுதிப்படுத்தினார்.

"அவருடைய விருப்பத்துக்கு இடம் கொடுப்பது தான் நல்லது." ரஞ்சனி மிஸ் கூறினார்.

அதிபர் கோபத்தோடு பார்த்தார். மீண்டும் அவர் சிரித்த முகத்துடன் அவளை நெருங்கினார்.

"அவர் கஷ்டத்தில் விழாமல் பாதுகாப்பது எங்களது கடமை."

அதிபர் சைக்கிளில் பாடசாலைக்கு வெளியே சென்றார். கமல் இத்தகவலை நிமலுக்கும் பிரபாத்துக்கும் சொன்னான்.

"சிரிநாத ஸேரை அழைத்து வரத்தான் அதிபர் சென்றார்." நிமலின் முகத்தில் ஒளி பரவியது.

"ஸேர் வரமாட்டார்."

"சரி பார்ப்போம்."

கொஞ்ச நேரத்தின் பின்பு அதிபர் அங்கு வந்தார். ஆசிரியர்கள் வாயிலருகே சென்றனர்.

"என்ன நடந்தது ஸேர்?"

"சிரிநாத முடிவை மாற்றுவதில்லை. வேலை நிறுத்தம் செய்த தாக லொக் போடச் சொன்னார். அவரது விருப்பமென்று மனைவி யும் அமைதியாக இருந்தார். என்னால் என்ன செய்ய முடியும்? எனது கடமையை நான் செய்தேன்."

அவர் உணர்ச்சி வசத்தோடு கதைத்தார்.

"மீண்டும் அவருக்குத் தொழில் கிடைக்கப் போவதில்லை. பெரிய நஷ்டம். எவ்வளவு நல்ல ஆசிரியர்." ரஞ்சனி மிஸ் ஆதங்கப் பட்டார்.

எதுவும் நடைபெறாதது போல் ஆசிரிய ஆசிரியைகள் வகுப்புக்க ளுக்குச் சென்றனர். பிள்ளைகளின் முகங்களை ஒரேயடியாய் பார்க்க முடியாமல் அவர்கள் திண்டாடுவது தெரிந்தது.

இடைவேளையின் போது இரண்டு பொலிஸ் உத்தியோகத்தர் களும் கல்வி அதிகாரியும் வந்தனர்.

தனது இதயம் வேகமாத் துடிப்பது போல் விளங்கியது கமலுக்கு. அவன் அதிபர் காரியாலயத்தருகே வந்தான்.

"எத்தனை பேர் ஸ்ட்ரைக்." பொலிஸ் அதிகாரி கேட்டார்.

"ஒருவர்"

"பெயர்?"

"சிரிநாத எம். கமகே"

"வதிவிடம்"

"இல54. புதிய பாதை"

பொலிஸ்ார் விடைபெற்றுச் சென்ற பின் கல்வி அதிகாரி கேள்வி தொடுத்தார்.

"என்னோடு அன்று தர்க்கம் செய்தது சிரிநாத அல்லவா?"

"ஆம் ஸேர்."

"திரும்பப் பள்ளிக்கூடத்துக்கென்றார் வரக் கிடைக்காது. அரசாங் கம் மிகவும் கடுமையாக நிற்கிறது. ஆசிரிய நியமனம் கொடுக்கப்

பொருத்தமானவர்களை இன்றே நாம் தெரிவு செய்றோம். ஸ்ட்ரைக் செய்தவர்களையும் பாடசாலைகளையும் அறிந்து வருமாறு மந்திரி கூறினார்."

பலகை வியாபாரியான ஆசிரியர் அந்த உரையாடலில் தலை போட்டார்.

"நாலைந்து ஆசிரியர்களென்றாலும் எனக்குத் தரமுடியும் ஸேர்."

அதிகாரி அவர் பக்கமாகத் திரும்பினார்.

"அதெப்படி? உங்கள் வீடுகளில் ஆசிரியர்கள் இருக்கிறாங்களா?"

"எங்கள் அக்காவின் பிள்ளைகள் நான்கு பேரும் பாஸ் பண்ணி விட்டு வீட்டிலே இருக்கிறாங்க. அவங்கள தரமுடியும்."

அதிகாரி சிரித்தார்.

"அண்ணே அப்படி எடுக்க முடியாது. மந்திரி தனக்கு வேண்டிய வர்களைத் தான் எடுப்பார்."

"அப்படியென்னா அந்தப் பிள்ளைகளத் தான் முதல்ல எடுப்பினம் ஸேர்."

சிறிது நேரத்தில் அதிகாரியும் சென்றார்.

கமல், நிமல், பிரபாத் ஆகியோர் வாழைமர நிழலில் கூடினர்.

"எங்க ஸேருக்குப் பதிலாகப் புதிய ஒருவரை எடுப்பாங்கள். அவர் மீண்டும் பாடசாலைக்கு வரப் போவதில்லை நிமல்."

"நாங்கள் மாலையில் ஸேர் வீட்டுக்குப் போவோமா?" நிமல் கேட்டான்.

"போவம்...... இருவரும் எங்கள் வீட்டுக்கு வாருங்கள்." கமல் உடன்பட்டான்.

சொன்னபடி மூவரும் சென்றனர்.

வீட்டின் முன்னால் சிறிய வாங்கில் அமர்ந்திருந்த சிரிநாத ஸேரின் கையில் பத்திரிகையொன்று காணப்பட்டது. உள்ளே வந்த மாணவர்களைக் கண்ட போது "ஆ... எப்படி?" என்று கேட்ட வாறு பத்திரிகையைத் தனது மகனிடம் கொடுத்தார்.

“தம்பி அந்த வாங்கைக் கொண்டு வாங்க” தனது மகனுக்குச் சொன்னார்.

“நாங்கள் கொண்டு வாறம்.” என்றவாறு வீட்டினுள்ளிருந்து வாங்கைக் கொண்டு வந்து அமர்ந்தனர்.

“நீங்கள் சும்மா இருக்க வேண்டாம் படியுங்கள். ஜூலை கடைசியாகி விட்டது. அடுத்த மாதம் ஆரம்பத்தில் பரீட்சை.”

நிமல் கமலைப் பார்த்தான். அவன் தங்களது ஸேரைப் பார்த்த படி நின்றான்.

“இப்பொழுது எங்களுக்குப் படிப்பது கஷ்டம்.”

“ஏன்?”

“ஸேர் இல்லையே”

“ம்.... நல்ல கதை. என்னை ஒருமுறை தூர இடத்துக்கு மாற்றப் பார்த்தவங்கள். அது நடந்திருந்தால் நீங்கள் படிப்பை விட்டிருப்பீங்களா? மீண்டும் நான் பாடசாலைக்கு வருவன். கொஞ்ச நாள் இப்படி இருக்க வேண்டி வரும். நன்றாகப் படிக்க வேண்டும். இப்போது உங்களுக்குள்ள பெரிய வேலை அது தானே.”

பிள்ளைகளின் முகத்தில் படர்ந்திருந்த இருள் சற்றே கலைவது போல் தெரிந்தது.

“ஸ்ட்ரைக் செய்தவங்களுக்குப் பதிலாக புது ஆக்கள் எடுக்கப் போகிறார்களாமே.”

“கேள்விப்பட்டன் கமல். சுனிலுக்குச் சரிவரலாம். தொழில இல்லாதிருப்பவர்கள் இப்படியான சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்ள வருவார்கள். அவங்களுக்கு நான் குற்றம் சொல்லவில்லை. ஆனால் உண்மையில் அவர்கள் செய்வது.......வேலை நிறுத்தத்தை முறியடித்து அரசுக்கு உதவுவதுதான்.”

“இந்தப் பகுதியில் மற்றப் பாடசாலைகளிலும் ஓரிருவர்தான் ஸ்ட்ரைக் செய்திருக்கிறார்களாம்.”

“ஆம் ஆசிரியர்கள் மிகவும் குறைவு நிமல். எழுதுவினைஞர்களில் பெரும்பாலானவர்கள் ஸ்ட்ரைக். அரசாங்க கூட்டுத்தாபன

ஊழியர்களில் பெரும்பாலானவர்கள் இன்னும் ஸ்ட்ரைக்கிற்கு சேரவில்லை. வங்கி, வைத்தியசாலை, போக்குவரத்து துறைமுகம் என்பன நாளை ஆரம்பிக்கின்றன. அரசாங்கத்தின் இறுக்கம் குறையும்."

"கொஞ்சப் பேர் தான் வந்தால்?"

"நிச்சயமாக அதிகம் பேர் வருவார்கள். அவர்களுக்கு ஸ்ட்ரைக்கெல்லாம் பழக்கம். தற்செயலாக வராவிட்டால் ஸ்ட்ரைக் செய்தவர்கள் பாடு அதோ கதிதான்."

சுனீதவும் கதைக்குப் பங்காளியானார்.

"கமல் அண்ணா! நேற்று இரவு பஸ் சத்தம் எப்போது குறையுமென்று எதிர்பார்த்துக் கொண்டிருந்தோம்."

சிரிநாத ஸேரின் மனைவியும் பயந்த முகபாவத்தோடு வெளியே வந்தார்.

"ஸேரை அழைக்க அதிபர் வந்தாரல்லவா?" பிரபாத் கேட்டான்.

"அதிபர் என்னோடு கதைத்தார். என்னுடைய நன்மைக்காகத்தான். இருந்தும் எனக்கு வேலை நிறுத்தத்தைக் கைவிட முடியவில்லை. முழு நாட்டிலும் இப்பொழுது ஐம்பதினாயிரம் பேர் ஸ்ட்ரைக். புகைவண்டி ஓடவில்லை. எல்லாக் கந்தோர்களிலும் வேலை இடை நடுவில்..... எப்படி நான் யோ கையொப்பமிட முடியும். எல்லாம் நல்லபடியாக யோசித்து விட்டே நான் இதில் சேர்ந்தேன். வேலை இல்லாமல் போனாலும் பரவாயில்லை. நான் எனது வர்க்கப் போராட்டத்துக்குக் கைகொடுக்கிறன்"

"பள்ளிக்கூடத்துக்குப் பொலிஸும் வந்தது."

"என் பெயரை எழுதிச் சென்றிருப்பார்கள். அருகாமையிலுள்ள பாடசாலைகளில் ஒருவர் இருவராவது ஸ்ட்ரைக் செய்துள்ளார்கள். ஆப்தீன் ஸேர் ஸ்ட்ரைக் செய்த உடனே உப்பளத்துக்குப் போய்


விட்டாராம். உப்பு வியாபாரம் செய்ய முடியுமா என்று பார்க்க. ஹேவாவிதான ஸேர் தேயிலைத் தூள் விற்கிறாராம். ஆரியஸிரி ஸேர், சோமபால ஸேர், ரணவீர ஸேர், சன்தியஸ் ஸேர் இவர்களெல்லாம் ஸ்ட்ரைக். வேலை இல்லாவிட்டாலும் நான் ஏதாவது செய்து வாழ்வேன். நீங்கள் கவலைப்படாமல் படியுங்கள்."

கமல் நண்பர்களோடு வெளிவரத் தயாரானான்.

"தேநீர் குடித்து விட்டுப் போக இருங்க." சிரிநாத ஸேரின் மனைவி சமையலறையிலிருந்து வேண்டினாள்.

என்றாலும் அவர்கள் நிற்கவில்லை.

அந்த நிகழ்வு கமலின் நெஞ்சிலே மீண்டும். எழுந்தது. புத்தகம் படிக்க மனதில் நிம்மதி இருக்கவில்லை.



# 6

கமல் மீண்டும் கட்டிலிலிருந்து இறங்கினான். அப்பா மண் வெட்டியைச் சுத்தம் செய்யும் சத்தம் கேட்டது.

பழைய மண்வெட்டி தேய்ந்து போனதால் நேற்றுக் கொண்டு வந்த மண்வெட்டிக்கு புதுப்பிடி பொருத்தப்பட்டது.

"அவங்களுக்கு இடிவிழ வேணும். ஒரு மண்வெட்டித் தலை நூற்றைம்பது ரூபா. எங்கள் ஒரு குறுணி நெல் எவ்வளவு?"

நேற்றுப் புதிய மண்வெட்டியை அம்மாவுக்குக் காட்டி அப்பா சொன்னவிதம் கமலுக்கு ஞாபகம் வந்தது.

"மண்வெட்டி மாத்திரமா? இப்பொழுது என்னதான் லாபம்? பசளை, எண்ணெய்.... எல்லாம் காலத்துக்குக் காலம் விலை உயர்கிறது. எங்கள் சாமான்கள் இரண்டு துட்டுக்கு மேல் போகவில்லை. பிலிகண்ண சுரைக்காய் அவ்வளவு பெரிதாக இருந்தும், எட்டு ரூபாய்க்குத் தான் விற்க முடிந்தது."

அம்மா விடவில்லை.

"அதுதான் இடிவிழ வேண்டுமென்று சொன்னன். சிரிநாத ஸேர் முன்னூறு ரூபா சம்பளம் உயர்வு கேட்டு ஸ்ட்ரைக் செய்தது சரி தானே. விலைவாசி உயர்வைப் பார்க்கும் போது அந்த முன்னூறு ரூபாவால் என்னதான் செய்ய முடியும்!"

மண்வெட்டித் தலைக்குப் பிடிபொருத்தி ஆணியடித்து இறுக்கிய அப்பா, யன்னலுக்குள்ளால் தலையை நீட்டி கமல் படிக்கிறானா என்று பார்க்க எத்தனித்தார்.

"நீ படிக்கிறீயா? அல்லது நித்திரையா? முன்பு பார்த்த போது நீ தூக்கம். இன்று ஆய்ந்த மிளகாயைக் கட்டிலுக்கடியே பரத் திவை. நாளைக்கு ரவுணுக்குக் கொண்டு போக வேணும்."

கொட்டாவி விட்டபடி அவன் வெளியே வந்தான். முகம் கழுவிக் கொண்டு கொட்டில் கட்டிலுக்குக் கீழே மிளகாயைப் பரவி வைத்தான்.

பளபளப்பான பச்சை மிளகாய். அம்மா பறித்த பச்சை மிள காயை நாளைக்குச் சந்தைக்குக் கொண்டு போவதும் அம்மாவே தான். வியாபாரிகளின் குள்ளத்தனங்களை அம்மா சொல்லிச் சிரிப் பது அவனுக்கு ஞாபகம்.

"மூட்டையைக் கையால் அழுத்திக் கொண்டு குறைத்து நிறுப் பார்கள். கையை எடுத்து விட்டு நிறுக்கச் சொன்ன போது ஒரு கிலோ கூடிவிட்டது."

அப்பாவும் சிரித்தார்.

"உடபீல்லகொட நோனாவை அவர்களால் ஏமாற்ற முடியுமா? இந்தச் சந்தைகளில் நடக்கும் தில்லு முல்லுகள் இப்போது விவசாயி களுக்கு நன்றாகத் தெரியும். முன்பு போல் எம்மவர்கள் அவங்க ளுக்கு ஏமாறுவதில்லை."

மிளகாயைப் பரத்திவிட்டு சமையலறைக்குச் சென்ற போது பாய்த் துண்டொன்றில் அம்மா தூங்குவது தெரிந்தது. காலை முதல கஷ்டப் பட்டு உயிரை மாய்த்த அவளுக்கு இப்பொழுதுதான் சற்று ஓய்வு கிடைத்திருந்தது.

அவனுக்கு அனுதாபம் பிறந்தது.

"தம்பி"

அப்பாவின் குரலுக்குக் கமல் வெளியே வந்தான்.

"மாலை வேளைக்கு உனக்கு வயலுக்குப் போக முடியுமா? கிளிகள் நிறைந்து விடும். டகே இழுப்பதாலோ, குருத்துத் தூக்குவதாலோ அவை பயப்படுவதில்லை."

அப்பாவின் சத்தத்துக்கு விழித்துவிட்ட அம்மா படுத்த பாயிலி ருந்த படியே பதில் சொன்னாள்.

"இவனுக்கு அடுத்த வாரம் பரீட்சை. நான் வயலுக்குப் போறன்."

அம்மாவும் முற்றத்துக்கு வந்தாள்.

"பரவாயில்லை அம்மா நான் போறன். புத்தகத்தையும் எடுத்துச் சென்றால் மாமரத்தின் கீழிருந்து படிக்கவும் முடியும். கிளி விரட்ட முடியும்."

வயலில் நெல் முற்றியிருந்தது. கற்பாங்கான மேட்டுப் பகுதியில் மாமரம் ஒன்று நின்றது. அதன் கீழ் அமைக்கப்பட்டுள்ள கொட்டிலுக்கு அப்பா இரவில் வருவார். விடியும் வரை விழித்திருப்பார். பன்றிகளுக்கோ முயல்களுக்கோ வயலை நாசம் பண்ண இடம் கொடுக்க மாட்டார்.

அவர்கள் வரும் போது கிளிகள் காணப்படவில்லை.

சூரியன் இறங்கிச் செல்கையில் கிளிகளால் வயல்வெளி மூடப் பட்டிருக்கும். கொட்டிலிலிருந்து 'டகே'யை இழுக்கும் போது......... சத்தமிடும் போது...... கிளிகள் பறந்து விடும். அப்போது வானம் கிளகளால் மறையும்.

நிமல் சத்தமிட்டுப் புத்தகத்தை வாசித்தான்.

கமலும் பிரபாத்தும் அதைக் கேட்டிருந்தனர்.

"இன்னும் சத்தமாகச் சொல்லு. அப்போது கிளிகள் வராது." கமல் பகிடி விட்டான்.

சிறிது நேரத்துக்குப் பின் புத்தகம் மூடப்பட்டது.

முதல் கேள்வியைக் கமல் எழுப்பினான்.

பிரபாத் பதில் சொன்னான். அவர்கள் கேள்வி கேட்டு, பதில் சொல்லி, வாசித்த பகுதியைக் கலந்துரையாடினர்.

வெய்யிலின் அகோரம் குறைந்திருந்தது.

நிமல் கொட்டாவி விட்டான்.

"இன்னும் கிளிகளைக் காணவில்லை."

கமலின் கண்கள் வானில் சிறகடித்தன.

கிளிக் கூட்டமொன்று வயலுக்கு இறங்கிக் கொண்டிருந்தது.

"சூ....... சூ......" அவன் சத்தமிட்டான்.

"சோடி பொலே சோஹா"

"நான் வருவேன் சோஹா"

நிமலும் பிரபாத்தும் தாளத்துக்குப் பாடினர்.

கிளிகள் மீண்டும் வானுக்குத் தாவின.

"அதோ வண்டில் வீட்டு மாமாவின் வயலுக்கு இறங்குது." என்றவாறு கமல் வரப்பினூடாக ஓடினான். தை தட்டினான். கிளிகள் பாதையை மாற்றின.

"அவை பற்றி எனக்குக் கவலை." நிமல் சொன்னான்.

"எனக்குக் கவலை அவை பற்றியல்ல." கமல் குறுக்கிட்டான்.

"அப்போ?"

"சிரிநாத ஸேரைப் பற்றி"

மூவரும் சொற்ப வேளை அமைதி காத்தனர்.

"இனி நாங்கள் என்ன செய்யலாம்?" பிரபாத் சிந்தித்தான்.

"ஸேர் நிறையத் துன்பப்படுகிறார். வேலை இல்லாமல் போய் மூன்று மாதமாகி விட்டது. நாங்கள் ஸேரைப் பற்றி யோசிக் கவில்லை. ஸேர் எங்களைப் பற்றி- எங்கள் கல்வியைப் பற்றி எப்பொழுதும் யோசித்தார். நாங்கள் நோய்வாய்ப்பட்டுப் பாட சாலைக்குச் செல்லாவிட்டால்- தேடிக் கொண்டு வீட்டுக்கு வருவார். டாக்டரிம் போகாமல் வீட்டு வைத்தியம் செய்தமைக்காக ஸேர் ஒருமுறை எங்கள் அப்பாவுக்கு ஏசினார். பிள்ளைகள் பாடத்தில் பின்தங்கும் போது காரணம் என்னவென்று தேடிப் பார்த்தார். அப்படியெல்லாம் செய்த ஸேர் இப்பொழுது துன்பப்படுகிறார். எங்களைக் காணும் போது அவர் முன்பு போல் சிரிக்கிறார். ஸேரின் முகம் வாடிப் போயிருக்கிறது. மீண்டும் அவருக்கு வேலை கிடைக்கப் போவதில்லை. நாங்கள் ஸேருக்காக ஏதாவது செய்ய வேண்டும்." கமலால் தாங்க முடியவில்லை.

"ஸேர் இந்த அளவுக்குத் துன்பப்படுவாரென்று நாங்கள் நம்பவில்லை." பிரபாத் கவலை தெரிவித்தான்.

"சிரிமல்லின் அப்பா வைத்தியச் சான்றிதழ் கொடுத்துத் தொழில் எடுக்கப் போறாராம்." நிமலின் புதுத் தகவல்.

"நானும் கேள்விப்பட்டன். 'நாங்கள் ஸ்ட்ரைக் செய்யவில்லை. அன்று சுகவீனமுற்றோம்' என்று வைத்தியச் சான்று கொடுத்து சிலர் வேலைக்குப் போகின்றனர். இன்னும் சிலர் மந்திரியிடம் மன்னிப்புக்கோரி வேலை பெற்றார்களாம். சிரிநாத ஸேர் இதற் கெல்லாம் விருப்பமில்லை. பியலின் அப்பா மந்திரியின் ஆளாம். அவரும் வந்து கதைத்தாராம். பசியால் செத்தாலும் அவரிடம போக மாட்டேன் என்றாராம். பியலின் தந்தைக்குக் கோபம் வந்து விட்டதாம்."

"ஸேரிடம் கடிதமெடுக்க அதிபர் முயற்சித்திருக்கிறார். ஆசிரியர் சங்கத்தின் தலையீட்டால் தெரியாமல் செய்த தவறென்று, அன்று ஸேருக்குப் பேய்க்கோபம் வந்ததாம். என்னை ஏமாற்ற நான் சிறு பிள்ளையல்ல, எனக்குத் தேவையென்பதால் தான் ஸ்ட்ரைக் செய்தேன். நியாயமான புத்திபூர்வமான கோரிக்கைகளின் அடிப் படையிலேயே நான் பங்குபற்றினேன். அது எனது கடமை. பெரியவ ர்கள் நாட்டின் வளங்களால் சுகம் அனுபவிக்கிறார்கள். அவர்களின் சம்பளத்தை உயர்த்திக் கொள்கின்றனர். வெளி நாட்டுக்குப போகி ன்றனர். கொண்டாட்டங்கள் நடத்துகின்றனர். அதற்கிடையில் அதற் குப் பணம் பெறச் சாமான்களின் விலையை உயர்த்துகின்றனர். 'எங்கள் சம்பளம் உயிரைத் தக்க வைக்கவும் போதாது. நாங்கள் சம்பளத்தைக் கூட்டிக் கேட்டால் அது தவறா? எங்களைச் சேர்ந்த எத்தனையோ பேர் தற்கொலை செய்து விட்டார்கள். இருந்தாலும், எனக்கு அப்படியொரு கடிதத்தில் கையொப்பமிட முடியாதென சிரிநாத ஸேர் அதிபருக்குச் சொன்னாராம்."

கிளிக் கூட்டமொன்று வயலுக்கு இறங்குவது தெரிந்தது. பிரபாத் 'டகே'யை இழுத்தான். அடுத்தவர்கள் சத்தமிட்டனர். கிளிகள் மீண்டும் மேலே பறந்தன.

வானம் சிவந்தது. சூரியன் மலைகளிடையே அமிழ்ந்து கொண்டிருந்தது.

"இந்தச் சூடுமிதிக்கும் இடங்களால் நெல் சேர்த்து ஸேருக்குக் கொடுப்போம். ஸேருக்கு அந்த நெல்லை விற்றுக் கொள்ள முடியும்."

நிமல் கமலைப் பார்த்தபடி கருத்துத் தெரிவித்தான்.

"அது நல்ல யோசனை- நாங்கள் நெல் சேகரிப்போம்."

கமலின் முகத்தில் சிரிப்பேறியது.

"உங்களுக்கு ஸேரைப் பற்றித் தெரியாது. இதற்கெல்லாம் அவர் விரும்பப் போவதில்லை."

"ஸேர் விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் நாங்கள் அதைச் செய்ய வேணும்."

"ஸேரிடம் கேட்போம்."

"அவரிடம் பேச்சுக் கேட்டுக் கொள்ளத்தான்."

"கமல் நாங்கள் ஏதாவது செய்வோம். பிரபாத்தின் யோசனைக்கு நான் விருப்பம். இன்று இரவு ஸேரைச் சந்திப்போம். அடுத்த வாரம் முதல் சூடு மிதிக்கும் இடங்களால் நெல் சேர்ப்போம்."

நிமல் பிரபாத்தின் யோசனையை உறுதிப்படுத்தினான்.

"நீங்கள் இரண்டு பேரும் சொல்வதால் தான் நானும் அதற்கு விரும்புறன். இப்பொழுதே நாம் அவரைச் சந்திப்பதற்காகச் செல்வோம். இரவானால் வீட்டில் பயப்படுவார்கள்." கமல் அச்சம் தெரிவித்தான்.

"கிளிகள் வரும் நேரம் பிந்திவிட்டது."

"நாங்க ஸேரின் வீட்டுக்குப் போவோம்."

"வீட்டுக்குச் சொல்லாமல் இப்படிப் போவது சரியில்லை."

வயலிலிருந்து வெளிப்பட்ட வண்ணம் கமல் சொன்னான்.

"அதோ வண்டில் வீட்டு மாமா வருகிறார்."

கமலுக்கு மாமாவைக் காட்டினான் நிமல்.

"எங்கள் வீடுகளில் சொல்லுமாறு அவரிடம் கூறுவோம்." பிரபாத் யோசனை தெரிவித்தான்.

"இரவாகும் வரை நிற்க வேண்டாம்." வண்டில் மாமா, எச்சரிக்கை யுடன் அவர்களது வேண்டுகோளை ஏற்றார்.

அவர்கள் பிரதான பாதையூடாகப் பயணித்தனர்.

சிரிநாத ஸேரின் வீட்டின் முன்னால் சுனீதா நிற்பது அவர்களுக் குத் தெரிந்தது. அவன் இரு தேங்காய்களுடன் பின்பக்கமாகச் சென்றான். அவனது தங்கை தீபானி கூட தேங்காயொன்றை நிலத்தில் உருட்டியபடி சென்றாள்.

"தம்பீ"

கமல் சுனீதவை அழைத்தான்.

அவன் பிற்பக்கமாகத் தேங்காய்களை வீசி விட்டு முன்னே ஓடி வந்தான்.

"அப்பா எங்கே?"

"வாருங்கள் காட்டுறன்...."

சுனீத வீட்டுக்குப் பின்பக்கமாக ஓடினான். தீபானி தலையைச் சொறிந்தபடி சிரித்தாள்.

"அப்பா தேங்காய் உரிக்கிறார்."

வீட்டின் பக்கம் உரித்த தேங்காய் குவியலொன்றும் உரிமட்டைக் குவியலொன்றும் காணப்பட்டது. அவற்றுக்கிடையே உளியில தேங்கா யொன்றைக் குத்திக் கொண்டிருந்த சிரிநாத ஸேர் தலையை உயர்த் திப் பார்த்தார். அவரது உடல் வியர்வையால் குளித்திருந்திருந்தது.

"எப்படி?" என்று கேட்டபடி உரித்த தேங்காயொன்றை சாக்கினு ள்ளே இட்டார்.

"நான் புதிய வேலையொன்று ஆரம்பித்திட்டன். நீங்கள் தம்பியு டன் போய் முன்னே இருங்கள். இன்னும் பத்துக்கு மேல் கிடை யாது. அதையும் உரித்து விட்டே வாறன்."

கமல் நிமலைப் பார்த்தான்.

ஸேர் நாங்கள் இந்த மட்டைகளைக் குவியலுக்குப் போடுறோம்.

"அதைப் பிறகு செய்து கொள்ளலாம்."

ஆனாலும் அவர்கள் மூவரும் உரிமட்டையை குவித்தார்கள். காய்களை சாக்குப் பைகளில் இட்டனர். மூன்று சாக்குகள் நிறைந்து விட்டன.

"ஸேர் தேங்காய் வியாபாரம் ஆரம்பித்தது எங்களுக்குத் தெரியாது."

பிரபாத் சொன்னான். ஸேரின் கண்கள் அவன் பக்கம் திரும்பின.

"இன்று...... இன்றுதான் ஆரம்பித்தன். தெரியுந்தான் திக்கு வல்லைத் தோட்டத்து விஜேஸிரி ஐயா. அவர் எனக்கு நூறு தேங் காய் தந்தார். உடனே காசு கொடுக்கவில்லை. மிகவும் குறைந்த விலைக்குத்தான் கிடைத்தது. ஸ்ட்ரைக் செய்த எத்தனையோ பேர் அந்த விதமாகத் தேங்காய் கொண்டு போகிறார்கள்."

"எங்கே வைத்து விற்கப் போறீங்கள்?"

"நாளைக்கு அம்பலந்தோட்டைச் சந்தை. அது பெரிய தேங்காய் அல்லவா? இரண்டு ரூபாவுக்குக் கொடுக்கலாம். ஒரு ரூபாய்க கணக்கில் தான் ஐயாவுக்குக் கொடுப்பேன். நூறையும் விற்றால் நூறு ரூபாய் லாபம்? எப்படி?"

"ஸேர் இதில் முற்றாதவையும் உண்டு."

"அப்படியா?"

"அவற்றை இரண்டு ரூபாவுக்குக் கொடுக்க முடியாது."

சிரிநாத ஸேரின் மனைவி சமையலறையிலிருந்து வெளியே வந்தாள்.

"இதுக்குப் பிறகு தேங்காய் தெரிவதற்குக் கமலுடன் செல்லுங் கள். காயை ஆட்டி தண்ணீர் ஆடாததைச் சொல்லுவான்."

தேங்காயை உளியை இடுங்கி சுவருக்குச் சேர்த்த சிரிநாத ஸேர் அவர்களோடு வீட்டுச் சாலைக்கு வந்தார்.

"இரவு நெருங்குது. வீட்டுக்குச் சொல்லிவிட்டா வந்தீங்கள்?"

"ஆம் இங்கு வருவதாகச் சொன்னோம்."

"அந்த அரிசிப்பை தெரிகிறதல்லவா? கமலின் அப்பா கொண்டு வந்தார். உங்கள் வாழ்க்கை பற்றி எனக்குத் தெரியும். இப்படிக் கொண்டு வரவேண்டாமென்று சொல்லுங்கள். சரி ஏன் வந்த நீங்கள்?"

கமலின் உதடுகள் சிக்கின. பிரபாத் பெருவிரலால் நிலத்தில் கீறினான். நிமல் நாடியைச் சொறிந்தான்.

"ஏதொவொரு பிரச்சினை இருக்கு." சிரிநாத ஸேர் யோசித்தார்.

"ஸேர் நாங்கள் மூவரும் கதைத்தோம்." பிரபாத் ஆரம்பித்தான்.

"என்ன விஷயம்?"

அவன் பின் வாங்கினான். நிமல் முன் வந்தான்.

"ஸேர் வேண்டாமென்று சொல்லாவிட்டால் சூடு மிதிக்கும் இடங்களால் எங்களுக்கு நெல் சேர்த்துத் தரமுடியும்."

சிரிநாத ஸேரின் முகத்தில் உதித்த சிரிப்பு நொடிப் பொழுதில் காணாமல் போய் விட்டது.

"அகதி உதவியாக....... பொது வேலைகளுக்காக..... இவ்வா றெல்லாம் செய்வதுண்டு. எனக்குச் சேர்த்துக் கொடுக்கும் படி யாராவது சொன்னார்களா?"

மீண்டும் அவர் முகத்தில் அந்தச் சிரிப்பு மலர்ந்தது.

"பிள்ளைகளே! நீங்கள் மிகவும் அன்பானவர்களென்று எனக்குத் தெரியும். இந்தக் கருத்தை வெளியே யாரிடமாவது சொன்னீங்களா? சொல்லாதிருந்தால் நல்லது. நான் அகதியல்ல. மாத இறுதியில் நிரந்தர ஆதாயமொன்று எனக்கிருந்தது. இப்பொழுது அது இல்லை. அந்நாட்களிலும் எனக்குப் பெரிதாகப் பணம் கிடைக்கவில்லை. சந்தோஷமாக வாழவுமில்லை. எப்படியோ வாழ்ந்தேன். என்பது தான் உண்மை. ஆசிரியர் ஒருவருக்கு முப்பது ரூபாவிலும் குறைந்த பணமே கிடைத்தது. நாளைக்கு என்னால் நூறு ரூபா அளவில் தேடிக் கொள்ள முடியும்."

அவர்களின் முகத்தில் பயம் கவிந்த வெட்கம் படர்ந்தது.

"நான் எப்படியாவது நாட்களை நகர்த்துவேன். அன்பளிப்பை ஆரம்பிக்க வேண்டாம். வேலை நிறுத்தம் காரணமாக எனது வேலை இல்லாமல் போனது. அதற்காக நான் கவலைப்படவில்லை. அது எனது வர்க்கக் கடமை. எனக்குத் தொழில் இல்லாமல் போனமைக்காக இந்த ஊர் விவசாயிகள் அவர்களது சிறிய வருவாயில் ஒரு பகுதியை எனக்காக வேறாக்குவதை நான விரும்ப

வில்லை. உங்களுக்கு மிகவும் நன்றி. இப்பொழுது இரவாகிவிட்டது. நீங்கள் வீட்டுக்குச் செல்லுங்கள். நாளைக்குச் சந்தைக்குப் போக வண்டில் ஏற்பாடு பண்ண வேண்டியுள்ளது."

மூன்று நண்பர்களதும் கண்கள் கீழ் நோக்கியிருந்தன. கமல் தலையை நிமிர்த்தினான்.

"நாங்கள் போகும் வழியில் அல்லிஸ் தாத்தாவின் வண்டிலுக்குச் சொல்லிவிட்டுப் போறம்."

"வேண்டாம் கமல், எப்படியும் நான் சந்திக்குப் போக வேணும். அப்பொழுது வண்டிலுக்குச் சொல்லலாம் தானே."

பிள்ளைகளோடு சிரிநாத ஸேரும் வெளியே வந்தார். வீட்டினுள் முனகல் சத்தம் கேட்டது. சிரிநாத ஸேரின் மனைவியின் தகப்பன் கடந்த ஒருவருடமாகச் சுகவீனமுற்றிருக்கிறார்.

அவர்கள் ஆசிரியரை வணங்கி வீதிக்கு வந்தார்கள்.

"ஸேரின் கருத்துக்கள் புதிது." நிமல் வியந்தான்.

"அதுதான் மிகவும் கவனமாகப் பேச வேண்டும். ஸேர் இன்று நூறு தேங்காய் உரித்திருக்கிறார். அதை அவர் பொருட்படுத்த வில்லை. சும்மா புண்ணியத்துக்குக் கிடைப்பதை அவர் விரும்ப வில்லை."

இரவு மிக விரைவாக ஊரைப் போர்த்திக் கொண்டது. வயல் வெளி கொட்டில்களில் ஒளிரும் விளக்குகள் கடலில் தோணிகளின் வெளிச்சம் போல் தெரிந்தது. வௌவாலுக்கு அகப்பட்ட காகம் காகாவென்று ஆழமான குரலில் கத்தியது. வயலுக்கு மத்தியில் ஓலைத் தீபந்தம் அசைவது தெரிந்தது.

நிசப்தமாகப் பயணம் தொடர்ந்தது. மூவருக்கும் ஒரே பிரச்சினை தான்.

சிரிநாத ஸேர் சந்தையில் தேங்காய் விற்கும் காட்சி கமலின் மனதில் தெரிந்தது. உடனே அதனை மறந்து, நாளை காலையில் பாடசாலையில் அது பற்றி முடிவெடுப்போம் என்று எண்ணினான்.



# 7

இடைவேளைக்குப் பின்பு மிஸ் வகுப்புக்கு வராததால் கமல் ஆசிரியர் அறைக்குச் சென்றான்.

அங்கே சிரிப்பொலி எதிரொலித்தது.

சுடுநீர்ப் போத்தலுடன் ஒரு மிஸ் கதவருகே நின்றார். உள்ளே கதைப்பது வெகு தூரத்துக்குக் கேட்டது.

அவனது காதிலும் சில வார்த்தைகள் விழுந்தன.

"நான் காரிலிருந்து தலையை நீட்டிப் பார்த்தன். தேங்காய்க் குவியலுக்கருகே சிரிநாத நின்றார். தொப்பி ஸாரத்துடன்! பாவம் தேங்காய்க் குவியலைப் பார்த்துப் பார்த்து சனம் போய்க் கொண்டிருந்தது. ஒருவருமே தேங்காய் வாங்கவில்லை."

அது ரஞ்சனி மிஸ்ஸின் குரல்.

"சனங்கள் பழகிய வியாபாரிகளிடம் தான் சாமான் வேண்டுவார்கள். கடைசியில் எவ்வளவுக்கென்றாலும் விற்று விட்டு வருவார்."

அக்குரல் ஆசிரியர் ஒருவருடையது.

"அவர் ஹம்பாந்தோட்டைச் சந்தையில் அரிசி விற்றார். அரைவாசி விற்றுள்ளார் போல் தெரிந்தது. நானென்றால் வேண்ட வில்லை. வெட்கப்படுவார்தானே."

இன்னொரு ஆசிரியையும் சேர்ந்து கொண்டார்.

"இந்த வேலையால் எங்களுக்கும் வெட்கம். சீ......... சந்தையில் அரிசியும் தேங்காயும் விற்கும் வெட்கம் கெட்ட வேலைக்கு அவர் எப்படிப் போய் விழுந்தார்." ரஞ்சனி ஆசிரியை மேலும் கிளறினார்.

"தூரப் பகுதிக்குப் போய் விற்கலாம் தானே? மிஸ்டர் ஆப்தீன் கொழும்புக்கு உப்புக் கொண்டு போகிறாராம். நல்ல பிழைப்பு அவருக்கு. பாருங்களேன். ஒரு லொறிக்கு முன்னூறு ரூபா லாப மாம். நாங்கள் மாதத்துக்கு உழைப்பதை ஆப்தீன் இரண்டு வாரத் தில் தேடுறார்." இன்னொரு ஆசிரியையும் சேர்ந்து கொண்டார்.

"சிரிநாத 'தேங்காய்...... தேங்காய்....' என்று சத்தம் போடுகிறாரோ தெரியவில்லை."

யாரோ குரலை மாற்றிச் செய்த பகிடிக்கு ஆசிரியர் அறை சிரிப்பொலியால் அதிர்ந்தது.

"நாங்கள் இப்படிச் சிரிப்பது தவறு. அந்த மனிதன் வாழ்வதற் காகப் பெரும் போராட்டம் நடாத்துறார். அவரது ஆத்மசக்தியைப் பாருங்கள்." இளம் ஆசிரியர் ஒருவர் கூறினார்.

"அப்படியென்றால் கூலி வேலைக்காரனுக்கல்லவா ஆத்மசக்தி அதிகம்." ரஞ்சனி மிஸ் விடவில்லை.

சிரிப்பு எழுந்து ஓய்ந்தது.

அதிபர் தொலைவில் வந்து கொண்டிருந்தார். சிறிது நேரத்தில் ஆசிரியர் அறை வெறுமையாகியது. கமல் வகுப்பறைக்கு ஓடினான்.

மிஸ் பிள்ளைகளுக்கு வினாப்பத்திரமொன்றைக் கொடுத்து விட்டு, சட்டையொன்று தைக்க ஆரம்பித்தார். கர்ப்பிணியான அந்த ஆசிரியை மேல் மூச்சு கீழ்மூச்சு வாங்கியபடி அடுத்த பாடத்துக்கு மணியொலிக்கும் வரை, வயிற்றிலிருக்கும் குழந்தைக்காகத் தைத் துக் கொண்டிருந்தார்.

"நாளைக்கு நான் திருத்திறன். முடிக்காதவங்க வீட்டில் செய்து கொண்டு வாங்க." மிஸ் எழுந்தபடி சொன்னார்.

அடுத்த பாடத்திற்குரிய ஆசிரியை அன்று வரவில்லை. பிள்ளைகளின் குசுகுசுப்பால் வகுப்பு நிரம்பியது.

பிரபாத்- நிமல்- கமல் - ஒன்றிணைந்தார்கள்.

"எங்களால் ஸேருக்கு உதவ முடியும்." பிரபாத் சொன்னான்.

"எப்படி?" நிமல் கேட்டான்.

"நெல் அன்பளிப்புப் போன்ற விஷயங்கள் வேண்டாம்." கமல் ஞாபகமூட்டினான்.

"இல்லை. அப்படியென்றால். நாங்கள் மாலையில் படிக்க வகுப் பொன்று ஆரம்பித்தால் என்ன? சின்னப் பிக்குவிற்குச் சொல்வோம். இப்பொழுது அவர் வந்திருக்கிறார். பல்கலைக்கழகத்தில் விடுமுறை அல்லவா? சிரிநாத ஸேருக்கு வகுப்பை நிர்வகிக்க முடியும். மூன்று பாடங்கள் கற்பிக்கவும் முடியும். அடுத்த கிராமத்துப் பிள்ளைகளும் வருவார்கள். என்ன சொல்றீங்க?"

கமலின் முகம் மலர்ந்தது. நிமலுக்கும் நம்பிக்கை ஏற்பட்டது.

"இதென்றால் நல்லதொரு கருத்து. வகுப்பு ஆரம்பித்தால எத் தனை பேர் வருவாங்களென்று பார்ப்போம். எங்கள் பாடசாலை ஒன்பதாம் பத்தாம் வகுப்புக்களில் அறுபது பேர் அளவில உண்டு. அதில் ஐம்பது பேர் வருவார்களென வைப்போமே....."

"அடுத்த ஊர்ப் பாடசாலையிலிருந்தும் ஐம்பது பேர் வந்தால் குறைந்த பட்சம் நூறு பேர். அப்படி வந்தால் எங்கள் ஸேருக்குச் சந்தை வழியே அலையத் தேவையில்லை."

"இரண்டு வகுப்புப் பிள்ளைகளோடும் கதைத்துப் பார்ப்போம்."

அவர்கள் பிள்ளைகளோடு உரையாடினர்.

"சிரிநாத ஸேரிடம் படிப்பதற்கு நாங்கள் விருப்பம். மாதாந்தம் இருபது ரூபா எங்களால் தேடிக் கொள்ளலாம்-" தமரா சம்மதம் தெரிவித்தாள்.

பல பிள்ளைகள் அவளோடு சேர்ந்தனர்.

"வீட்டில் கேட்டு நாளை சொல்கிறோம்." பல குரல்கள் ஒன்றாய் ஒலித்தது.

அன்று மாலை மூன்று நண்பர்களும் விகாரைக்குச் சென்றனர்.

"என்ன?" பிக்கு கேட்டார்.

"சுவாமி...... விகாரையில் வகுப்பொன்று ஆரம்பிக்க முடியுமா வென்று கேட்பதற்கு வந்தோம். வார நாட்களில் மாலையில தான். இவ்வருடம் பரீட்சை எடுக்கும் ஐம்பது மாணவர்கள் அளவில் எங்கள் பாடசாலையில் இருக்கிறாங்க. அடுத்த ஊரிலிருந்தும் வருவாங்க." கமல் சொன்னான்.

"வகுப்புத் தொடங்கினால் மாத்திரம் போதாது. அதை நிர்வகிக்க வும் ஆள்தேவை. பிள்ளைகள் கூடாத முறையில் நடந்து கொண் டால் விகாரையின் பெயரும் இல்லாமல் போகும். பெரிய பிக்கு அதனால் தான் வகுப்பு வைக்க விரும்புவதில்லை." சிறிய பிக்கு விளக்கினார்.

"அதற்கு சிரிநாத ஸேர் இருக்கிறார்."

"அப்படியென்றால் நல்லது. பெரிய சுவாமியும் விரும்புவார். சிரி நாத ஸேர் இன்று தேங்காய் வண்டிலின் பின்னால் போவதையும் அவர் கண்டிருக்கிறார். நேற்று ஹம்பாந்தோட்டைச் சந்தையில் அரிசி விற்றாராம். திஸ்ஸமகாராமைக்குப் பெரிய சுவாமி பிரித ஓதச் சென்ற போது, சிரிநாத ஸேர் ஸாரம் உடுத்தபடி இறப்பர்த தோட்ட த்துச் சின்னப் பாலத்தருகே நின்றாராம். அங்கே கொந்தராத்துக் காரரொருவர் வீடுகட்டுமிடத்தில் கைவேலை கொடுத்தாராம். ஸ்ட்ரைக்கின் பின் அவர் நிறையக் கஷ்டப்படுகிறார்."

"இந்த விஷயம் எங்களுக்குத் தெரியாதே."

"பெரிய சுவாமி தான் சொன்னார். அவருக்கும் கவலை. வகுப் பைப் பற்றிச் சொன்னால் மகிழ்ச்சியடைவார். மண்டபம், வாங்கு, கதிரை, கரும்பலகை எல்லாம் உண்டு. வேறு என்னதான் வேண்டும்? நான் அனுமதி பெற்றுத் தருகிறேன், ஆரம்பிப்போம்."

"நல்லது சுவாமி! எங்களுக்கு இன்னொரு உதவி......... வந்து.... சிரிநாத ஸேரை விருப்பப்படுத்திக் கொள்ள வேண்டும்."

சிறிய பிக்கு சிரித்தார்.

"ஸேருக்குச் சொல்லாமலா வந்தீங்க?"

"எங்களுக்கு வகுப்பு வேணும். ஸேருக்குச் சொல்ல எங்களால் முடியாது. நாங்கள் சொன்னாதாகக் கூற வேண்டாம்."

"நல்லது. நான் இன்று மாலையில் போறன். பெரிய சுவாமியிடம் கேட்டுவிட்டு நாளை மாலை சொல்றன்."

காற்றில் மிதக்கும் பஞ்சுப் பொதிபோல் அவர்கள் பன்சாலை யிலிருந்து வெளிப்பட்டனர்.

வீட்டுக்குப் போகும் போது இரவாகிவிட்டது.

கமலுக்குத் தாயிடமிருந்து நல்ல பேச்சு விழுந்தது.

"நீ எங்கே சுற்றித் திரிகிறாய்? புத்தகத்தை எடுத்துக் கொண்டு வயலுக்குப் போனால் என்ன? அங்கே கிளிகள் நிறைந்திருந்ததாக வண்டில் வீட்டு மாமா சொன்னார். நான் வயலிலிருந்து இப்போது தான் வந்தன். நீங்கள் இப்பொழுதெல்லாம் படிப்பதில்லை. மூன்று பேருமாய்ச் சந்திப் பக்கம் போவதை வெவுலே அப்புறாமியும் கண்டிருக்கிறார்."

கமல் மௌனமாகச் சமையலறைக்குச் சென்றான். இரவுச் சாப்பாட்டுக்கான எந்த ஏற்பாடுகளுமில்லை. துருவலையை எடுத்து அமர்ந்து கொண்டான்.

"அம்மா நான் தேங்காய் துருவிறன்....."

அவள் சமையலறைக்கு வந்தாள்.

"அந்த மனிசன் தனியே சாகிறார். உன்னிடம் எங்களுக்கு வேலை வாங்கத் தேவையில்லை. பரீட்சை வருகிறதல்லவா, போகு மிடத்தைச் சொல்லி விட்டுப் போ."

அவளது கோபம் தணிந்து செல்வது தெரிந்தது.

"பழக்கப்பட்ட பன்றிக் கூட்டத்தால் வயல்கள் நாசம். இரவு ஒருவரும் போகவில்லை. எங்கள் வயல் மேட்டுப்பகுதியிலிருப்பதால் அவற்றுக்கு உடனே தெரியுமாம். அப்பா சொன்னார்."

"எனக்கு வயலுக்குப் போகமுடியும்."

"நீ கிழிப்பாய்...." தாய் சிரித்தாள்.

துருவலைத் தலை சத்தமிட்டது.

"கையூன்றித் துருவாதே. இலகுவாகப் பிடி. பெரிய தேங்காயத் துண்டுகளை எப்படி நசுக்குவது?"

மண்சட்டி தேங்காய் துருவலால் நிறைந்தது.

"சரி போதும். போய்ப் படி."

"வெங்காயம்....."

"வேண்டாம்....."

"மிளகாய் கொஞ்சம் இடித்துத் தரட்டுமா?"

"அதுவும் வேண்டாம். நான் செய்து கொள்ளுறன்."

அவளின் முகத்தின் பிரகாசம் கமலுக்குத் தெரிந்தது. சமையல் கூட வேலைகள் அவளுக்குப் பழக்கப்பட்டவை.

"குடும்பத்தில் ஒரே பிள்ளை சமையல் வேலைக்குப் பழகியிருப்பது தாய்மாருக்குப் பெரிய உதவி."

ஒருநாள் வண்டில் வீட்டு மாமா சொன்ன கதை அவளுக்கு ஞாபகம் வந்தது.

"நீ இன்று எங்க போனாய்?"

"விகாரைக்குப் போனன். எங்கள் பிள்ளைகளுக்கு வகுப்பு ஆரம்பிக்கச் சொல்ல...."

"யார் செய்வது?"

"சிறிநாத ஸேர்."

"காசெடுக்கும் வகுப்பா?"

"ஆம்"

"ஸேருக்குத் தொழில் தேடிக் கொடுக்கப் பார்க்கிறீர்களென்ன? நல்லது தானே."

"ஸேர் படிப்பிக்கும் போது நன்றாக விளங்கும்."

"உங்கட ஸேர் பெரிய பெருமைக்காரன். தொழில் இல்லையென்ற நினைப்பு இல்லை. அப்பா நேற்றுக் கொஞ்சம் அரிசி

கொண்டு போனார். திருப்பிக் கொண்டு போகச் சொல்லி சத்தம் போட்டாராம். அப்பா வைத்துவிட்டு வந்து விட்டார்."

"அப்படித்தான் அம்மா. நாங்கள் ஏழைகளென்று அவருக்குத் தெரியும்."

கமலுக்குத் தனது தாயைப் பற்றிய கவலையும், கூடவே அன்பும் ஏற்பட்டது. ஈரவெங்காயம் உரித்து மிளகாயும் இடித்துக் கொடுத்துவிட்டே சமையலறையிலிருந்து வெளிப்பட்டான்.

அடுத்தநாள் மேல் வகுப்பு மாணவர்கள் விகாரையில் ஆரம்பிக் கப்படப் போகும் வகுப்புப் பற்றி கதைத்துக் கொண்டார்கள்.

"அவசரமாக வகுப்பைத் தொடங்கினால் நல்லது." அவர்கள் ஊக்கமூட்டினர்.

மாலையில் அவர்கள் விகாரைக்குச் சென்றனர்.

சிறிய சுவாமியின் அறையில் எவருமிருக்கவில்லை.

"கொழும்புக்குப் போய் விட்டாரோ தெரியவில்லை." கமல் முணுமுணுத்தான்.

"அங்கே..."

வாளியும் துவாயுமாகக் குளக்கரைப் பக்கமிருந்து வரும் பிக்கு வைக் காட்டியபடி நிமல் சொன்னான்.

"நேற்று மாலை ஸேரைச் சந்தித்தேன்." சின்ன சுவாமி அறைக்கு வந்தபடி சொன்னார்.

நேற்றுச் சாயந்திரம் சின்ன சுவாமி அவரது வீட்டை அடையும் போது நிலக்கடலை சுத்திகரித்துக் கொண்டிருந்தார். அம்பலாந் தோட்டை சந்தையால் வாங்கி வந்துள்ளார்.

"நிலக்கடலை பக்கற் செய்து கடைகளுக்குப் போட இருக்கிறன் சுவாமி. எனக்கு ஏழெட்டுக் கடை பிடித்துத் தருவதாக நண்ப ரொருவர் கூறினார்."

"விற்ற பிறகு தானே காசு கொடுப்பது?" —

"இல்லை சுவாமி கடைக்காரர் உடனே காசு தருவார்கள். முதல் தடவை அல்லவா. மூன்று கிலோதான் கொண்டு வந்தேன்."

“தேங்காய் பிஸ்னஸ் எப்படி? தேங்காய் வண்டிலோடு செல்வ தைக் கண்டதாகப் பெரிய பிக்கு சொன்னார்.”

“இப்பொழுது தேங்காய் தாராளம். சந்தையில் விலை குறைந்து விட்டது. கடைசியில் எடுத்த விலைக்கே விற்க நேர்ந்தது. நட்ட மில்லை. வண்டில் கூலியும் கொடுத்து முப்பத்தைந்து ரூபா கிடைத் தது.”

“பட்ட கஷ்டத்துக்கு?”

“என்ன கஷ்டம். தேங்காய் விலை குறைந்ததைத் திக்குவல்லை தோட்டத்து விஜேசிங்க ஐயா தெரிந்து வைத்திருந்தார். கணக்குப் பார்க்கச் சென்ற போது என்னிடம் குறைய எடுக்கப் பார்த்தார். நான் வேண்டாமென்றேன். நாளை மறுநாளும் நான் தேங்காய் எடுக்க வேண்டுமே.”

“ஸேருக்கு சின்ன யோசனையொன்று தெரிவிக்க வந்தேன். நாங்கள் விகாரையில் சாதாரணதர மாணவர்களுக்காக ஒரு வகுப்பு ஆரம்பிக்கவுள்ளோம். சுமார் நூறு மாணவர்கள் இருக்கிறாங்கள். வாங்கு, கதிரை, மண்டப வசதியெல்லாம் உண்டு. ஸேருக்குப் பொறுப்புத்தர நாங்கள் யோசித்தோம்.”

சிறிநாத ஸேரின் மனைவி வில்வம்பூப் பானம் வழங்கிப் பிக்குவை உபசரித்தார்.

“அம்பலாந்தோட்டையிலிருந்து நல்ல வில்வம்பூ கொஞ்சம் கொண்டு வந்தேன். குடியுங்க.” சிறிநாத ஸேர் சொன்னார்.

“உங்களது அபிப்பிராயம் எப்படி ஸேர்?”

“நூறு பிள்ளைகள் இருப்பதாகச் சொன்னீங்க.”

“மற்ற ஊரிலிருந்தும் வருவாங்கதானே?”

“காசெடுப்பீங்களா?”

“இருபத்தைந்து ரூபாவென்றாலும் எடுக்கவேணும். எல்லாப் பாடங்களும் நடக்கும் அல்லவா?”

வெற்றுக் கோப்பையைத் தட்டில் ஏந்தி, அவர் சொல்லும் பதிலை எதிர்பார்த்தபடி அவர் மனைவி நின்றாள்.

“தாங்கள் எனக்குச் செய்யும் உதவியாக இந்த வகுப்பை ஆரம்பிப்பது பற்றி எனக்குத் தெரியும். இருந்தாலும் கற்பித்து விட்டு, பிள்ளைகளிடம் காசு வேண்ட என்னால் முடியாது. ஐந்

தாவது வருடங்களாக நான் இவ்வூரில் இருக்கிறன் சுவாமி. இந்தப் பிள்ளைகளுக்கு நான் மாலை வகுப்பு வைத்துப் படிப்பித்தேன். ஆனால் காசுக்காகவல்ல. நான் இப்பொழுது கஷ்டத்தோடு வாழ்ந்து கொண்டிருக்கிறன். இருந்தாலும் நான் எப்படி காசுக்குக் கற்பிக்க முடியும்? வகுப்பை ஆரம்பியுங்கள் சுவாமி. வாரத்தில் ஒருநாள் மாலையில் வேலை செய்கிறன். ஆனால், இலவசமாகத்தான். பரீட்சை நெருங்கும் போது இரண்டு மூன்று வாரங்கள் தொடர்ந்து வேலை செய்றன்....."

தனது கால் விரல்களில் ஈக்கள் மொய்த்திருப்பது பிக்குவுக்குத் தெரிந்தது.

"ஸேர் சந்தைகளுக்குச் சென்று கஷ்டப்படுகிறீங்கள். அப்படி யெல்லாம் துன்பப்பட வேண்டியதில்லை. இந்த வகுப்பால் இலகுவாக ஆயிரம் ரூபா தேடித்தரலாம்."

"நாங்கள் வேறொரு கோணத்தில் யோசிப்போம். அரசாங்கப் புள்ளி விபரத்தின்படி வேலை நிறுத்தம் காரணமாக நாற்பதினாயிரம் பேர் வேலையிழந்துள்ளனர். அதுபோன்று இருமடங்கென்று தொழிற்சங்கங்கள் கூறுகின்றன. உலகில் எந்த நாட்டிலும் வேலை நிறுத்தம் செய்தவர்களை இந்தவிதமாக வெளியேற்றிய அரசாங்கம் இல்லை. தற்பொழுது சர்வதேச தொழிலாளர் இயக்கம் இப்பிரச்சி னையில் கைவைத்துள்ளது. மீண்டும் வேலை வழங்குமாறு அரசாங் கத்தை வற்புறுத்துகிறது."

உரையாடல் வேறொரு பக்கம் புரண்டது. பிக்கு மௌனித் திருந்தார்.

"எங்களுக்கு இப்பொழுதே வேலை கிடைக்குமென்று எதிர்பார்க்க முடியாது. எங்களது கோஷ்டியில் இருவர் கடந்தவாரம் தற்கொலை செய்து கொண்டுள்ளனர். ஏனைய தொழிற்சங்கங்கள் அமைதியாக இருப்பதால் அரசாங்கம் பயப்படவில்லை."

"ஆம் ஸேர் அந்த நேரத்தில் எல்லா தொழிற்சங்கங்களும் வேலை நிறுத்தத்தில் சேர்ந்திருந்தால் பிரச்சினை தீர்ந்திருக்கும்."

"நல்ல முறையில் ஏற்பாடு செய்யாமல் தான் நாங்கள் வேலை நிறுத்தம் செய்தோம். அதனால் அரசாங்கம் இலகுவாக எங்களை அழித்துவிட்டது. எங்களோடு சேருமென்று எதிர்பார்த்த சங்கங்கள் எங்களைக் கை விட்டுவிட்டன. பாதைகளில் பஸ்களின் இரைச்சல்

கேட்காமல் போய் விடுமோவென்று காது கொடுத்துக் கொண்டிருந்தவர்ளை எனக்கு இப்பொழுதும் ஞாபகம்."

அவரது முகத்தில் ஒருவித சிரிப்புத் தோன்றியது.

"எங்களது விஷயத்தைக் கொஞ்சம் யோசியுங்கள். ஹம்பாந் தோட்டையில் பெரிய சுவாமி உங்களைக் கண்டுள்ளார். அங்கும் மிக கஷ்டப்பட்டீர்கள். இந்த யோசனைக்கு விருப்பம் தெரிவித்தால் ஓரளவுக்காவது துன்பத்திலிருந்து மீட்சி பெறலாம்."

"திஸ்ஸமகாறாம றப்பர் தோட்டத்தில் பெரிய சுவாமியைக் கண்டேன். அங்கே கமல் என்று ஸ்ட்ரைக் செய்த ஒரு ஆசிரிய நண்பர் இருக்கிறார். அவர் எனக்குக் கொந்தராத்துக்காரரிடம வேலை பெற்றுத் தந்தார். சீமெந்து குழைப்பது, அதனைச் சுமப்பது...... இதுதான் வேலை. வீட்டை விட்டு வெளிச் சென்று வேலை செய் வது கஷ்டமானது. சாப்பாட்டுடன் தினக்கூலி இருபத்தைந்து ரூபா தந்தாரர்கள். வேலை இழந்த நண்பர்கள் சிலர் அங்கே இருக்கி றார்கள். அவர்களும் எனக்கு வேலை தேடித்தர முயன்றனர்."

சிரிநாத ஸேர் சுவாமிக்கு வணங்கி "என் மீது காட்டிய அனுதாப த்துக்கு நன்றி" என்றார்.

சிறிய பிக்கு சொன்ன செய்தியைக் கேட்டு மூன்று நண்பர்களதும் முகம் இருண்டு போனது.

"நீங்கள் கவலைப்பட்டு வேலையில்லை. சிங்கம் எவ்வளவு பசித்தாலும் புல் சாப்பிடாதென்று சொல்வார்களே. அந்த ஸேர் மிகவும் புதுமையானவர். நிலக்கடலை பக்கற் செய்து நாளைக்குக் கடைகளுக்குப் போடுறார். அடுத்தநள் அம்பலாந்தோட்டைக்கு தேங்காய் கொண்டு போறார். எப்படியாவது வாழ்ந்து விடுவார். வெளிநாட்டு தொழிலாளர் இயக்கங்கள் அரசை வற்புறுத்துவதால் சிலவேளை தொழில் கிடைக்கக் கூடும்."

"எங்களது யோசனையால் ஒரு பயனுமில்லை."

"அப்படிச் சொல்ல வேண்டாம். நாங்கள் வகுப்பை ஆரம்பிப்போம். பிள்ளைகளுக்கு நல்லது தானே."

"சிரிநாத ஸேர் இல்லாவிட்டால் எங்களுக்கு வகுப்பொன்று தேவையில்லை சுவாமி." கமல் எழுந்தபடி சொன்னான்.

இடையில் அவர்களுக்கு கோன்னொருவ உபாஸக ஐயா எதிர்ப்பட்டார்.

"உபாஸக மாமா எங்கே இது......" பிரபாத் கேட்டான்.

"நாளை நெல் வெட்டுறோம். கொஞ்சம் பெண்களுக்குச் சொல்ல வந்தன். எல்லோருக்கும் வேலைதான். உனது அம்மாவும் வேலை யிருப்பதாகச் சொன்னா."

"ஆம். மாமா...... எங்கள் வயலிலும் நாளை வெட்டுறோம்." பிர பாத் சொன்னான்.

சூரியன் அஸ்தமிக்கும் நேரம் நெருங்கியது. பறவைகள் வருமளவுக்கு உஷ்ணம் தணியவில்லை.

நண்பர்கள் இருவரிடமும் விடைபெற்றுக் கொண்டு கமல் வயலுக்குச் சென்றான். டகேயை ஆட்டினான், சத்தமிட்டான்.

கிளிகள் இல்லை, எனினும், அவன் சத்தமிட்டான்.

'எனக்குப் பைத்தியம். ஒரு கிளி கூட இல்லை.'

அதிக நேரம் செல்லவில்லை. கிளிகள் வந்தன. கூடவே அம்மா வும் வந்தாள்.

"இன்றும் நீ இல்லையென்று நினைத்தன். நாளை நாங்களும் அறுவடை செய்றோம்."


"நாளை பிரபாத் ஆக்களும் வெட்டுகிறாங்க."

"இல்லை. நாங்கள் வெட்டுவதால் அடுத்த நாளைக்கு வைத்துள் ளார்கள். நீ பறவைகளை விரட்டு. நான் போய் நாளைய சமையலு க்கு ஏற்பாடு செய்ய வேண்டும்."

அவள் வரப்பினூடாகச் சென்றாள். கொஞ்சத் தூரம் போனவள் குனிந்து பொன்னாங்காணி பிடுங்கத் தொடங்கினாள்.

கமல் 'டகே'யை இழுத்தான். "சோஹா......சோஹா" என்று சத்தமிட்டான். வயலுக்கிறங்க பறவைகளால் முடியவில்லை.

வயல்வெளியெங்கும் "சோ.........சோ" சத்தம் எதிரொலித்தது.



# 8

அதிபரின் அறிவித்தலொன்றை ஆசிரியர்களுக்குத் தெரிவிப்ப தற்காக, ஆரம்பப் பிரிவுக் கட்டிடத்துக்கு நிமல் சென்றான். அங்கு அவன் கண்ட காட்சி அவனை அதிர்ச்சிக்குள்ளாக்கியது.

ஐந்தாம் வகுப்பு ஆசிரியர் மேசையருகே ஒரு மாணவன் முட்டுக் காலில் நின்றான். அவனது முகம் வெட்கத்தால் சிவந்து போயிருந் தது. அண்மையில் வந்த ஆசிரியை திட்டிக் கொண்டிருந்தார்.

"டபள் ரூள் கொப்பி கொண்டு வரச் சொல்லி எத்தனை நாள்! ம்...... எனக்குக் கொண்டு போவதற்கா? உங்கட எழுத்தை ஒழுங்குபடுத்தத்தானே. சரி ஒரு மணித்தியாலம் அப்படியே நில்...."

கடைசி வரிசை மாணவன் ஒருவன் எழுந்தான்.

"மிஸ் அது சிரிநாத ஸேரின் மகன்"

"யார் அது?"

"ஸ்ட்ரைக் செய்த ஸேர்."

"யார் எவராகவிருந்தாலும் எனக்குப் பிரச்சினையில்லை. கொப்பி இல்லாமல் எப்படி வேலை செய்வது?"

வந்த விடயம் நிமலுக்கு மறந்து போய்விட்டது.

"என்ன?" ஆசிரியை கேட்டார்.

அவன் அறிவித்தல் புத்தகத்தை மேசைமீது வைத்துவிட்டு சுனீத வைப் பார்த்துக் கொண்டிருந்தான். அவனது கண்களில் நீர் நிரம்பியி ருந்தது.

எல்லா ஆசிரியர்களுக்கும் அறிவித்தல் புத்தகத்தைக் காட்டி விட்டு நிமல் தனது வகுப்புக்குச் சென்றான். சுனீதவின் செய்தியைக் கமலுக்குச் சொன்னான்.

"நாம் என்ன செய்வோம்?"

"இன்று ஒன்றும் செய்ய முடியாது. நாளை பார்ப்போம்."

"நாளை பயிற்சிக் கொப்பி கொஞ்சம் வேண்டிக் கொடுப்போம்."

"சுனீதவிற்கா?"

"ஆம்."

"சுனீதவிற்குத் தெரியாமல் அதைச் செய்ய வேண்டும்."

"ஸேருக்கு மிகவும் கஷ்டமாக இருக்கும். இல்லாவிட்டால் கொப்பி இல்லாமல் பிள்ளையை அனுப்புவாரா? இன்று சுனீத போய்ச் சொல்வான்."

"நாளை எப்படியாவது எடுத்துக் கொடுப்பார். அதனால் இன்று இடைவேளையின் போது செய்ய முடிந்தால்....."

"அதற்குக் காசு.....?"

"பார்ப்போம். எங்கள் வகுப்புப் பிள்ளைகளிடம் எழுதாத டபள் ரூள் கொப்பி உண்டா என்று பார்ப்போம். அசோகா புதிய பயிற்சிப் புத்தகங்கள் கொண்டு வருவதை இன்று நான் கண்டேன்..."

அவர்கள் அசோகாவைச் சந்தித்தனர்.

"எங்களுக்கு டபள் ரூள் கொப்பியொன்று கடனாகத் தர முடியுமா...?"

"கடனுக்கு முடியாது. உடன் காசுக்கு மாத்திரம்!" அவள் வாய் விட்டுச் சிரித்தாள்.

"பகிடியல்ல.... காசு நாளைக்கு...."

"இன்னும் எழுதாத டபள் ரூள் கொப்பியொன்று இருக்கு."

கொப்பி ஒன்று கிடைத்து விட்டது. சுனீத எம். கமகே என்று பெயரெழுதிக் கொண்டு, இடைவேளையின் போது நிமல் ஐந்தாம் வகுப்புக்குச் சென்றான். சுனீதவைக் காணவில்லை. பிள்ளைகள்

வெளியே நின்றனர். அவன் கொப்பியை சுனீதவின் பேக்கில் போட்டு விட்டான்.

"இப்போ சரி."

நிமலின் முகம் மலர்ந்தது.

'எங்கிருந்து இந்தக் கொப்பியென்று குழம்பவானே.' வெளியே வந்து அவன் யோசித்தான்.

நிமல் இந்தத் தகவலைப் பிரபாத்துக்குச் சொன்னான். அவனது உள்ளம் கவலையால் நிறைந்தது.

"நிமல் எனக்கு மாமா கொண்டு வந்து தந்த பயிற்சிக் கொப்பி கள் உண்டு. இன்னும் தொட்டுப் பார்க்கவில்லை. சென்ற ஆண்டின் புத்தகங்களிலிருந்து பிடுங்கிய ஒற்றைகளால் செய்த கொப்பிக ளிலேயே இப்பொழுதும் எழுதுகிறேன். புதிய கொப்பிகளை சுனீதவு க்குத் தருகிறேன்."

"சிறிநாத ஸேருக்கு இது தெரியவரக் கூடாது."

"சுனீத குழம்புவான். அப்பாவுக்குச் சொல்ல வேண்டாமென்று சொல்லுவம்."

அடுத்தநாள் சுனீதவுக்குப் பயிற்சிப் புத்தகங்களும் பெஸ்டல் பெட்டியொன்றும் கிடைத்தன.

"தம்பி இதுபற்றி அப்பாவுக்குச் சொல்ல வேண்டாம். ஏதாவது தேவைப்பட்டால் எங்களிடம் சொல்லு."

சுனீத கமலின் முகத்தைப் புதுமையுடன் பார்த்துக் கொண்டான்.

"எனது பேக்கில் பயிற்சிக் கொப்பி போட்டதும் நீங்கள் தானே."

"ஆம் நாங்கள் தான். அப்பாவுக்குச் சொன்னீங்களா?"

"ஆம். நான் சொன்னன். அதை உரியவருக்கே கொடுத்துவிடச் சொன்னார். என்னுடைய பெயரும் எழுதப்பட்டுமுள்ளதென்று சொன்ன போது, யோசித்தாரே தவிர ஒன்றும் சொல்லவில்லை...."

"அதுதானே இதெல்லாம் போய்ச் சொல்றதா?"

சுனீத தலையாட்டியபடி ஓடினான். அவனது தண்ணீர்ப் போத் தலும் புத்தகப் பையும் ஆடின.

“நேற்று முட்டுக்காலில் நின்றதைக் கண்ட போது என்னால் தாங்கமுடியவில்லை.” நிமல் நினைவுபடுத்தினான்.

“நானும் முட்டுக்காலில் நின்றிருக்கிறன். ஆனால் சிரிநாத ஸேர் ஒருநாளும் எங்களை அப்படி நிற்கச் சொல்லவில்லை. கொப்பி புத்தகங்கள் குறைபாடுகள் ஏற்படுவதெல்லாம் எங்களது குற்றங் களல்ல என்று ஸேர் சொல்லுவார். ஆனால் சரியாகப் படிக்கா விட்டால் அவருக்குக் கோபம் வரும். ஸேர் அப்படித்தான். நிலக் கடலை வியாபாரத்தில் ஸேருக்கு லாபமோ தெரியவில்லை.”

“நிலக்கடலை மூன்று கிலோ வாங்கிப் பக்கற் செய்து விற்பதால் எவ்வளவு கிடைக்கப் போகிறது கமல். ஸேர் அந்த வகுப்பைப் பொறுப்பெடுத்திருந்தால் பாடசாலைச் சம்பளத்தை விடக் கூடக் கிடைத்திருக்கும்.”

“அதைப் பற்றிப் பேசிப் பிரயோசனமில்லை. சந்திக் கடைப் பெரேரா முதலாளி ஸேரின் மனம் நோகும் விதமாகக் கதைத்த தாகக் கேள்விப்பட்டேன். ஸேர் எக்கவுண்டுக்குச் சாமான் எடுத்து மாதக் கடைசியில் காசு கொடுப்பார். சென்ற மாதம் முழுக் காசை யும் கொடுக்காததால் சாமான் தரமுடியாதென்று சொல்லியிருக்கார். எக்கவுண்டையும் மூடி இனிக் காசு கொடுத்துச் சாமான் வாங்கச் சொன்னாராம். ஸேர் எப்படியோ மீதிக் காசையும் கொடுத்து விட்டா ராம்.”

“யார் சொன்னது?”

“அந்தக் கடையில் விமலதான் சாமான் நிறுக்கிறான். ஸேரின் முகத்தில் ஏற்பட்ட மாற்றத்தைக் கண்ட அவனுக்குக் கவலை வந்த தாம். எடுத்த கருவாட்டைக் கூட ஸேர் கொண்டு போகவில்லை யாம். விமல பள்ளிக்கூடத்திலிருந்து விலகுவதைத் தடுக்க ஸேர் எடுத்த முயற்சி ஞாபகம் தானே. அவன் படிப்பை விட்டு விட்டு கடை வேலைக்கு வந்துவிட்டான்.”

“எனக்கு ஞாபகம் ஆறாம் வகுப்பில் தான் விலகினான்.”

“பெரேரா முதலாளிக்கு முழு ஊரும் கடன் தான். வயலுக்குப் பசளை, எண்ணெய் வாங்க அவரிடம் தான் போக வேணும். கடனுக் குக் கொடுக்கிறார் அல்லவா?”

"பெரேரா முதலாளியின் வட்டி மாதத்துக்குப் பத்து வீதம். ஆயிரம் ரூபாவுக்குப் பசளை- எண்ணெய் கொடுத்து ஆயிரத்து ஐநூறு ரூபா பெறுமதியான நெல் எடுப்பார். உடபீல்ல கொட மாமாவின் அண்ணன் பிக்குவானதால் அவருக்குப் பிரச்சினை யில்லை. சுவாமி எண்ணெய்- பசளைக்குக் காசு கொடுக்கிறாராம். நெல் விற்றபின் எண்ணெய்- பசளைக் காசு மாத்திரமே சுவாமிக்குக் கொடுக்க வேண்டுமாம். சென்ற தடவை ஒரு சதம் கூடக் கடனில்லையாம்."

"பெரேரா முதலாளியின் மகனுக்கு ஸேர் படிப்பித்திருக்கிறார்."

"அவன் இப்பொழுத கொழும்பில் படிக்கிறான்."

"கொழும்புப் பள்ளிக்கூடத்தில் படிக்கும் விதமாகத் தனது மக னைத் தயார்படுத்தியது ஸேர்தானென்று பெரேரா முதலாளி சொல் லியிருக்கிறார். ஆனால் ஸேரின் பிள்ளைக்கும் பசிக்கு மென்பது முதலாளிக்கு நினைவு வரவில்லையே." நிமல் கலங்கினான்.

பிரபாத்தும் அங்கு வந்து சேர்ந்தான்.

"உடபீல்லகொட மாமா எங்களோடு அன்பானவர். அவருக்கு பிள்ளைகள் இல்லாததாலோ என்னவோ, எனக்கு பலதடவை புத்தக ங்கள் வாங்கித் தந்துள்ளார்." கமல் சொன்னான்.

"உடபீல்லகொட மாமா எனக்கும் கணித உபகரணப் பெட்டி வாங்கக் காசு தந்துள்ளார்."

பிரபாத்தின் முகத்தில் பிரகாசம் பரவியது.

"உடபீல்லகொட மாமாவின் வயலில் அடுத்த வாரம் நெல் வெட்டு கிறாங்கள். இந்தமுறை நல்ல விளைச்சலென்று மாமா சொன்னார்."

நிமலுக்கு மேலும் ஏதோ சொல்ல வேண்டியிருந்தது. ஆனால் மணியடித்து விட்டது. அவர்கள் வகுப்பறைக்குச் சென்றனர்.



# 9

பலாக்காய்ச் சுளைகளும் தேங்காய்ச் சம்பலும் கொண்ட உண வுத் தட்டை இடக்கையில் வைத்தபடி, விரலிடுக்கால் வழியும் தேங்காய்ச் சம்பலைப் பார்த்தபடியிருந்தான் கமல்.

"சின்னப்பிள்ளையாகப் பார்க்கிறான்?"

அவனருகால் சென்ற தாய் கூறினாள்.

கமல் சிரித்தான். ஏதோ தவறு செய்து விட்டதாகப் பின்னல் அவன் நினைத்தான்.

நேற்றுப் பகல் சாப்பிட்டதும் பலாக்காயும் தேங்காய்ச் சம்பலும் தான்.

"அம்மா செய்யும் தேங்காய்ச் சம்பல் எனக்கு நல்ல விருப்பம்." நேற்று மத்தியானம் அவன் கூறினான்.

"எனக்கு நல்ல சுவையாயகச் சமைக்கத் தெரியும் தம்பி. அதற் காக முதலாளி சும்மா சாமான் தருவாரா?"

அதுவும் அவனது சிரிப்புக்குக் காரணமாயிற்று.

அப்பா வாசலுக்கு வந்து விட்டாரென்பதை அவரது காறல் சத் தம் உணர்த்தியது.

"எங்க இந்தப் பையன். சிரிநாத ஸேரின் மாமனாருக்கு சுகமி ல்லையாம். கடுமையான வருத்தமென்று கேள்வி. இனி பிழைக்க முடியாதாம். மாலையில் அந்தப் பக்கம் போறன்."

கமல் உணவுத் தட்டுடன் வெளியே வந்தான்.

"அப்பா அந்தக் கிழவரை ஆஸ்பத்திரிக்குக் கொண்டு போய் விட்டார்களா?"

"இல்லை. எதற்கு அங்கு கொண்டு போகவேணும். ஒரு வருஷத்துக்கு மேலாக படுத்த படுக்கையாம். மலசலம் இழுத்ததும் சிரிநாத ஸேர்தான்."

சாப்பிட்டு எஞ்சியதை பழைய தட்டொன்றில் இட்டான் கமல். நாய் அதைப் பொறுப்பேற்றுக் கொண்டது.

"மடக் மடக்" என்று தண்ணீர்க் கோப்பையைக் காலி செய்த கமல். "அம்மா நான் ஸேர் வீட்டுப் பக்கம் போறன்." என்றபடி கொடியில் தொங்கிய சேட்டை அணிந்தபடி வெளியிறங்கினான்.

பிரபாத், நிமல் இருவரையும் சந்தித்து மூவருமாகச் சிரிநாத ஸேர் வீட்டுக்குப் போக முனைந்தனர்.

"ஸேரின் மாமாவுக்குக் கடும் சுகவீனமென்று அப்பா சொன்னார்."

"செத்துவிடுவாராம்..." கமல் சொன்னான்.

"இப்போதைக்கு என்ன நடந்திருக்குமோ தெரியல்ல. எதற்கும் அவசரமாகப் போவோம்."

சிரிநாத ஸேரின் வீடு தொலைவில் தெரிந்தது.

அவர்கள் கடவையால் பாய்ந்து உள்ளே சென்றபோது ஸேர் அவசரமாக வீட்டுப் பின்பக்கம் போவது தெரிந்தது. கமுகம் இலையில் சுற்றியபடி ஏதோ அவரது கையிலிருந்தது.

மல ஈக் கூட்டமொன்று அவரை மொய்த்துப் பறந்தது. நிமல் மூக்கைப் பொத்திக் கொண்டான்.

விறாந்தை வாங்கில் அமர்ந்திருந்த இருவரும் ஊருக்குப் புதியவர்கள்.

சிரிநாத ஸேர் கமுகமிலையைப் பின்பக்கக் குழியொன்றில் இட்டார். மண்போட்டு மூடினார்.

இப்போது தான் அவருக்குத் தனது மாணவர் தெரிந்தனர்.

"வருத்தம் கூடிவிட்டது. காலையிலிருந்து வயிற்றாலடிக்கிறது."

தண்ணீர் வாளியொன்றால் கைமுகம் கழுவிக் கொண்டார்.

"அப்பா அவசரமாக வாருங்க."

சுனீத வீட்டினுள்ளிருந்து சத்தமிட்டான்.

ஸேர் மீண்டும் வீட்டினுள்ளே ஓடினார். கிழவனின் கட்டிலடியில் மண் இட்ட பாக்கிலையொன்றை நடுப்பகுதிக்குச் சரிப்படுத்தி வைத்தார். கட்டில் கயிறுகள் சில வெட்டபட்டிருந்தன, கிழவருக்கு மலம் கழிப்பதற்கு வசதியாக......

கமுகமிலையை மீண்டும் வெளியே எடுத்து சிரிநாத ஸேர் கொண்டு போக, இன்னொரு இலையை அதே இடத்தில் சுனீத வைத்தான்.

தீபானி மூக்கை அழுத்தியபடி சமையலறைக் கதவடியில் நின்று அவதானித்துக் கொண்டிருந்தாள்.

"அப்பா சுவர்ப் பக்கமாகத் திரும்புங்கள்." ஸேரின் மனைவி சொன்னாள்.

"நீங்களெல்லாம் கொஞ்சம் வெளியே போயிருங்கள். அவரைக் கழுவ வேண்டும்." சிரிநாத ஸேர் கேட்டுக் கொண்டார்.

கமல் நண்பர்களுடன் விறாந்தைக்குச் சென்றான். கிழவனின் முனகலும் தண்ணீர் அலசலும் வெளியே கேட்டது. நிலத்தைத் துப்புரவு செய்வது கேட்டது.

சிறிது நேரத்தின் பின் ஸேர் வெளியே வந்தார்.

"எப்படி?"

சிரிநாத ஸேர் துவாயொன்றால் கைகளைத் துடைத்தபடி மாணவர்களிடம் கேட்டார்.

சாலையில் அமர்ந்திருந்த புதுமுகங்களை அறிமுகம் செய்து வைத்தார்.

"இவர்கள் மனைவியின் அண்ணன்மார்."

அவர்களின் தூக்க மயக்கத் தோற்றம் மாணவர்களுக்குப் பிடிக்கவில்லை. 'பொடு போக்கானவர்கள்' நிமல் நினைத்தான்.

"மூன்று நாட்களாய் இப்படித்தான். இப்போது வயிற்றாலடிப்பது அதிகம். டாக்டர் வந்து பார்த்து விட்டுச் சென்றார். மாமாவால் பேசிக் கொள்ளவும் முடியாது."

"ஆஸ்பத்திரிக்குக் கூட்டிச் சென்றிருக்கலாமே." கமல் கேட்டான்.

"ஆஸ்பத்திரியில் அட்மிட் பண்ணிப் பயனில்லையென்று டாக்டர் சொன்னார்."

"ஆ..... சரி- அவங்களக் கூட்டி வாருங்க."

சிரிநாத ஸேரின் மனைவி உள்ளேயிருந்து சொன்னார்.

"வாங்க போவம்."

பிள்ளைகளோடு ஸேரும் உள்ளே வந்தார்.

மார்புப் பகுதி வேகமாக மேல்கீழாக அசைந்து, உடலுக்குள் இன்னும் உயிர் இருப்பதை உணர்த்தியது. மேலெழுந்த எலும்புக் கூடும் ஆழப் பதிந்த கண்களும் மேலும் பார்த்துக் கொண்டிருக்க இடம் கொடுக்கவில்லை. பொறுக்க இயலாத நாற்றமும் வீட்டி னுள்ளே பரவ ஆரம்பித்தது.

"நாங்கள் போவோம்."

சிரிநாத ஸேரும் அவர்களோடு வெளியே வந்தார்.

கிழவர் 'ஹூஸ் ஹூஸ்' சத்தத்துடன் மூச்சிழுக்கும் ஒலி வெளியேயும் கேட்டது.

ஸேரின் மனைவியும் வெளியே வந்தார்.

"எங்களால் செய்ய முடிந்த எல்லாம் செய்தோம் தம்பி. இன்னும் ஒரு நாளைக் கடத்துவது கூட கஷ்டமென்று டாக்டர் சொன்னார்." அவள் கமலின் பக்கமாகத் திரும்பிச் சொன்னாள்.

அவளது கண்களில் கண்ணீர் நிரம்பியிருந்தது.

"ஸேர் நாங்கள் என்ன செய்ய வேண்டும்?" நிமல் கேட்டான்.

அவர் மெல்லிய புன்னகை சிந்தினார்.

சிரிநாத ஸேரின் உறவினர்கள் இருவரும் முற்றத்தின் அந்தத்திற்குச் சென்றனர். இடைக்கிடை வாசல் பக்கம் பார்த்துக் கொண்டனர்.

“ஸேர் விரும்பினால் நாங்கள் இங்கே தங்கலாம். வேலைகள் இருக்குமே.”

“மிக்க நன்றி! தேவைப்பட்டால் சொல்றன்.”

“அப்பா போறம் ஸேர்”

பிரபாத் இருவருடனும் முற்றத்துக்கு இறங்கியபடி சொன்னான்.

அவர்கள் சிறிது தூரம் சென்று நின்றனர்.

“இனி ஸேருக்குப் பெரிய பிரச்சினைகள் வரும். நிறையக் காசு தேவைப்படும். ஸேரின் சைக்கிளையும் காணவில்லை. அதை விற்றிருக்கலாம். நீங்கள் கண்டீர்களா?” நிமல் கேட்டான்.

“நான் காணவில்லை. எனக்கும் சந்தேகம் ஏற்பட்டது. விற்றிருப்பார் அல்லது அடகு வைத்திருப்பார். வேறு விற்பதற்கு ஒன்றும் இருக்கவுமில்லை. ஸேர் சேகரித்ததெல்லாம் புத்தகங்கள் தானே.” கமல் சொன்னான்.

“நாங்கள் என்னதான் செய்வது? ஸேருக்குத் தெரியாமல்தான் உதவி செய்யவும் வேண்டும். கிழவர் நீண்ட நேரம் உயிரை வைத்திருக்க மாட்டார்.”



10

# 10

சூரியன் அஸ்தமிக்கும் வேளை. மரஉச்சியில் செம்மஞ்சள் கவிந்து, தென்னந்தோப்பு அரை இருளில் மூழ்கிக் கொண்டிருந்தது.

அறுவடை முடித்து, நெற்கதிர்களுடன் வீட்டுக்குச் செல்லும் பெண்பிள்ளைகள் இருவர் கமலுக்கும் சின்ன சுவாமிக்கும் எதிர்பட்டனர். அவர்கள் கமலின் வகுப்புப் பிள்ளைகள்.

"நாங்கள் சிரிநாத ஸேரின் வீட்டுக்குப் போகிறோம்." கமல் சொன்னான்.

"நாங்கள் நாளை செல்கிறோம். அங்கு மரணமொன்றல்லவா?" ஒருத்தி கேட்டாள்.

"அப்போ கிழவர் செத்திட்டார்."

"ஆம் ஸேரின் மனைவி அழுவது பாதைக்கும் கேட்கிறது."

கமலும் பிக்குவும் பயணத்தை விரைவு படுத்தினர்.

சூரியன் அஸ்தமித்து இருள் கவிந்தது.

உண்மை தான் அழுகை பாதைக்குக் கேட்டது.

தீபானியினதும் சுனீதவினதும் அழுகுரல் முற்றத்துக்குச் சென்ற பின்பே கேட்டது.

சிரிநாத ஸேர் வாசல் பக்கமாக நின்றார்.

கமலையும் பிக்குவையும் கண்டு முற்றத்துக்கு இறங்கினார்.

“உயிர் போய் ஒரு மணித்தியாலமாகவில்லை.”

காதுக்குக் கேட்காதளவுக்கு அவளது குரல் மங்கியிருந்தது. கண்கள் வீங்கியிருந்தன. நன்றாக அழுதிருக்கிறாளென்று கமல் நினைத்தான்.

சிரிநாத ஸேர் அவர்களோடு உள்ளே சென்றார்.

கிழவர் இன்னும் கட்டிலோடு தான். காலுயர்ந்த மேசைமீது எண்ணெய் விளக்கொன்று ஒளிர்ந்தது. அந்த வெளிச்சத்துக்குக் கிழவின் தலைவெண்முடி தெரிந்தது. முகம் இருண்டிருந்தது. சிரி நாத ஸேரின் மனைவி கட்டில் அந்தத்தில் அமர்ந்திருந்தாள். உடன் எழுந்து சுவரோரமாகிக் கமல் சகாக்களுக்கு இடமளித்தாள். அவளது அண்ணன்மார் அருகே இருந்தனர். சொற்ப வேளைக்குப் பின்பு பிக்கு கமலுடன் வெளியே வந்தார்.

“ஸேர் நான் விகாரையிலிருந்து பித்தளை விளக்கும் தேங்காய் எண்ணெயும் அனுப்பி வைக்கிறன். மரணச் சடங்கு ஒழுங்காக நடக்கும். நீங்கள் கவலைப்பட வேண்டாம். அதுபற்றிக் காலையில் கதைப்போம்.”

சிரிநாத ஸேர் சுவாமியின் கதைக்குக் காது கொடுத்தார். அவரது பரிதாபமான தோற்றத்தைக் கண்ணுற்ற கமலின் மனம் சோகத்தால் நிரம்பியது. ஸேரும் அவர்களோடு பாதைக்கிறங்கினார்.

“ஸேர் இரவைக்கு நாங்கள் வருவோம்.” கமல் முன்னறிவித்தல் செய்தான்.

“நல்லது”

கொஞ்ச தூரம் அமைதியாகச் சென்ற பிக்கு “சிரிநாத ஸேரைப் பற்றித்தான் எனக்குக் கவலை.” என்றார்.

“மூச்சுவிடக் கூட முடியாத அளவுக்கு விவசாயிகளுக்கு வேலை. அவர்களிடமிருந்து ஒரு செப்புக்காசு கூட எதிர்பார்க்க முடியாது. சீனி, தேயிலை, சாப்பாட்டுச் சாமான்கள், சவப்பெட்டி எல்லாம் தேவை.” கமல் தெரிவித்தான்.

“ஆம் அவற்றை ஏற்பாடு செய்ய வேணும்.”

“சவப்பெட்டியொன்று.......?”

"நாளை காலையில் வகுப்பு மாணவர்களுடன் கதைப்போம். எங்களால் ஏதாவது செய்ய முடியும்."

"சிரிநாத ஸேர் இனியில்லை என்ற அளவுக்குக் கஷ்டத்தில் விழுந்துள்ள நேரம். நாங்கள் அவருக்கு எப்படி உதவி செய்வது? சவப் பெட்டிக்குத்தான் அதிக செலவாகும்."

சின்ன சுவாமி சொற்ப வேளை அமைதியாக இருந்தார்.

"குறைந்த தரப் பலகையால் செய்த சவப்பெட்டி கூட ஐநூறு ரூபா வரும். எப்படி நாங்கள் அவ்வளவு பணம் சேர்ப்பது? பெரிய சுவாமி உதவி செய்தால் தான் என்னால் தரமுடியும். அவர் காசு சேர்க்கும் மனிதரல்ல. பன்சாலைக்குக் கிடைக்கும் ஒவ்வொரு சதமும் அங்குள்ள வேலைக்கே செலவாகும்."

"நாங்கள் உங்களிடம் காசு எதிர்பார்க்கவில்லை. காசு கொஞ்சம் சேர்த்துக் கொள்வது எப்படியென்று பார்ப்போம்."

"எனக்குத் தெரியும் கமல். இப்பொழுது ஊர் மக்களிடம் காசில்லை."

நிமல் முகத்தில் சிரிப்பேறியது.

"அதுதான் சுவாமி. இந்த நெல் வேலைகள் முடிந்த பின் கிழவர் இறந்திருக்கலாம்...."

"நிமலுக்குப் பகிடி. நாங்கள் எப்படிச் சவப்பெட்டி தேடிக் கொள்ளலாம்?" நிமலை வெறுப்புடன் பார்த்தான் கமல்.

"எனக்கொரு யோசனை." பிரபாத் கை உயர்த்தியபடி கூறினான்.

அவனது நடத்தை பிக்குவின் உதட்டிலும் சிரிப்பை மலரச் செய்தது.

"என்ன?" பிக்கு கேட்டார்.

"அங்குலமாகக் கிழித்த வேம்புப் பலகை கொஞ்சம் எங்கள் வீட்டிலுண்டு. அதையெடுத்து பெட்டி செய்வோம்."

நிமலுக்கும் கமலுக்கும் அதுவொரு பிரச்சினையாகத் தெரிந்தது.

"எப்படிச் செய்வது?"

"ஏன் விக்டர் இருக்கிறான். தச்சுமாமா விக்டருக்கு நன்றாக வேலை பழக்கியிருக்கிறார். அவன் ஸேரைக் கவனிப்பான்."

ஆறு மாதங்களுக்கு முன்பு தந்தையின் வேலைக்கு உதவி செய்வதற்காக விக்டர் பாடசாலை செல்வதை நிறுத்தி வீட்டில் தங்கினான். இன்னும் ஒருவருடமாவது படிக்கும் படி சிரிநாத ஸேர் வேண்டிக் கொண்டபோதும் அவன் பொருட்படுத்தவில்லை.

"அது நல்ல யோசனை. ஆணி வாங்க நான் இருபத்தைந்து ரூபா தருகிறன்." பிக்கு தெரிவித்தார்.

"காசு தேவைப்பட்டால் பின்னர் கேட்கிறன்." கமல் பதில ளித்தான்.

"இல்லை இல்லை நாங்கள் அதை எடுப்போம்" நிமல் திக்கியபடி சொன்னான்.

"விக்டருக்குப் பலகை மாத்திரம் கொடுத்துப் போதாது. ஆணி வேண்டக் காசு கொடுக்க வேண்டும். அந்தக் கொஞ்சக் காசையும் எடுப்போம்." மீண்டும் பிரபாத்.

சின்ன சுவாமி இருபத்தைந்து ரூபா கொடுத்தார். மூன்று நண் பர்களும் அவரை வணங்கிய பின் தச்சன் வீட்டுக்குச் சென்றனர்.

விக்டர் பலகை சீவிக் கொண்டிருந்தான்.

விடயத்தை நிமல் எடுத்து விளக்கினான்.

"ஏன் என்னால் முடியாது. தேவையானதைச் சொல்லுங்கடா"

விக்டரின் கதை அவர்களைக் கௌரவித்ததாக அமைந்தது.

"பலகைத்துண்டுகளைக் கொண்டு வந்து தருகிறன்." பிரபாத் சொன்னான்.

"நல்லது. பலகையைச் சீவத்தான் நேரமெடுக்கும். எப்படியாவது நாளை விடியமுன்பு நான் செய்து தருகிறேன்."

பிரபாத்தின் அம்மா மகிழ்ச்சியோடு பலகையைக் கொடுத்தாள். அதனைத் தச்சுக்கூடத்துக்குக் கொண்டு போகும் போது, பெரேராவின் கடையில் ஆணியும் எடுத்துச் சென்றார்கள்.

சிறிய பிக்கு தச்சுக்கூடத்துக்குச் சென்ற போது, விக்டர் பலகை பிளந்து கொண்டிருந்தான்.

ஆயுதத்துக்கூடாக வெளிப்பட்ட மெல்லிய பலகைச் சீவல சுருள் சுருளாக விழுந்து வாங்கின் கீழ் நிறைந்திருந்தது. பழைய கூட்டு மாரின் மூலம் நிமல் அதனை வெளியகற்றினான்.

"நீங்கள் அப்படி நில்லுங்கள். நான் விகாரைக்குப் போய வருகிறேன்." பிக்கு வெளிப்பட்டார்.

"இருவரும் விக்டருக்கு உதவி செய்யுங்கள். நானும் பிக்குவுடன் செல்கிறேன்." கமலும் தயாரானான்.

"நல்லது போய் வாருங்கள்." நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்தபடி விக்டர் விடை கொடுத்தான்.

பிக்குவை விட்டுவிட்டு கமல் தச்சுக்கூடத்துக்கு மீண்டும் வந்தான். அங்கு பெற்றோல்மெக்ஸ் விளக்கு ஏற்றப்பட்டிருந்தது.

பிரபாத்தும் நிமலும் விக்டருக்கு உதவி செய்தார்க்ள். எல்லாப் பலகையும் சீவப்பட்டிருந்தன.

"இனி ஆணியடித்துக் கீழே இரு கீலங்களை இணைப்பது மாத்திரந்தான்." நிமல் சொன்னான்.

"அப்போ கதவு?" கமல் கேட்டான்.

விக்டர் சிரித்தான்.

"கதவு பெரிய வேலையா? அங்கே இருக்கும் பலகைத்துண்டு நாலும் சேர்ந்தால் கதவு தான்."

கமலுக்குப் புதுமையாகவிருந்தது.

விக்டரின் சிக்குமுடியும் நெற்றி மற்றும் மார்ப்பை நனைத்துக் கொண்டு சொட்டும் வேர்வையும் விளக்கு வெளிச்சத்துக்கு மின்னியது.

"நாங்கள் போய் அம்மாவிடம் சொல்லிவிட்டு வருவோம்." பிரபாத், அழைத்தான்.

"போய் வாருங்கள்" விக்டர் தலையசைத்தான்.

கமல் போகும் போது வீட்டில் தகப்பனார் இருக்கவில்லை.

"வயலிலிருந்து வந்தவுடன் எல்லோரும் சேர்ந்து மரண வீட்டுக்கு இப்போது தான் போனார்கள்."

"நல்லதம்மா. நாங்கள்தான் சவப் பெட்டி செய்கிறோம்."

"சவப்பெட்டி?"

"ஆம். பிரபாத் பலகை தந்தான். சிறிய சுவாமி ஆணிக்குக் காசு தந்தார். விக்டர் செய்கிறான்."

அவளது முகத்தில் புன்னகை பூத்தது.

"நீங்கள் நல்ல காரியம் செய்கிறீர்கள்."

"சவப்பெட்டி கடையில் வாங்க ஐநூறு ரூபாவாவது தேவை. நாங்கள் இரவு சாப்பிட்டு விட்டு மீண்டும் தச்சு வீட்டுக்குப் போகிறம்."

"சமைத்துவிட்டேன். இரவில் முழித்திருந்து பீனிசத்தைத் தேடிக் கொள்ளாதே."

அவன் விரைவாகச் சோற்றுத் தட்டை முடித்துவிட்டுத் தச்சுக் கூடத்துக்குச் சென்றான்.

இடையில் பிரபாத்தைச் சந்தித்தான். நிமல் சற்றுத் தாமதித்தே வந்தான்.

சவப்பெட்டிக்கு ஆணியடிக்கப்பட்டு, கதவும் தயாராகியிருந்தது.

"மண்கடதாசி பிடித்துத் தரமுடியுமா?" விக்டர் கேட்டான்.

"ஏன் முடியாது? எங்கே மண் கடதாசி?"

அவர்கள் மண் கடதாசி கொண்டு மினுக்கத் தொடங்கிய பின், விக்டர் வீட்டுக்கேறி சோற்றுத்தட்டுடன் வந்தான்.

"சாப்பிட்டீங்களல்லவா?" என்று கேட்டபடி சாப்பிடத் தொடங்கினான்.

சற்று நேரத்தில் அகப்பையும் குழம்புச் சட்டியுமாகத் தச்சுக்கூடத்துக்கு விக்டரின் அம்மா வந்தாள். அவனது தகப்பன் எங்கோ கூரையடிக்கச் சென்றவர் இன்னுந்தான் வரவில்லை.

தச்சுமாமா வீட்டுக்கு மோட்டார் வண்டியொன்றின் வெளிச்சம் விழுந்தது.

"யாரடாப்பா?" கமல் கேட்டான்.

விக்டர் தலையிலடித்துக் கொண்டான்.

"முதலாளியின் வேலையை முடிக்கவில்லை. என்னை இருக்க விடமாட்டார்."

மோட்டார் வண்டி தச்சுக்கூடத்தருகே நின்றது. "விக்டர்" என்று உயர்ந்த தொனியில் அழைத்தார் முதலாளி. தச்சு மேசையில் தட்டை வைத்து விட்டு, வண்டி அருகே சென்றான்.

"என்னுடைய வேலை எப்படி?"

கதவின் கண்ணாடியைப் பணித்து, தலையை வெளியே நீட்டிக் கேட்டார் முதலாளி.

"சற்று நேரத்தில் தருவதாக அல்லவா வாக்களித்தாய்?"

"அப்படித்தான் சொன்னேன். அதைத்தான் செய்யவுமிருந்தேன். இந்தச் சவப்பெட்டியை அவசரமாகச் செய்ய நேர்ந்து விட்டது."

"என்னடா? சவப்பெட்டி செய்கிறாயா?" என்றபடி இறங்கிய முதலாளி தச்சுக்கூடத்தினுள் புகுந்தார்.

"சிரிநாத ஸேரின் மாமனார் இறந்திட்டார். இவர்கள் தான் சவப்பெட்டி செய்விக்கிறார்கள்."

"மாணவர்களாக இருக்கும்! நல்லது நல்லது. இதைப் பொலிஷ் செய்வதில்லையா?"

"அதுபற்றி இப்பொழுதுதான. ஞாபகம் வந்தது."

"நான் ஒரு பொலிஷ் டின் தாறன். இல்லேன்னா ஒழுங்கில்லை."

கமல் நிமலைப் பார்த்தான். பிரபாத்துக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை.

"என்னோட யார் வரப்போறியள்?" முதலாளி கேட்டார்.

"இரண்டு பேரும் போய் வாருங்கள்." கமல் நிமலுக்கும் பிரபாத்துக்கும் சொன்னான்.

"நாளை காலை வண்டி வரும் ராக்கையை அனுப்பு."

முதலாளி வண்டிக்கு ஏறினார். கூடவே பிரபாத்தும் நிமலும் ஏறிக் கொண்டனர்.

"புதுமை அல்லவா?"

வாகனம் சென்றபின் விக்டரிடம் கேட்டான் கமல்.

பொலிஷ் பேணியுடன் நடந்து வந்து கொண்டிருந்தவர்களுக்கு, விக்டர் ராக்கைப் பலகை அடிப்பது தெரிந்தது.

"உடைந்திருந்தாலும் நிறையவே இருக்கு."

கமல் பேணியைக் கையிலெடுத்தபடியே கூறினான்.

விக்டர் இரண்டு தூரிகைகளைக் கொடுத்தான். கமலும் நிமலும் பொலிஷ் பூசத் தொடங்கினர்.

ராக்கையின் ஆணியடிப்பதற்கு பிரபாத் உதவினான்.

❄ ❄ ❄ ❄ ❄ ❄

மூன்று நண்பர்களும் அன்று பள்ளிக்கூடம் செல்லவில்லை.

சிரிநாத ஸேர் வீட்டில் அவர்களுக்கு வேலைகள் இருந்தன.

அடிக்கடி தும்மினான் கமல் வீட்டுக்குப் போய்த் தூங்குமாறு அவனது அப்பா சொன்னார். "எனக்குத் தூக்கம் இல்லை." என்றபடி கமல் ஏதோ வேலையில் ஈடுபட்டான்.

கடந்த இரண்டு நாட்களாக அவர்களுக்குத் தூக்கமில்லை.

பீனிசத்தால் பீடிக்கப்பட்டிருந்த கமலுக்கு, இரவில் விழித்திருக்க வேண்டாமென்று நாட்டு வைத்தியர் எச்சரித்திருந்ததை அவனது அம்மா ஞாபமூட்டத்தான் செய்தாள். கமல் அதைக் காதில் போட்டுக் கொள்ளவில்லை.

மயானம் அந்த வீட்டிலிருந்து ஒரு மைல் தொலைவில் அமைந்திருந்தது. வயதாளிகள் சிலர் அதனை அலங்கரித்தனர். அந்த இடத்துக் குடி நீர் கொண்டு சென்றான் கமல்.

சவக்காலையைச் சுற்றி கயிறு கட்டி அதில் குருத்தோலை தொங்கவிட்டு அலங்கரித்தவர்களில் உடபீல்லகொட மாமாவும்

ஒருவர். தூரப் பகுதியிலிருந்து வந்திருந்த சிரிநாத ஸேரின் உறவினர்கள் நண்பர்களுக்கும் அவரது குடும்பத்தவர்களுக்கு கடந்த இரண்டு நாட்களாக உடபீல்லகொட மாமாவின் வீட்டிலிருந்தே சாப்பாடு வழங்கப்பட்டது.

தேநீர்ப் பாத்திரங்களோடு மீண்டும் திரும்பிய கமலுக்கு, நேற்றுப் பள்ளிக்கூடப் பிள்ளைகளிடமிருந்து கிடைத்த ஒத்துழைப்பு ஞாபகம் வந்தது.

சவப்பெட்டியையும் ராக்கையையும் பெரேரா முதலாளியின் வண்டிலுக்கு ஏற்றியபின் அவன் பாடசாலைக்குச் சென்றான். மேல் வகுப்பு மாணவர்களுக்கு மரணச் செய்தியைச் சொல்லி கொஞ்சம் பணம் சேகரிக்க அவன் எண்ணினான். அதற்கு முதல் அதிபருக்கு இத பற்றி அறிவிக்க வேண்டுமென்று பிரபாத் சொன்னான்.

"பாடசாலையில் அதிபருக்குத் தெரியாமல் எதுவும் நடக்கக் கூடாது." நிமலின் கருத்தும் அவ்வாறே அமைந்தது.

கமல் அதிபரைச் சந்தித்தான். ஆசிரியர் குழு சேகரித்த தொகையையும் அவர் கமலிடம் கையளித்தார். பாடசாலை மாணவர தலைவனான நாமலிடம் அதைக் கொடுத்து சிரிநாத ஸேருக்குக் கொடுக்குமாறு சொன்னான் கமல்.

"காசு கொடுப்பதை விட ஏதாவது சாமான் கொடுத்தால நல்லது." என்று பிரபாத் சொன்ன கருத்துக்கு எல்லோரும் உடன்பட்டனர்.

"சீனி, தேயிலை, வெற்றிலை, பாக்கு, பிடவை இவைதான மரண வீட்டுக்குப் பெறுமதி." கமல் சொன்னான்.

நகருக்குச் சென்று தேவையானவற்றை வாங்குவதற்கு அதிபர் அனுமதி கொடுத்தார்.

"சிரிநாத ஸேருக்கு எதிராகக் கதைத்த ஆசிரியர்கள்- ஆசிரியைகள் கூட இந்த நேரத்தில் உதவி செய்கிறார்கள்." பிரபாத் கமலின் காதுக்குள் சொன்னான்.

"அதை நாங்கள் ஸேரிடம் பிறகு சொல்வோம்."

பெரேரா முதலாளியின் சாரதி ராக்கையைக் கொண்டு சென்ற வண்டியிலேயே சவப்பெட்டியையும் ஏற்றிக் கொண்டான்.

சவப்பெட்டியை தென்னோலையால் மறைத்து ரகசியமாகச் ஸேரிடம் கையளிக்குமாறு விக்டர் சொல்லி வைத்தான்.

“இதை யார் தந்தார்கள்?” சிரிநாத ஸேர் கேட்டார்.

“டிரைவர் சவப்பெட்டியை இறக்கி விட்டு ராக்கையுடன் பயணித்தானே தவிர, பதில் எதுவும் சொல்லவில்லை.”

“சவப்பெட்டியை ஸேருக்குப் பிரச்சினையாக வைத்துவிட்டு வந்தேன்.” சாரதி பின்னர் கமலுக்குச் சொன்னான்.

“ஸேருக்கு அது பிரச்சினைதான். இருந்தும் தலையிலிருந்த பெரிய சுமை இறங்கிவிட்டதல்லவா?” அவன் சிரித்தபடி கூறினான்.

நிலப் பாவடை போடுவதற்கும் மேற்கட்டு கட்டுவதற்கும், பிக்கு மாரின் இருக்கை விரிப்புக்கும் தேவையான பிடவை மாணவரான சிரிஸேனவிடமிருந்து கிடைத்திருந்தது. அவனுடைய தாய்தான் ஊரின் துணிமாமி.

“நாங்கள் அதை இலவசமாகச் செய்றோம். அம்மாவிடமும சொல்லி விட்டோம். நானும் அண்ணனும் வந்து பாவாடை விரிப்போம்” கமலிடம் சிரிஸேன சொன்னான்.

பறை மேளத்தை இன்னொரு மாணவனான பியதாஸ பொறுப் பெடுத்தான். அவனுடைய அப்பாவும் அண்ணன்மாரும் பறை அடிப்பார்கள்.

“நாங்களும் அதை இலவசமாகச் செய்றோம்.”

சிரிஸேன சொன்னதைக் கேட்டிருந்த பியதாஸ சொன்னான்.

கமல் சவப்பிட்டணியிலிருந்து வரும்போது சிரிஸேன தனது தாயுடன் வருகைதந்து சவத்திற்கு மேலால் மறைப்புக் கட்டிக் கொண்டிருந்தான். பாவாடைத் துணியும் வேறாக்கப்பட்டிருந்தது. பாதையோரமாக சூரிய மரத்தில் வெள்ளைக் கொடி அசைந்து கொண்டிருந்தது.

அதுவும் சிரிஸேனவிடமிருந்தே கிடைத்தது.

சூரியன் திரும்பிய பின் மரணவீடு சனங்களால் நிரம்பியது. பறையடிப்பவர்களும் வந்து விட்டானர்.

பாடசாலையில் ஊமைபோல் இருக்கும் பியதாஸவின் கெட்டித் தனம் ஊது கருவியைக் கையிலெடுத்த போது தெரியவந்தது. அதனை அவன் ஊதினான். சோக ராகம் அதனூடாக வெளிப் பட்டது. வீட்டுக்குள் முடங்கியிருந்த சோகத்தைப் பறையும் ஊது குழலும் தட்டியெழுப்பின. சிரிநாத ஸேரின் மெல்லிய முனகல் சொற்ப வேளையில் பேரழுகையாய் வளர்ந்தது. தீபானியும் அம்மா வின் கையில் தொங்கியபடி அழுதாள். சுனீத கமலுடன் நடந்தான். தனது மாமனார் உயிர்நீத்த விதத்தை அங்கு வருகை தருவோரிடம் நூறு தடவைக்கு மேல் சொல்லியிருப்பார் சிரிநாத ஸேர்.

வரிசையாக வந்த பாடசாலைப் பிள்ளைகள் உயிர்நீத்த கிழவ ருக்கு மரியாதை செய்தனர். அவர்களுடன் அதிபரும் ஆசிரியர்க ளும் வந்தனர். பிரபாத்தின் தகப்பன் இன்னும் சிலருடன் விகாரைக் குச் சென்று பிக்குமார்களை அழைத்து வந்தார்.

இறுதிக் கிரியை நிகழ்வு சிறிய பிக்குவால் ஒழுங்கமைக்கப் பட்டது.

பெரிய சுவாமி தனது உரையின் போது, சிரிநாத ஸேரின் குணநலன்களைப் பற்றிச் சொன்னார். சுமார் ஒரு மணிநேரத்தில் இறுதிக் கிரியைகள் முடிவடைந்தன. சவப்பெட்டியைக் குழியில் வைக்கும் வேளை வந்தது. மீண்டும் சிரிநாத ஸேரின் மனைவியும் மகளும் அழ ஆரம்பித்தனர். அவர்களது கிராமத்திலிருந்து வந்தி ருந்த இருபெண்களும் கூட அழுதனர். மண்ணுடன் சேர்ந்த சிறுகல் லொன்றும் பெட்டியின் மீது விழுந்தது. அந்த சத்தத்திற்கு ஸேர் திடுக் கிட்டார். அவருடைய முகத்தைப் பார்க்கக் கமலுக்குக் கஷ்டமாக விருந்தது. நிமலும் பிரபாத்தும் வெற்றிலைத் தட்டேந்தி உபசரித் தனர்.

கமலின் தந்தை, உடபீல்லகொட மாமா, கமல், நிமல், பிரபாத், மற்றும் சில மாணாக்கர், வேலை நிறுத்தத்தில் ஈடுபட்ட ஆசிரியர்க ளான ஆப்தீன், சன்தி, ஹேவா விதான, ஆரியதாஸ, வேலை நிறுத் தம் செய்த கிளாக்கர்களான உபேசிங்ஹ, மெல்வின் ஆகியோர் இருட்டுப்படும் வரை அங்கு நின்றனர். சிரிநாத ஸேரின் உறவினர் கள் கண் வெளிச்சத்திலேயே ஊர் சென்று விட்டனர். வாசலில பெற் றோல்மெக்ஸ் விளக்கு எரிய ஆரம்பித்தது.

அயல் வீடுகளிலிருந்து கொண்டு வந்திருந்த மேசை, கதிரைகள், மீள அனுப்பப்பட்டிருந்ததால் வேறு செய்வதற்கு எதுவுமிருக்கவில்லை.

உடபீல்லகொட வீட்டிலிருந்து இரவுச் சாப்பாடு வந்தது.

சிரிநாத ஸேர் உடபீல்லகொட மாமாவின் கையைப் பற்றியபடி திக்தித்திக்கிக் கதைத்தார்.

"நீங்களெல்லாம் இல்லாவிட்டால் இதையெல்லாம் எப்படிச் செய்வதென்று என்னால் நினைத்துப் பார்க்க முடியாது. இந்த உதவியை நான் ஒரு நாளும் மறக்கமாட்டன். நான் இருக்கும் நிலையில் எவ்வளவு அழகாக எல்லாம் நடந்து முடிந்தன."

கமலின் தகப்பனும் உடபீல்லகொட மாமாவும் கதையை வேறுபக்கமாகத் திருப்பினர்.

"மாலையில் மழை பெய்யுமென்று நினைத்தோம். படர்ந்து வந்த கருமேகத்தைக் காற்று அடித்துச் சென்றுவிட்டது."

சிரிநாத ஸேர் கமலின் பக்கமாகத் திரும்பினார்.

"கமல்! மூன்று பேரும் நிறையக் கஷ்டப்பட்டு விட்டீங்கள். வீட்டுக்குப் போய் நன்றாகத் தூங்குங்க. நீங்கள் செய்த உதவிக்கு எப்படிப் பிரதி உபகாரம் செய்வதென்று எனக்கு விளங்கவில்லை."

அவரது கண்களில் கண்ணீர் தளும்புவது கமலுக்குத் தெரிந்தது.



# 11

மரணச் சடங்கு கழிந்து இருநாட்களில் பள்ளிக்கூடத்தில் கேட்ட செய்தி கமலின் இதயத்தை நாராக்கியது.

"வீட்டுரிமையாளர் சிரிநாத ஸேரை போகச் சொல்லிவிட்டாராம். இன்னும் ஒரு மாதம்தான் இருக்க விடுவாராம்."

இந்தச் செய்தியை மல்லிகா வெளியிட்டாள். அவள் வீட்டுக்குச் சொந்தக்காரரான, ஓய்வுபெற்ற கிராமமுதல்வரின்—உறவுக்காரரி.

"ஏன் அப்படிச் சொல்லியிருக்கிறாங்க?" கமல் வினவினான்.

"இரண்டு மாதங்களாக வீட்டுக் கூலி கொடுக்கவில்லையாம்."

"ஸேருக்கு உத்தியோகம் இல்லாமல் போய் ஆறுமாதங்களுக்கு மேலாகிவிட்டது."

"ஆரம்பத்தில் எப்படியோ கட்டியிருக்கிறார். வீட்டு உரிமையாளர் எங்களது மூத்தப்பா. எந்தவித நல்லகுணமும் இல்லாதவர். எங்களது பாட்டனை ஏமாற்றி எங்கள் அப்பாவுக்குக் கிடைக்க விருந்த காணியை அபகரித்துக் கொண்டாராம். அதனால் தான் ஒரு ஏக்கர் நிலம் கூட எங்களுக்கு இல்லை."

"அப்படியென்னா இன்னும் ஒரு மாதத்தில் ஸேர் போக வேண்டும்.....?"

"ஆமாம்"

அன்று வகுப்பில் கற்பித்த எதுவும் கமலுக்கு விளங்கவில்லை.

"என்ன கமல்......," ஆசிரியர் கேட்டார்.

"தலைவலி"

அவன் மேசைமீது தலை வைத்துக் கொண்டான்.

வீட்டிலிருந்து வெளியேறச் சாமான் பொதி செய்யும் சிரிநாத ஸேரின் முகம் அவனது மூடிய கண்களுக்குள் தெரிந்தது.

மணியொலி அவனது தலை மேலுயர்த்தியது.

"என்ன?" நிமலும் பிரபாத்தும் கேட்டனர்.

சிரிநாத ஸேர் பற்றிய தகவலைக் கமல் கூறினான்.

"இரண்டு மாதத்துக்கு இருநூற்றைம்பது ரூபா செலுத்த வேண்டியுள்ளது. கடந்த நாட்களில் செய்த வேலைகளால் ஸேருக்கு ஏதும் பிரயோசனமானதாகத் தெரியவில்லை."

"விகாரையில் வகுப்பு வைக்க வந்திருந்தால் இந்தப் பிரச்சினை இல்லையே"

"இப்பொழுது அந்தக் கதையால் வேலையில்லை. இந்தக் காசை எப்படிக் கொடுப்பது?"

நிமல் விரல்நுனியால் மேசையைச் சுரண்டினான். பிரபாத் மதில் மேல் மல்லாந்து துடிக்கும் பூச்சொன்றைப் பார்த்தபடியிருந்தான். கமலின் பார்வை சாந்துச் சுவரில் கறுப்புப் படிவின் மீது லயித்திருந்தது.

அன்று பாடசாலை விட்டு வீட்டுக்குச் செல்கையில் அவர்களுக்கு வேறெந்த யோசனையும் இருக்கவில்லை. கேள்விக்குப் பதில் இல்லாததால்!

நகர்ப்புற அரிசி ஆலைகளின் லொறிகள் ஊருக்கு வந்து கொண்டிருந்தன. அதற்கு இடம் கொடுப்பதற்காக அவர்கள் காண் ஓரமாக நின்று கொண்டனர்.

"இந்தமுறை நல்ல விளைச்சல். வரிசையாக லொறிகள் வருகின்றன." நிமல் அமைதியைக் குலைத்துக் கொண்டு சொன்னான்.

கமலும் பிரபாத்தும் மௌனித்திருந்தனர். நிமலும் அவர்களின் முகமொழியை வாசித்து விளங்கி மௌனித்துப் போனான்.

"இந்த லொறியைக் கண்டதும் நான் நினைத்தன்." மௌன விரதத்தைப் பிரபாத் உடைத்தான்.

"நெல் வியாபாரத்துக்கு இறங்குமாறு ஸேருக்குச் சொல்வோம்."

கமலதும் நிமலதும் முகத்தில் புத்தொளி படர்ந்தது.

"நல்ல யோசனை." நிமல் சொன்னான்.

"யோசனை நல்லது. ஆனால், பிரச்சினை உண்டு."

கமலின் முகத்தில் கடும் தோற்றம்.

"பிரச்சினையா?"

"ஆம் முக்கியமான பிரச்சினை பணம். ஒரே தடவையில் இருபது அவனமாவது எடுக்க வேண்டும். அதற்கு எண்ணாயிரம் ரூபா வேண்டும். வீட்டுக் கூலி கொடுக்க இருநூற்றைம்பது ரூபா இல்லாத ஸேர் அவ்வளவு பெரிய தொகையை எப்படித் தேடிக் கொள்ள முடியும்?"

மீண்டும் மூவரும் மௌனமாகப் பயணத்தை ஆரம்பித்தனர்.

நிமல் நின்றான்.

"நில்லுங்க..... நாங்கள் உடபீல்லகொட மாமா வீட்டுக்குப் போவோம். அவர் இன்னம் நெல் விற்கவில்லை. முதன்முதலில் சூடு மிதித்தவர் அவர்தான். மாமாவுடன் கதைப்போம்."

"என்ன?"

"ஸேருக்குக் கடனாக நெல் கொடுக்கச் சொல்லுவோம். அந்த நெல்லை விற்றுக் கிடைக்கும் பணத்தால் ஸேருக்கு இன்னும் நெல் வாங்க முடியும். அம்பலன்தோட்டை விஜேசூரிய ஆலைக்கு நெல் விற்க முடியும். லூனம ஆலைக்கும் விற்கலாம்."

"நல்ல கருத்து." கமல் நினைத்தான்.

பசி தெரியவில்லை அவர்களுக்கு. உடபீல்லகொட வீட்டுக்குச் சென்றனர்.

பெரும்பாய்களில் போடப்பட்டிருந்த நெல்லிலிருந்து பதரை வேறாக்கிக் கொண்டிருந்த உடபீல்லகொட மாமா இவர்களைக் கண்டெழுந்தார்.

“பாடசாலையிலிருந்தா வாரீங்க?”

“ஆம் மாமா”

“புதிய சோறு சமைத்திருக்கிறன். சாப்பிடுவமா?”

“வேண்டாம் மாமா. எங்களது பங்கு வீட்டிலிருக்கும்.”

“நான் வற்புறுத்தவில்லை. அதுசரி ஏன் இந்தப் பக்கம்......?”

“மாமாவிடம் ஓர் உதவி கேட்க வந்தோம், சிரிநாத ஸேருக்காக.”

“நான் இப்பொழுது ஸேரின் வீட்டுக்குப் புதிய அரிசி கொஞ்சம் கொண்டு போய்க் கொடுத்தன். ஸேர் நிலக்கடலை பக்கற் செய்றார். அதனால் லாபம் கிட்டுமென்று நான் நம்பவில்லை.”

“லாபம் கிடைக் கூடியதொரு விடயத்தைச் செய்ய மாமாவால் முடியும்.”

“அதென்ன? அந்த ஸேருக்காக நான் எதையும் செய்வன். எனது பிள்ளைகள் படிக்காவிட்டாலும் எனக்குத் தெரியும் அவர் இந்தப் பாடசாலையில் வேலை செய்த விதம். கமலின் அப்பா எனக்கு எல்லாம் சொல்வார்.”

“இன்னும் நீங்கள் நெல் விற்கவில்லை அல்லவா?”

“அடுத்த மாதம்தான் விற்க இருக்கிறன். அப்போது விலையும் கூடும்.”

“எங்கள் ஸேர் இரண்டு மாதமாக வீட்டுக் கூலி கொடுக்க வில்லையாம். மல்லான கடையால் அரிசி வாங்கிச் சந்தையில் விற்பதன் மூலம் தான் ஒருவாறு வாழ்க்கையை ஓட்டுகிறார். மாமா வின் நெல் சிறிதையும் ஸேருக்குக் கொடுங்கள். ஸேர் அதை விற்றுக் கிடைக்கும் பணத்தால் மேலும் நெல் வாங்குவார். இரண்டு மாதமளவில் அவருக்கு அந்த வியாபாரத்தைச் செய்ய முடியும். பிறகு அந்தப் பணத்தைக் கேட்கலாம். மாமா இதற்கு விருப்ப மென்றால் ஸேரைச் சந்தியுங்கள். ஆனால், எங்களை மாத்திரம் சம்பந்தப்படுத்த வேண்டாம்.”

உடபீல்லகொட வீட்டு நோனாவும் முற்றத்திற்கு வந்தாள்.

"நானும் கேட்டுக் கொண்டிருந்தன். நல்ல யோசனைதான். ஆனால் இவ்வளவு பெருந்தொகையை எப்படிக் கொடுக்க முடியும்?" அவள் கேட்டாள்.

"நீங்கள் இதில் வாய் போட வேண்டாம். ஸேரைக் கஷ்டத்தி லிருந்து மீட்பதற்காகத்தான் இப்படிச் சொல்கிறார்கள். உடனடியாக ஒன்றும் சொல்ல முடியாது. இரவைக்குச் சொல்றன்."

மூன்று நண்பர்களதும் முகம் மாறிப் போவது உடபீல்லகொட மாமாவுக்குத் தெரிந்தது.

"பிள்ளைகள் மனதைப் பழுதாக்கிக் கொள்ள வேண்டாம். மாலையில் நான் சொல்றன். முடியுமென்னா இந்தப் பக்கம் வாங்க."

நண்பர்கள் பாதைக்கிறங்கினர்.

"உடபீல்லகொட மாமா கொஞ்சம் பயப்படுறார். போலிருக்கு." பிரபாத் நம்பிக்கையிழந்தான்.

"ஆயிரக்கணக்கல்லவா? உடனடியாக சொல்வது கஷ்டம். மாமா இதற்கு உதவி செய்வாரென்று என் மனம் சொல்கிறது." கமல் நம்பிக்கை தெரிவித்தான்.

"எனக்கென்றால் சந்தேகம். மாமி விருப்பமில்லையே" நிமலின் முகமும் இருட்டாகியது.

"மாமி விரும்பாத விஷயங்களைத் தான் மாமா விரும்புகிறார்."

கமலின் கதையால் சிரிப்பு எழுந்தது.

மாலை வேளையில் கமல் வயலில் நின்றான். நெற்குவியல் கமலின் நெஞ்சளவு உயர்ந்திருந்தது. நான்கு பெரும்பாய் நிறைந்த நெற்குவியல். அப்பாவுக்குப் பெருமையை ஏற்படுத்தியது.

கமலுக்குச் ஸேரை ஞாபகம் வந்தது. 'இந்த நெல்லை அவருக் குக் கொடுத்து வியாபாரத்தை ஆரம்பிக்க முடியுமென்றால்...... வட்டிக்காரனுக்கு அப்பா கடன். இரசாயனப் பசளை, களைக் கொல்லி மருந்து என்றும் மூன்று மாதமாகச் சாப்பாடு, மருந்து, புத்தகம், உடை என்றும் செலவானதெல்லாம் அவர்களுடைய

பணம். வட்டியுடன் சேர்த்து அதனைக் கொடுக்க வேண்டியிருப்ப தால் இன்னொருவனுக்கு நெல் விற்க முடியாது.'

உடபீல்லகொட மாமா இந்த நிலைக்கு ஆளாகாதது அவரது அண்ணன் விகாரையில் பிரதம பிக்கு என்பதால் தான்.

காற்று வீசாததால் நெல் வேலையை முடிக்க அப்பாவால் முடியவில்லை.

"எங்களுக்குத் தேவையான வேளை காற்றுக் கூட இல்லை."

வானில் பிரகாசிக்கும் சூரியனைப் பார்த்து அப்பா கோபத்தோடு சொன்னார்.

அவர் உயர்வாகி நின்று கொண்டு பிரம்பிக் கூடையால் நெல் லைக் கீழே விழுத்துகையில் பதரும் உமியும் காற்று வீசும் பக்க மாகத் தூரப் போய் விழும். நல்லவை பாயில் விழும். காறறில்லா விட்டால் சும்மா பார்த்திருக்க வேண்டியது தான்.

மாலையில் நண்பர்கள் உடபீல்லகொட மாமா வீட்டுக்குச சென் றனர். மாமாவும் மாமியும் வீட்டுத் தோட்ட மிளகாய்ப் பாத்தியருகில் களைபிடுங்கியபடி நின்றனர்.

"ஏன் வரவில்லையென்று பார்த்துக் கொண்டிருந்தன்." அவர் செடிக்கட்டைக் காணருகில் வைத்தபடி சொன்னார்.

"நான் உங்கள் ஸேரைச் சந்திக்கச் சென்றன். இதைக் கேட்டு வியப்படைந்தார். ஆரம்பத்தில் அவர் விருப்பப்படவில்லை. அதைச் செய்ய முடியுமாவென்று அவர் என்னிடம் கேட்டார். என்மீது விசு வாசம் வைத்து அவ்வளவு பெரிய தொகையைத் தருவதை என் னால் நம்பவே முடியவில்லை. எதிர்பாராத பிரச்சினையொன்று ஏற் பட்டால் என்னால் எந்தவகையிலும் அதனை ஈடுசெய்ய முடியாது. என்றெல்லாம் சொன்னார். என்னிடம் பணம் வாங்க வெட்கப்படு கிறாரோ என்றும் நினைத்தேன். மூன்று மாதத்தில் நெல்லின பெறு மதியையும் லாபத்தின் ஒரு பகுதியும் தரவேண்டுமென்று சொன்ன போது ஸேர் விருப்பம் தெரிவித்தார்."

நண்பர்களின் முகத்திலே மகிழ்ச்சியும் மனதிலோ மாமா பற்றிய பக்தியும் நிறைந்தது.

"உங்களுக்கு ஏற்றவிதமாக நான் வேலையை ஆரம்பித்து விட்டேன். ஸேருடன் சேர்ந்து அந்த் வேலையைச் சரியாகச் செய்யுங்கள்."

கமல் அவரை நெருங்கினான்.

"எங்களுக்கு மிக்க மகிழ்ச்சி மாமா. இது பற்றி நாங்கள ஒன்றும் கேட்கமாட்டோம். நாங்கள் இனி என்ன செய்ய வேண்டும்?"

"பிள்ளைகளால் முடியுமென்றால் சாக்குக் கொஞ்சம் தேடிக் கொடுங்கள். பழையதென்றாலும் பரவாயில்லை. எங்களுக்கு ஒழுங்கு படுத்தி எடுக்கமுடியும்."

"நல்லது மாமா. பெரிய சாக்கு நாற்பதாவது வேண்டுமல்லவா?"

"ஆம் சின்னதாயின் அறுபது. என்னிடமும் கொஞ்சம் எடுக்கலாம். எங்களுடைய அதிகமான நெல் வெறும் நிலத்தில் போட்டபடி இருக்கு."

"தராசும் வேண்டுமல்லவா?" நிமல் கேட்டான்.

"அதுசரி. ஆப்தீன் ஸேர் தராசு தேடித் தருவார். நேரத்து அவரும் வந்திருக்கார். மாடினிடம் கை டிரக்டர் ஒன்றுண்டு. அதன டேலர் பெரியது. அதைக் கூலிக்குக் கொடுக்க மாட்டின் விருப்பம்."

எல்லாம் ஏற்பாடாகியிருக்கும் விதம் தான், நண்பர்களின் திருப்திக்குக் காரணமாகியது.

"இப்பொழுது நாங்கள் சாக்குத் தேடுவோம்." பிரபாத் தேடலுக்குத் தயாரானான்.

"சாக்கு காசுக்கு வாங்குவதென்றால் பெருந்தொகை தேவைப்படும். அவசரமாகச் சாக்குத் தேவை."

அன்று இரவு அவர்கள் விகாரைக்குச் சென்றனர்.

சிறிய பிக்கு களஞ்சிய அறையிலிருந்து நான்கு சாக்குகள் தூசு தட்டித்தந்தார். இன்னும் சில வீடுகளால் பன்னிரண்டு சாக்குகள் கிட்டின. அதைச் சீராக்கப் பிரபாத்தின் தாய் பொறுப்பெடுத்தாள்.

"இதில் அந்த அளவுக்குச் சிக்கலில்லை. இன்று இரவிலெல்லாம் ஒழுங்கு செய்து, காலையில் உடபீல்லகொட வீட்டுக்குக் கொண்டு போய்ச் சேர்க்கிறேன்." அவள் சொன்னாள்.



# 12

"முதலாளிமார் நெல்வாங்கும் அதே விலைக்குச் சிரிநாத ஸேரும் வாங்குகிறார். அதனால நாங்க எங்க ஸேருக்குத்தான் நெல் கொடுக்க வேணும்." கமல் பாடசாலையில் நண்பர்களுக்குச் சொன்னான்.

"நேற்று ட்ரக்டர் ஒன்றில் ஸேர் ஏறிச் செல்வதை நானும் கண்டேன். டேலரில் நெல் மூடைகள் நிறைந்திருந்தன. ஸேர் எனனைக் கண்டு சிரித்தார்."

"தொப்பி போட்டுச் ஸாரமும் சேட்டும் அணிந்திருந்தார்." ஒரு சிறுமி சொன்னாள்.

"ஸேர் உங்கள் வீடுகளுக்கும் வருவார். முடிந்தளவு நெல் கொடுங்கள். காசுக்குத்தான்." நிமல் அவளுக்குச் சொன்னான்.

"நீங்கள் கொடுத்தீர்களா?"

"ஆம் நேற்றுக் கொடுத்தேன்."

"மறைக்க வேண்டியதில்லை. எங்கள் அப்பாமார் நெல்மிதிக்கும் வரை தங்களது கடனை எடுத்துக் கொள்ள முதலாளிமார் பார்த்திருப்பார்கள். கடன் மாத்திரமல்ல. நூற்றுக்கைம்பது வட்டியும சேர்த்துத் தரன். எஞ்சுவது மிகவும் கொஞ்சம் தான். நாங்கள வெளியே விற்பது அவர்களுக்கு விருப்பமில்லையென்று உங்களுக்குத் தெரியும் தானே. கள்ளத் தராசுடன் வந்து அவங்களுக்கு விருப்பமான படி நிறுத்துக் கொள்வார்கள். அவங்களுக்குத் தெரியாமல் கொஞ்சம் கொடுக்கும் படி அப்பாவுக்குச் சொல்றன்." ஒரு மாணவன் கூறினார்.

"கொஞ்சமென்றாலும் நாங்கள் ஸேருக்குக் கொடுக்க வேணும்." பிரபாத்தின் தீர்வு.

அவர்கள் பாடசாலையில் செய்த கலந்துரையாடலுக்கு நல்ல பலன் கிடைத்தது. சிரிநாத ஸேர் சாக்குக் கட்டும் தராசுமாக நடந்து வந்தார். அவருடன் வேலை நிறுத்தம் செய்த இன்னொரு ஆசிரியரான ரணவீரவும் வந்தார். பக்க உதவிக்காகத்தான்.

"ஸேருக்குக் கொடுக்கும்படி மகன் சொன்னான். ம்..... எப்படி நாங்கள் தருவது? பிறகு முதலாளிக்கு முகம் கொடுக்க வேண் டுமே?" அவரைக் கண்ணுற்ற ஒரு தாய் கவலைப்பட்டாள்.

"எனக்குத் தெரியும். பிரச்சினை இல்லாவிட்டால் எனக்கும் கொஞ் சம் தாருங்கள்." சிரிநாத ஸேர் சமாளித்தார்.

"ஸேருக்குத் தொழில் கிடைக்காதா?" விவசாயி ஒருவர் கேட்டார்.

"இல்லை."

"சுகமில்லையென்று கடிதம் கொடுத்துச் சிலர் வேலைக்குப் போகிறார்களாமே?"

"நான் நோயாளியல்ல. உண்மையில் நான் வேலை நிறுத்தம் செய்தேன்." சிரிநாத ஸேர் சிரித்தபடி சொன்னார்.

"மந்திரியிடம் போயிருந்தால் வேலை எடுத்திருக்கலாம்." இன்னொரு விவசாயி யோசனை தெரிவித்தார்.

"சிலர் அப்படிப் போய் வேலை எடுத்திருக்கிறாங்கள். நாங்கள் நியாயமான கோரிக்கைகளை முன் வைத்து ஸ்ட்ரைக் செய்தோம். மக்களுக்குச் சேவை செய்யவென்று மந்திரிப் பதவி பெற்றவர்கள் அவர்களது சம்பளத்தை உயர்த்திக் கொண்டது உங்களுக்குத் தெரியும். வருடத்துக்கு இரண்டு மூன்று தடவை சாமான் விலை கூட்டி வாக்களித்த மக்களின் வயிற்றிலடித்தார்கள். ஆசிரியர்களின் சம்பளம் எவ்வளவென்று தெரியும் தானே! எப்பொழுதும் எண்ணூறு ரூபாதான். ஒரு நாளைக்கு முப்பது ரூபா கூட இல்லை. இந்தச் சம்பளத்தால் வாழமுடியுமா? நாங்கள் அறுபதினாயிரம் பேர் அளவில் ஸ்ட்ரைக் செய்தோம். அதிகமானவர்கள் ஸ்ட்ரைக் செய்யாததால் நாங்கள் தோல்வியடைந்தோம். தோற்றாலும்

நாங்கள் தொழில் கேட்டு, தனித்தனியாகப் பெரியவர்களிடம் போனதில்லை."

சிரிநாத ஸேர் அவர்களுக்கு நீண்ட பதிலளித்தார்

"ஆசிரியர் வேலை போன்றதல்ல நெல் வியாபாரம். அதிககாலம் போவதற்கிடையில் நெல் ஆலை- லொறி எல்லாம் வேண்டிச் சந்தோசமாக இருக்கலாம்." இன்னொரு விவசாயி கூறினார்.

"எனக்கென்றால் அப்படியொரு எண்ணமில்லை." அவர் சிரித்தார்.

"ஸேர் சொல்வது உண்மை. மந்திரிமாரெல்லாம் தத்தமது பைகளை நிறைத்துக் கொண்டார்கள். தெரியாதா? எங்கட ஆளுக் குத் தேர்தல் காலத்தில் இருந்த காரை நாங்களே தள்ள வேண்டி நேர்ந்தது. நாங்கள் அவரைக் கவுன்ஸிலுக்கு அனுப்பினோம். இப்பொழுது எத்தனை கார்கள்....... எத்தனை வீடுகள்...... வெளி நாட்டு வங்கிகளில் பணம். உங்களைப் போன்றவர்களுக்குச சொற் பப்படியுயர்வு கேட்டதற்கு வேலையிலிருந்து வெளியே தள்ளி விட்டார்கள். இது பெரும் அநீதி!"

சிரிநாத ஸேரைப் பல விவசாயிகள் அங்கீகரித்துப் பேசினர்.

"அரசியல் கதைக்காமல் நெல் வியாபாரத்தை மாத்திரம் செய்யச் சொல்லுங்கள்."

கிராமசபை அங்கத்தவர் யாருடனோ சொன்ன கதை ஊரில் பரவியது.

"எனக்கு நடந்ததை நான் சொன்னேன். அது அரசியலென்றால் நான் என்ன செய்ய முடியும்?"

அவர் மெம்பருக்குப் பதில் கொடுத்தார்.

"அவர் பெருமையான கதை கதைப்பார். ஏதாதவது செய்து, யாருடைய பின்னாலாவது சென்று தொழிலை எடுக்காமல் எங்க ளிடம் நெல் பிச்சை கேட்கிறார். பிள்ளைகள் சொன்னார்களென் பதற்காக... நானென்றால் ஒரு நெல்மணி கூடக் கொடுக்கமாட்டேன்."

பென்றிஸ் அப்பு, கூட்டுறவுக் கடையில் நின்று சொன்ன கதை கமலுக்குக் கேட்கக் கிடைத்தது.

“அங்கு நின்ற பலர் தலை சாய்த்து அந்தக் கதையைக் கேட்டிருந்தார்களாம்.” நிமல் தன் காதில் விழுந்த சங்கதியைச் சொன்னான்.

“ஸேர் இந்தக் கதைகளைக் கணக்கெடுப்பதில்லை. ஊரில் அதிகமானவர்கள் ஸேரை விரும்புகிறார்கள்.”

பிரபாத்தின் கருத்தும் அதுதான்.

கமல் உடபீல்லகொட மாமாவைப் போய்ச் சந்தித்தான். அவர் சிரிநாத ஸேர் நெல்வியாபாரியாக மாறிய விதத்தைச் சொன்னார்.

“ஸேர் எனது நெல்லை இருபத்திரண்டாயிரத்திற்கு விற்றார். அவரின் வற்புறுத்தலுக்காக நானும் சென்றேன். அந்தக் காசை எடுத்துக் கொண்டு அன்று மாலை சூட்டுக் களத்துக்குச் சென்றோம். இருபது அவனம் நெல் அவர் நிறுத்தெடுத்தார். தராசை பார்க்கும் படி அங்கிருந்தவர்களுக்குச் சொன்னார். உங்களை நம்புகிறோம்! என்று சொல்லி அவர்கள் சிரித்தார்கள். காசு கொடுத்து விட்டு, இன்னொரு களத்துக்குச் சென்று நான்கு அவனம் எடுத்தோம். இன்னொரு வீட்டுக்குச் சென்று மூன்று அவனம் எடுத்தோம். ட்ராக்டரை இழுக்க முடியாதளவு பாரம். அதன் பின்னர் அம்பலன் தொட விஜேசூரிய ஆலைக்குச் சென்றோம். அங்கு லயனல் ஐயா உடனே காசு கொடுத்தார். சிலருக்கு நெல்குற்றி அரிசி விற்ற பின்பே காசு கொடுப்பார்கள். ஸ்ட்ரைக் பண்ணியவரென்றபடியால் இன்னொரு லோட் கொண்டு வரச்சொல்லியே உடனே காசு கொடுத்தார்கள். கிலோவுக்குப் பத்துப் பதினைந்து சதம் வைத்துக் கொண்டு நெல்லை விற்க முடிந்தது. முதல் பயணத்திலேயே இருநூற்றி இருபத்தைந்து ரூபா லாபம். ட்ராக்டருக்கு நூறு ரூபா போக நூற்றி இருபத்தைந்து மிச்சம். அடுத்தநாள் இரண்டு ட்ரிப் அடித்தோம். அன்று இரவு என்ன செய்தார் தெரியுமா? வீட்டுக் கூலியைக் கொடுத்தார். அன்று அவருக்கு நல்ல மகிழ்ச்சி சாப்பிட்டு விட்டுச் செல்லுமாறு என்னை வற்புறுத்தினார். பிள்ளைகளுக்கென்று அன்றிரவு தயிர் ஒரு முட்டியும் எடுப்பித்தார். அவர் சின்னப் பிள்ளை போன்வரென்று நினைத்தேன்.”

கமலின் கண்களில் கண்ணீர் தளும்பியது.

“சூட்டுக்களங்களில் சிரிநாத ஸேர் நெல் மூட்டைகளைத் தூக்கும் போது, “நாங்கள் தூக்குகிறோம்” என்று சனங்கள் சத்தமிடுவார்கள். அவர் சும்மா இருக்கமாட்டார். ஸ்ட்ரைக் செய்த மரவேலை ஆசிரியர் ஒருவரையும் உதவிக்குச் சேர்த்திருந்தார். அவரும் மிகவும் நல்லவர். மூடை தூக்குவார். நெல் நிறுப்பார். மாலையில் அவருக்கும் ஒரு தொகை கொடுப்பார். “நான் குடும்பக்காரனல்ல. சிறிய தொகை தாரும்” என்று அவர் சொல்வார்.”

உடபீல்லகொட மாமா எந்தவித களைப்புமில்லாமல் ஸேரைப் பற்றிக் கதைப்பார். அதன் மூலம் அவர் ஒருவித திருப்தியடைவது கமலுக்குத் தெரிந்தது.

“ஸேர் டிரக்டரில் போவதை நான் கண்டேன். பின்பு மறைந்திருந்து பார்த்தேன். வெய்யிலுக்கு அவரது தோற்றமே மாறி முகம் கறுத்துப் போயிருந்தது. சிரித்துச் சிரித்துச் சென்றார்.” கமல் சொன்னான்.

“ஆமாம். இப்பொழுது நல்ல மகிழ்ச்சியில் இருக்கிறார். கஷ்டப்பட்டு விட்டு வீட்டுக்குப் போய் கருப்பட்டியோடு தேங்காய்ப்பூ மரம் அவித்துக் குடிப்பார். கடந்த சில நாட்களில் மாலையில் நான் அவர் வீட்டுப் பக்கம் செல்வேன். சந்தோஷமாக இருக்கார். ஆனால் முதலாளிமாரின் முகம் சரியில்லை. ஸேருக்கு நெல் கொடுத்த சிலரை எச்சரித்துமிருக்கிறார்கள்.”

“ஏதாவது பிரச்சினை வருமா மாமா?” பயந்த சுபாவத்தோடு கமல் கேட்டான்.

“அதை நாங்கள் பார்த்துக் கொள்வோம்.”

உடபீல்லகொட மாமாவின் குரலில் வழமையான சாந்த சுபாவம் தென்படவில்லை.

❄ ❄ ❄ ❄ ❄ ❄

போயா விடுமுறை தினமொன்றில் கமல், நிமல், பிரபாத் ஆகியோர் சிறிய பிக்குவுடன் சிரிநாத ஸேரின் வீட்டுக்குச் சென்றனர். அவர் ஸ்தோப்பில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார்.

குழுவினரைக் கண்டவுடன் எழுந்தவர், பிக்குவை வணங்கி விரிப்பிட்ட கதிரையை வைத்தார்.

"நாங்கள் வந்ததால் எழுதுவதை நிறுத்தி விட்டீர்கள்." பிக்கு இருக்கையில் அமர்ந்தபடி சொன்னார்.

"பிறகு எழுதலாம்..... கூட்டாளிமார் மூவரும் அந்தப் பாயில் இருங்கள்."

சிரிநாத ஸேர் தங்கள் மாணவர்களுக்குப் பாயைக் காட்டியபடி சொன்னார். அவர் இன்னொரு பாயில் அமர்ந்து கொண்டார்.

"சுவாமி! வேலை நிறுத்தம் செய்த எழுதுநர் ஒருவர் தற்கொலை செய்து கொண்டதாக இன்றைய பத்திரிகையிலும் வந்துள்ளது. ஏழு பிள்ளையின் தகப்பன். அவருடைய வீட்டுக்குத்தான் இந்தக் கடிதத்தை எழுதுகிறேன்." அவர் பத்திரிகையைக் காட்டிச் சொன்னார்.

"நானும் வாசித்தன். அவர் பல இடங்களுக்கு வேலை தேடிக் கொண்டு சென்றிருக்கிறார். பிள்ளைகளின் பசிக் கொடுமையைப் பார்க்க முடியாமல் தான் இப்படிச் செய்து கொண்டுள்ளார். மிகவும் கவலையான நிலைமை." சிறிய சுவாமி சொன்னார்.

"இது பதினோராவது நபர் சுவாமி. இன்னும் சாவார்கள். எனக்கு இந்த ஊரவர்கள் உதவி செய்வதால் குறைபாடு தெரியாமல் இருக்கிறன். எல்லோருக்கும் அப்படி இல்லையே. சிறுதொரகைக் காசு அனுப்புவதற்காகவே இக்கடிதம் எழுதுறன். அடுத்தவர்களதும் முகவரியைத் தேடி முடிந்த தொகையை அனுப்ப வேண்டும். இது பிரச்சினைக்குத் தீர்வல்ல. இருந்தும் ஒரு தனிமனிதனால் செய்யக் கூடியது இவ்வளவுதான்."

அவரது முகம் அனுதாபமும் கவலையும் மிகுந்த உணர்வுகளால் நிறைந்திருப்பது பிக்குவுக்குத் தெரிந்தது.

"வெளிநாட்டுத் தொழிலாளர் இயக்கம் மீண்டுமொருறை வேலை நிறுத்தம் செய்தவர்களுக்கு வேலை வழங்குமாறு வற்புறுத்தியி ருக்கிறதல்லவா?"

“உண்மைதான் சுவாமி. வேலை வழங்குவதாக பல அமைச்சர்க ளும் கூறியுள்ளனர். சிலருக்கு கொடுத்தமிருக்கிறார்கள். எங்களைப் பற்றியென்றால் எந்தக் கதையுமில்லை. நாங்கள் அம்பலந்தோட் டையில் பிகடிங் செய்தது சுவாமிக்கு ஞாபகமிருக்கலாம். அன்று அதனை ஒழுங்குபடுத்திய எழுதுவினைஞரைக் கைது செய்தார்கள். அவர் வேலை செய்த அமைச்சில் ஸ்ட்ரைக் செய்த எல்லோரையும் வேலைக்கு சேர்த்துள்ளார். அந்த எழுதுவினைஞரை மாத்திரம் எடுக்கவில்லை. சீர்குலைக்கும் வேலையில் ஈடுபட்டதனால் அவரு க்கு வேலை வழங்குவதில்லையாம்.”

“ஸேருக்குக் கிடைக்குமல்லவா?”

“சொல்ல முடியாது.”

“இப்போது செய்யும் வேலை எப்படி?”

“நல்ல வருமானம். எல்லாச் சந்தர்ப்பங்களிலும் எனக்கு மாணவர் கள் உதவுகிறார்கள். பிள்ளைகளின் வேண்டுகோளின் பேரில் பெற்றார் எனக்கு நெல் தருகிறார்கள். உடபீல்லகொட அண்ணா தான் எனக்கு முதன்முதலில் நெல் வாங்கப் பணம் தந்தார். அந்த உதவி கிடைக்காமலிருந்திருந்தால் இந்த வியாபாரத்தைப் பற்றி என்னால நினைத்துக் கூடப் பார்க்க முடியாது. இப்படியான உதவி எல்லோருக்கும் கிடைப்பதில்லையே. மீண்டும் எகவுண்ட்டுக்குச் சாமான் எடுக்குமாறு பெரேரா முதலாளி சொன்னார்......

“இப்பொழுது நான் அம்பலந்தொட்ட ‘சுரங்க டிரேடர்ஸ்’ இல்தான் சாமான் வாங்குறன். அதன் உரிமையாளர் அந்த வீர ஸ்ட்ரைக் செய்த ஒரு எழுதுநர். அவரிடம் சாமான வேண்டும்படி நான் நான் எனக்குத் தெரிந்த எல்லோருக்கும் சொல்லுறன்.”

சிறிநாத ஸேரின் மனைவி தேநீர் கொண்டு வந்தார். சுனீதவும் தீபானியும் பிஸ்கட் வாழைப்பழம் பரிமாறினர்.

“வீட்டிலும் அரிசி விற்பதாகக் கேள்வி. ஒரு நாளைக்கு ஒரு மூட்டையாவது......”

“அதற்கு மேல்..... பிள்ளைகள் வந்து கொண்டு போகிறார்கள். சந்திக்கடைக்கு அரிசி வேண்டவரும் சிலர் இப்போது இங்கே வருகிறாங்கள். ஒரு கிலோவுக்குப் பத்துச் சதமளவு கிடைக்கிறது.

விஜேசூரிய ஆலையிலிருக்கும் சாந்தாவும் லயனலும் தான் எனக்கு இந்த யோசனையை முன்வைத்தார்கள். சரி மூன்று பேருடனும் கதைக்கவும் கிடைக்கவில்லை. இனி எப்படி? இந்த முறை வகுப்பில் மூவரும் முதலாம் இரண்டாம் மூன்றாம் இடத்துக்கு வந்ததாகக் கேள்வி."

பிள்ளைகள் வெட்கத்தால் கீழே பார்த்துக் கொண்டனர்.

கமல் கதைத்தான்.

"ஆம் ஸேர். நிமல் முதலாம் பிள்ளை. என்னை விட ஐந்து புள்ளிகள் அதிகம். பிரபாத் என்னை விட இரண்டு குறைவு."

"மூன்று பேரும் ஒரே மாதிரி."

"சாதாரணமாக மூவரது புள்ளிகளும் தொண்ணூறுக்கு மேல்....."

"மிகவும் நல்லது...... சாதாரண தரப் பரீட்சை நெருங்குறதல்லவா? விகாரையில் வகுப்பு ஆரம்பித்தால் நான் உதவுவேன். இலவசமாகத்தான்."

பிக்கு பிள்ளைகளைப் பார்த்தார்.

அவர்கள் கீழே பார்த்துக் கொண்டனர்.



# 13

கமலின் வீட்டுக்கு நிமலும் பிரபாத்தும் வந்திருந்தார்கள். சுருக்கக் குறிப்புப் புத்தகத்தைப் புரட்டியபடி அவர்கள் கலந்துரையாடினர். கேள்வி கேட்டு பதில் சொல்லி இரண்டு வருடப் பாடங்களை இரை மீட்டினர்.

தெளிவற்ற இடங்களில் அவர்களுக்குச் சிரிநாத ஸேர் ஞாபகத்துக்கு வந்தார்.

“இன்று போயா நாள். ஸேர் வீட்டிலிருப்பார். போய்ச் சந்திப்போம்.” கமல் ஆலோசனை வைத்தான்.

“ஆம் போவோம்.” நிமல் அதை உறுதிப்படுத்தினான்.

அவர்கள் போய்ச் சந்தித்தார்கள். பிரச்சினைகளுக்குத் தீர்வு கிட்டியது. பரீட்சைக்கு வரலாமென்று உத்தேசிக்கப்படும் சில கேள்விகளை அவர் எழுப்பி, அதற்கான விடைகளைக் கலந்துரையாடினார்.

“எனக்குப் பிரச்சினையில்லை. இரவைக்கு வாருங்கள்.” அவர்கள் வெளியிறங்கும் போது சொன்னார்.

“பிரச்சினை ஏற்பட்டால் வருவோம் ஸேர்.”

அன்று அவர் கிழிந்த சாக்குக்களைத் தைத்தபடியிருந்தார். அதன் பின்னர் அவர்கள் போகவில்லை.

ஒருநாள் இரவு கமலின் வீட்டுக்குச் சிரிநாத ஸேர் வந்தார். மூன்று நண்பர்களும் அங்கே இருந்தனர்.

“ஏன் அந்தப் பக்கம் வரவில்லை. எனக்குத் தொல்லையென்று நினைத்தீங்களா?”

“எங்களுக்குப் பிரச்சினை ஏற்படவில்லை.” பிரபாத் சொன்னான்.

அவர் சிரித்தார்.

“பிரச்சினை இல்லையென்றால் மிக்க மகிழ்ச்சி. நல்லது இந்தக் கணக்கைச் செய்து பாருங்கள்.”

“சிரிநாத ஸேர் சிக்கலான கணக்கொன்றைக் கொடுத்தார்.”

நண்பர்கள் அதனைச் செய்தார்கள். மேலும் அவ்வாறு சிக்கலான சில கணக்குகள் கொடுத்தார்.

“என்னிடம் பழைய வினாப்பத்திரங்கள் சில இருக்கின்றன. நாளைக்கு அனுப்புறன். இரவைக்கு வந்தீர்களென்றால் எனக்கும் நல்லது. இல்லாவிட்டால், மறந்து போய்விடுவன்.”

அவர் கோப்பி அருந்தி விட்டு வெளியேற முற்படுகையில் அங்கே கமலின் தந்தையும் உடபீல்லகொட மாமாவும் வந்தார்கள்.

“நான் போகப் பார்த்தன். மகளுக்குக் கொஞ்சம் காய்ச்சல்.”

அதன் பின்னர் பிள்ளைகள் சிரிநாத ஸேரின் பிரச்சினைகளைப் பற்றியே கதைத்தனர்.

உடபீல்லகொட மாமாவுக்கு வெற்றிலைத் தட்டைக் கொடுத்த படி, “மாமா அந்தப் பணம் கிடைத்து விட்டுதா?” என்று கமல் கேட்டான்.

“எந்தப் பணம்?”

“சிரிநாத ஸேருக்கு நெல்லுக் கொடுத்தது?”

“மாதக் கடைசியில் அதனைத் தந்து விட்டார். வேண்டாம் அடுத்த மாதம் எடுக்கலாம் என்று சொன்னேன். அவர் லாபத்தில் ஒரு பங்குகூடத் தந்தார்.”

“நீங்கள் எடுத்தீங்களா மாமா?”

"ஒன்றரை மாதத்தில் நிறையச் சம்பாதித்து விட்டபோது ஸேருக்கே வியப்பாகவிருந்தது. சில நாட்களில் இரண்டு மூன்று தடவையும் நெல் ஏற்றியிருக்கிறார். விவசாயிகளிடம் கிலோ மூன்று ரூபாவுக்கு வாங்கிய நெல்லை ஆலைக்குப் பத்துச் சத லாபத்திற்கு விற்றுள்ளார். இடைத் தரகாராகச் செயற்பட்டும் எனக்கு விவசாயி களின் அனுதாபம் காரணமாக அந்தப் பத்துச் சதம் கிடைக்கிறது. இதுவும் விவசாயிகளுக்கே சேர வேண்டும் என்று சிரிநாத ஸேர் சொல்வார். அவருடைய கருத்துக்கள் புதுமையானவை. லாபப் பங்கு கிடைத்தவுடன் அதையும் வியாபாரத்துக்கு பயன்படுத்துமாறு கேட்டுக் கொண்டேன். நெல் பணமாகிறது. இவ்வாறு நடைபெறும் தடவைகள் அதிகரிக்குமளவுக்கு லாபமும் அதிகரிக்கிறது....................

"வியாபாரத்திற்கு கொஞ்சம் தந்திரமும் தேவையென விஜேசூரிய ஆலையில் யாரோ சொல்லிவிட்டான். விவசாயிகள் சாக்குகளில் பதர் நெல்லை நிரப்புவதாக அந்த மனிதன் குறிப்பிட் டான். இப்படி சின்ன அநீதிகள் செய்வது பரவாயில்லையென அவன் அறிவுறுத்த முயன்றான். சிரிநாத ஸேருக்குக் கோபம் வந்து விட்டது......

"ஒருநாளும் விவசாயிகள் என்னை ஏமாற்றவில்லை. அவர்கள் மீது எனக்கு மதிப்புண்டு. இந்த வியாபாரம் காரணமாக அது மேலும் அதிகரித்து விட்டது. உண்மையான அன்பு அவர்களிட முண்டு. வியர்வை கொட்டும் பொழுது கூடாத உணர்வுகள் கழுவப் படுவதாகவே எனக்குப் படுகிறது. இடையிடையே கூடாதவர்களும் இருக்கக் கூடும். அநீதிக்கு ஆளாகும் போது தான் மோசமான நடத்தைகள் வெளிப்படும். அப்படி ஓரிருவர் இருக்கிறார்களென் பதற்காக கள்ளத் தராசு மூலம் ஊழல் செய்ய என்னால் முடியாது." சிரிநாத ஸேர் அப்படிச் சொன்ன போது அம்மனிதன் வாய் மூடி விட்டான்.

"ஆனால் பெரிதாக முன்னேறியுள்ள வியாபாரிகளெல்லாம அப்படி அநீதியாக நடந்து கொண்டவர்கள்தான்." என்று அங்கு நின்ற இன் னொருவர் சொன்னார்.

"அது உண்மை தான். அப்படியானதொரு முன்னேற்றம் எனக் குத் தேவையில்லை." என்றவாறு சாக்குக் கட்டொன்றுடன் ட்ராக்ட ரில் ஏறினார் சிரிநாத ஸேர்.

“இப்பொழுது இங்கு நெல் குறைந்து வருகிறது மாமா. இனிப் போலான பக்கமாகச் சென்றால் நல்லது. அங்கு நெல் வெட்டுகிறார்களாம்.”

“போலானையில் எங்களது தம்பிமார் இருக்கிறார்கள். அங்கு போய் நெல் எடுத்துத்தர என்னால் முடியும். தூரமென்றபடியால் கை டிராக்டரில் கொண்டு வந்து பிரயோசனமில்லை.”

“அப்படியென்றால் ஸேர் வேறேதாவது செய்ய வேண்டி வரும். கமலின் குரலில் சோகம் கவிந்தது.”

அவனுடைய தகப்பன் அவனுக்குள்ளும் மீண்டும் நம்பிக்கையை ஏற்படுத்தினார்.

“கை ட்ராக்டரில் போய் நெல் வாங்க முடியும் தானே? விடி காலையிலேயே சென்றால் இரண்டு தடவை அம்பலாந்தோட்டைக் குப் போய் வரலாம்.”

“உங்களுக்குத் தெரிந்தவர்கள் அங்கே இருக்கிறார்களல்லவா?” கமல் கேட்டான்.

“புஞ்சிஹேனகமுவயில் பாலாய்யா என்று உறவினர் ஒருவர் இருக்கிறார். அவருக்கு வயலுமுண்டு. பக்கத்தில் ஹாராதிய ஐயாவின் வயலுமுண்டு. அவங்கள் மறுக்கப் போவதில்லை.”

“அவங்களுக்குத் தகவல் கொடுக்க அப்பாவால் முடியுந்தானே?”

இரண்டு நாட்களின் பின் உடபீல்லகொட மாமாவுடன் கை ட்ராக்டரில் சிரிநாத ஸேர் போலானைக்குச் சென்றார். அன்று இரவே பயணச் செய்தியை உடபீல்லகொட மாமா கமலுக்கு எடுத்துக் கூறினார்.

“அம்பலாந்தோட்டையிலிருந்து போலானைக்கு நான்கு மைல். அங்கு ஒரு தேநீர் கடையில் வைத்த அலககோன் என்ற லிகிதரை ஸேர் சந்தித்தார். வேலை நிறுத்தத்தினால் வேலையற்றுப் போனதாலேயே அவர் அந்தத் தேநீர்க் கடையை ஆரம்பித்தி ருந்தார். கடையருகில் வைத்து பியஸேன எனும் இன்னொரு வேலை நிறுத்தக்கார ஆசிரியரைக் கண்டார். அவர் ஸேருடன் இணைந்து பல இடங்களுக்குச் சென்றார்.”

"அப்படியென்னா போலானைக்குச் சென்றதால் ஒன்றும் நடக்கிறதாக இல்லையென்ன?" கமல் கேட்டான்.

"அப்படிச் சொல்ல முடியாது. அங்கு இப்போது தான் நெல் வெட்ட ஆரம்பித்திருந்தார்கள். இன்னும் இரண்டொரு நாட்களில் நிறையக் கிடைக்கும். அவரை அறிந்த தெரிந்த பலர் அங்கேயுண்டு. நிச்சயம் உதவுவார்கள். சிரிநாத ஸேர் அங்கு பொபுத்த வித்தியாலய மேல் வகுப்பு மாணவர்களுக்கு இலவசமாக மாலை வகுப்பெடுத்துள்ளார். அந்த மாணவர்கள் பலரையும் சந்தித்துள்ளார். அவர்களும் உதவி செய்கிறார்கள்."

"ஸேருக்கு இரண்டொரு மாதத்துக்கு வேலையுண்டு."

கமலுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது.

"ஸேரைப் பற்றிய தகவல்களை எங்களுக்குச் சொல்லுங்கள் மாமா. இந்த இரண்டு வாரமும் நாங்கள் வெளியே வராமல் படிப்போம். அதன் பிறகு எங்களுக்குப் பரீட்சை." நிமல் சொன்னான்.



# 14

அன்று பரீட்சை பெறுபேறு வெளிவந்திருந்தது. மாலை வேளையில் தனது நண்பர்களோடு கமல் சிரிநாத ஸேரின் வீட்டுக்குச் சென்றான்.

அவர்களது முகங்கள் மலர்ந்திருந்தன.

வீட்டு வெளிவாசலில் புதுக்கதிரைகள் காணப்பட்டன. உள்ளே இருந்த மேசையும் புதுசுதான்.

நிமல் கமலைப் பார்த்தான்.

"புதிய தளவாடங்கள் கொண்டு வந்திருக்கிறார் என்ன?"

"அடகு வைக்கப்பட்டிருந்த சைக்கிளைக் கூட மீட்டியிருக்கிறார்."

சிரிநாத ஸேர் வீட்டிலிருக்கவில்லை. அவரது மனைவி முன்னே வந்தாள்.

"எப்படி? நீண்ட நாட்களுக்குப் பிறகு வந்திருக்கீங்க? ஸேர் சந்தைக்குப் போனவர். இப்போது வந்து கொண்டிருப்பார்." அவள் சொன்னாள்.

"ஸேர் இன்று என்ன கொண்டு போனார்." கமல் கேட்டான்.

"திக்குவல்லைத் தோட்டக்காரனிடம் ஐநூறு தேங்காய் கிடைப்பதாய் சொல்லிக் கொண்டு காலமே போய் விட்டார். சுனீதவும் சென்றான்."

"அப்படியா?"

"ஆமா சுனீதவும் அவ்வப்போது சந்தைகளுக்குப் போயிருக் கிறான். சென்ற வாரம் கிரிஇப்பன் ஆர, சூரிவெவ சந்தைகளுக்குச் சென்றான். அங்கு கருவாடுதான் தேவையாம். மாத்தறை கேஜீரி லொறிக்குச் சொல்லிக் கொழும்பிலிருந்து கருவாடு தருவித்துக் கொள்கிறோம். நெல் கிடைக்கும் வரை அவ்வாறு சந்தைக்குச் செல்கிறோம்."

"மாடின் ஐயாவின் ட்ராக்டருக்கு ஒவ்வொரு நாளும் வேலையி ருக்கும்."

வெளியே ட்ராக்டர் சத்தம் கேட்டது.

பிரபாத் முற்றத்துக்கு வந்தான். கமலும் நிமலும் கூட எழுந்தனர். ட்ராக்டர் உள்ளே வந்து நின்றது.

சிரிநாத ஸேர் ட்ராக்டரிலிருந்து இறங்கினார். தொப்பியைக் கழற்றித் தலையில் படிந்திருந்த வியர்வையைத் துடைத்துக கொண் டார். சோர்ந்து போயிருந்த கண்களிலே கேள்விக்குறி.

"ரிஸல்ட் எப்படி?"

"மூன்று பேரும் பாஸ்."

"கிறேட்.....!"

"நிமலுக்கு நான்கு ஏ நான்கு சீ. பிரபாத்துக்கு மூன்று ஏ ஐந்து சீ. எனக்கு ஐந்து ஏ மூன்று சீ." கமல் சொன்னான்.

சிரிநாத ஸேர் கமலினதும் பிரபாத்தினதும் தோள்களைப் பற்றிக் கொண்டார்.

"எனக்கு மிக்க மகிழ்ச்சி." அவர் வீட்டுக்குள் ஏறினார்.

"இன்று ரிஸல்ட் வந்த விஷயம் எனக்குத் தெரியாது." அவரது மனைவி சொன்னாள்.

"தேநீர் வேண்டுமே." என்றபடி ஸேர் மனைவியின் முகத்தைப் பார்த்தார்.

"மூன்று பேருக்கும் நல்ல ரிஸல்ட். பாடசாலை வரலாற்றிலேயே இப்படியொரு பெறுபேறு இருக்காது. நான் இடையில் தெறிகஹுந்த

கமகே ஐயாவின் நெல் ஆலைக்குச் சென்றேன். ரிஸல்ட் வந்திரு ப்பதாக அவர் தான் சொன்னார். சரி எத்தனை பேர் பாஸ் பண்ணியிருக்கிறீர்கள்?"

"ஐம்பத்திரண்டு பேரில் ஏ. எல் தகுதியோடு ஆறு பேர் பாஸ் பண்ணியிருக்கோம்."

"அதென்றால் கவலைக்குரிய விஷயம். ம்....... ஏன் அப்படி நடந்தது?"

கொஞ்ச நேரம் அமைதியாகப் பாதையைப் பார்த்தபடி நின்றார். மீண்டும் மாணவர் பக்கம் திரும்பினார்.

"விஞ்ஞானத்தில் உயர்தரம் படிக்கத் தகுதி இருப்பதால் மூன்று பேருக்கும் தங்கல்ல மகா வித்தியாலயத்துக்குச் செல்ல முடியும்."

அவரது மனைவி தேநீரும் பிஸ்கட்டும் கொண்டு வந்தாள்.

"தேங்காய் விற்பனை எப்படி?" நிமல் கேட்டான்.

"சந்தையில் தேங்காய் குறைவு. எல்லாம் விற்றுத் தீர்ந்தது. ட்ராக்டர் கூலியும் கொடுத்து எழுபத்தைந்து ரூபா தேறியது. மீண்டும் நெல் கிடைக்கும் வரை சந்தைக்குச் செல்வேன்."

"சூரியவெவ சந்தைக்கு நாங்களும் ஒரு நாளைக்கு வருவோம்." பிஸ்கட்டைக் கடித்தபடி கமல் சொன்னான்.

"அது மிகவும் கஷ்டமான பயணம். புழுதியால் குளித்தபடி பதினெட்டு மைல் மண்ரோட்டில் செல்ல வேண்டும். தாங்க முடியாத குளிரோடும் நுளம்புகளோடு வெள்ளி இரவு சந்தையில் தூங்க வேண்டும். காலையிலிருந்து நண்பகல் வரை சந்தை நடக்கும். வெய்யில் மிகக் கடுமை. பின்னர் சாப்பிட்டு விட்டு கிரிஇப்பன் ஆர சந்தைக்குச் சனி இரவு செல்வோம். அங்கு தூங்கி ஞாயிற்றுக் கிழமை வியாபாரம் பார்ப்போம். உங்களுக்கெல்லாம் அது கஷ்டம். மற்றது கமலுக்குப் பீனிசம் அல்லவா?"

சிரிநாத ஸேரின் மனைவியும் சேர்ந்து கொண்டார்.

"உங்கள் ஸேர் ஆரம்பத்தில் நோயாளியாகி விட்டார்."

"இவங்க ஆசைப்படுறாங்க. ஒரு நாளைக்கு வாங்க." வீட்டுக்குள் சென்றபடியே ஸேர் சொன்னார்.

“நாங்க போவோம்.” கமலும் எழுந்தான்.

❄ ❄ ❄ ❄ ❄ ❄

பிரபாத்தின் வீட்டுத் தோட்டத்தில் மூன்று நண்பர்களதும் பகல் பொழுது கழிந்தது. உயர்வகுப்பு ஆரம்பிக்கும் வரையில் செய்வதற்கு அங்கு வேலை இருந்தது. மிளகாய், கத்தரி முதலிய செடிகளை வளப்படுத்த அவர்கள் மேற்கொண்ட முயற்சி சிரமமாக இருக்கவில்லை. கதையும் சிரிப்பும் நகைச்சுவையுமாகவே காலம் கழிந்தது. மரக்கறிச் செடிகளில் மட்டுமல்ல அவர்களது மனங்க ளிலும் பூப்பூத்தன.

பயிர்ச் செய்கைக்கு கிருமிகளால் ஏற்படும் அழிவு அவர்களைப் பெரும் குழப்பத்தில் ஆழ்த்தியது. அதன் லாபம் கடை முதலாளிக ளுக்கும் கிருமிநாசினி உற்பத்தியாளர்களையுமே சென்றடைந்தது. மருந்து தெளிப்பதற்கு உடபீல்லகொட மாமா வந்தார்.

“இந்த நோய்களுக்கு ‘வெளிநாட்டு உதவி’ என்றுதான் பெயர். நோய்களை அனுப்பி அதற்கான மருந்தையும் அதே நாடுகள் அனுப்பு கின்றன. வறிய நாடுகளில் வாழும் விவசாயிகளை கையேந்தும நிலை க்கும் தள்ளும் வேலை இது.” அவர் கோபத்தோடு கதைத்தார்.

முதல் அறுவடையின் ஒரு பகுதியை விகாரைக்கும், சிரிநாத ஸேரின் வீட்டுக்கும் கொண்டு சென்ற அவர்கள், சந்தையில விற்ப தற்காக இன்னொரு பகுதியை மாடினின் ட்ராக்டரில் ஏற்றினார்கள்.

“விற்ற காசு அதில் உண்டு. இடையில் ஒன்றும் எடுக்கவில்லை.”

கமலுக்குப் பணம் கொடுத்தபடி ஸேர் சொன்னார். அவன் நண்பர்களுடன் அதைப் பகிர்ந்து கொண்டான். உடபீல்லகொட மாமவும் மரக்கறிக்காகக் காசு கொடுத்தார்.

“வேண்டாம் மாமாவிடம் காசு எடுக்க முடியாது.”

“சின்னப் பிள்ளைகளின் வேலையல்லவா? காசு எடுக்கத்தான் வேணும்.” அவர் மீண்டும் காசைப் பெற்றுக் கொள்ளவில்லை.

அன்று ஹெமில்டன் முதாலிளியின் கை ட்ராக்டர் பற்றி, உடபீல்லகொட மாமா சொன்னார்.

“ஹீன் ஐயாவையும், பெடிமஹுத்தயாவையும் இன்று நான் கண்டேன். ட்ராக்டர் விற்கப் போகும் விடயத்தைக் கூறி எனக்கு வாங்கச் சொன்னார்கள்.”

“இனி உடபீல்லகொட தம்பி எடுங்களன்.” கமலின் தாய் சொன்னாள்.

“நீங்கள் எடுத்தால் எங்களுக்கும் நல்லது.” அப்பா கூறினார்.

“என்னால் முடியாது. இருக்கின்ற தொல்லைகள் போதாதா? ட்ராக்டரில் வேலை செய்ய ஒருவர் தேவை. உடைந்தால் திருத்தவும் கரேஜ் வழியே அலையவும் வேணும். என்னால் முடியாதென்று சொல்லிவிட்டேன்.”

கமலும் கதையில் இணைந்தான்.

“நீங்கள் வாங்கமாட்டீர்களா மாமா?”

“என்னால் முடியாது.”

“அப்படியென்றால் அதனைச் சிரிநாத ஸேருக்கு வாங்கிக் கொடுங்களன். சிரிநாத ஸேருக்கு ட்ராக்டர் இருந்தால் நல்லது. ஒரு வருடமாக மாடினுக்கு ட்ராக்டர் கூலி கொடுக்கிறார். நான் கதைத்துப் பார்க்கிறன். எனது காசைத் தருப்பித் தரும்போது லாபப்பங்கென்று எட்டாயிரம் ரூபா தந்தார். நான் அதனை எடுத்தேன், மீண்டும் கொடுப்பதாக நினைத்துக் கொண்டுதான். அவர் ட்ராக்டரை எடுப்பதாயின் நான் அந்தக் காசைக் கொடுப்பேன்.”

“மாமா போய்க் கதையுங்க.”

“நான் போறன். இப்பொழுது அவருக்கு ட்ராக்டர் ஓட்ட முடியும். மாடினின் ட்ரைவர் இல்லாத போது ஸேர் தனியே செலுத்திக் கொண்டு செல்வார். நான் இப்பொழுது சந்திக்குப் போறன். ஒருவரை சந்திக்க வேண்டியுள்ளது.”

உடபீல்லகொட மாமா மீண்டும் வரும் போது இரவாகிவிட்டது.

அவர் கொண்டு வந்த செய்தி என்னவென்றறிய நண்பர்கள் காத்திருந்தனர்.

அவரது கையில் ஒரு பையும் காணப்பட்டது.

“சிரிநாத ஸேர் கஷ்டப்படுத்தித் தந்த கௌபி இது. சூரியவெவ சந்தையால் கொண்டு வந்திருக்கிறார். அந்த விஷயத்தையும் நான் கதைத்தேன். மனைவியென்றால் மிகவும் விருப்பம். கை ட்ராக்டர் இருந்தால் கூலிக்குக் கொடுத்தும் கொஞ்சம் சம்பாதிக்க முடியும். ஸேரென்றால் ஒன்றும் சொல்லவில்லை. ஹெமில்டன் முதலாளி பதினேழாயிரம் கேட்கிறார். ஹீன் ஐயாவுடன் சொல்லி இரண்டு மூன்றாயிரம் குறைத்துக் கொள்ள முடியாமல் போகாது.”

“ஸேருக்கு அந்தத் தொகையைத் தேடிக் கொள்ள முடியுமா?” பிரபாத் கேட்டான்.

“ஆம் அவரிடமும் கொஞ்சக் காசுண்டு. இதை நாங்கள் கதைக்கும் போது, சிறியா மிஸ்ஸின் கணவன் வந்திருந்தார். அவர் சௌக்கிய அதிகாரியல்லவா? குறையவிருந்தால் அவர் உதவுவார்.”

“அப்படியென்றா ஸேருக்கு வாங்க முடியும். ஒரு பிரச்சினையும் இல்லை.” பிரபாத் பூரணமாக நம்பினான்.

“ஆம். அடுத்தவாரம் நாங்கள் தங்காலைக்குச் செல்ல முன்பு ஸேரைப் பார்க்கச் செல்ல வேண்டும்.”



# 15

மரக்கறித் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த நண்பர்களுக்குக் கடவைக்கருகில் ட்ராக்டர் ஒன்று நிறுத்தப்படுவது தெரிந்தது.

"ஸேர் வந்திட்டார். சுனீததான் ட்ராக்டரைச் செலுத்திக் கொண்டு வந்தான்."

கமல் பயிற்றங்காய்க் கட்டொன்றைக் கூடையில் இட்டபடி கூறினான்.

"ஆம் போவோம்."

அவர்கள் கடவையருகே சென்றனர்.

"கமல் வீட்டுப் பக்கம் சென்றோம். அவர்கள் இங்கு வந்ததாகச் சொன்னார்கள். நான் பார்க்க வந்தேன். எப்படி நாளை மறுநாள் மகாவித்தியாலயம் போறீர்கள் அல்லவா?" ட்ராக்டரால் இறங்கியபடி கேட்டார்.

"ஆமாம் .நாங்கள் வீட்டுக்குப் போவோம் ஸேர்." பிரபாத் அவரருகில் வந்தபடி சொன்னான்.

"உங்கள் வேலை குழப்புகிறது? நான் மாலையில் மூவரின் வீட்டுக்கும் வருகிறேன்."

மீண்டும் ட்ராக்டரில் ஏறினார்.

கிறவல் பாதையில் துள்ளியபடி சென்ற ட்ராக்டர் மறையும் வரை நண்பர்கள் பார்த்திருந்தனர்.

"எனக்கு மிக்க மகிழ்ச்சி." பிரபாத் சொன்னான்.

"ஏன் எங்களுக்கில்லையா?" அடுத்த இருவரும் ஒரேயடியாகக் கேட்டனர்.

"எல்லோருக்குமே மகிழ்ச்சி. எங்களுடைய ஸேர் சந்தோஷமா வாழ்கிறார்."

பிரபாத் மீண்டும் மண்வெட்டியைக் கையிலெடுத்தான்.

மாலை மறைந்து வருகையில் சிரிநாத ஸேர் தனது மகனுடன் கமலின் வீட்டுக்கு வந்தார். அவருடைய கையில் ஒரு பேக் இருந்தது. சுனீதவிடம் இன்னொரு பேக் இருந்தது.

கமலின் தகப்பன் வீட்டிலிருக்கவில்லை.

"தம்பியைப் பார்க்க ஸேர் வந்துள்ளார்." என்றபடி அம்மா வாசலுக்குக் கதிரையொன்றைக் கொண்டு வந்தாள். கமல் இன்னொரு கதிரை கொண்டு வந்தான்.

"தம்பி காலை ஐந்தரைக்காவது போக வேண்டும். அம்மா விடிய எழும்பிச் சமைக்க வேண்டியிருக்கும்." சிரிநாத ஸேர் சொன்னார்.

"சமைக்கிறதென்ன பெரிய வேலையே. அவ்வளவு தூரம் போக இவன் களைத்துவிடுவான்." அம்மா சொன்னாள்.

"நான் சிறிய பரிசொன்று கொண்டுவந்தேன். கமலுக்கு" ஸேர் பேக்கைக் கொடுத்தபடி கூறினார்.

கமல் அதனைப் பெற்றுக் கொண்டு வணங்கினான்.

"இங்கு போல் அங்கும் நன்றாகப் படிக்க வேணும். உங்களுக்கும் உங்கள் நண்பர்கள் இருவருக்கும் எங்கென்றாலும் தோல்வி கிடையாது. இது எனது நம்பிக்கை."

தேநீர் உபசாரத்தின் பின் அவரும் மகனும் எழுந்தனர்.

"நிமல், பிரபாத் வீட்டுக்கெல்லாம் போக வேண்டும். நாங்க வாரம்." முற்றத்துக்கு இறங்கியபடி ஸேர் சொன்னார்.

கடவையடிக்கு வந்த சுனீத கையசைத்தான். கமலும் அங்கு ஓடிச்சென்று மறையும் வரை பாதையைப் பார்த்தவண்ணமிருந்தான்.

வீட்டுக்குள் வந்த கமல் பேக்கைத் திறந்து பார்த்தான். அதில் காற்சட்டைத் துணி, சேர்ட், ஒரு டசின் பயிற்சிக் கொப்பி, பேனை என்பன காணப்பட்டன.

அவனது கண்கள் ஈரமாகின.

"அம்மா ஓடிவாங்கோ."

அவள் சேர்டை உயர்த்திப் பார்த்தபடி "சிரிநாத ஸேருக்குப் பெரிய செலவு." என்றாள்.

"ஸேரிடம் இப்போ காசிருக்கல்லவா?" கமல் சிரிப்போடு கூறினான்.


"நெல்சன் அண்ணாவுக்குச் சொல்லி காற்சட்டை தைத்துக் கொள்ள வேணும்."

அடுத்த நாள் நண்பர்களோடு நெல்சனைச் சந்திக்கச் சென்றான். மாலையில் தைத்துத் தருவதாக வாக்களித்தான்.

மகா வித்தியாலயத்திற்குப் போவதற்கு முதல்நாள் இரவு வெற்றிலைப் பிடியுடன் அவர்கள் சிரிநாத ஸேரைச் சந்திக்கச் சென்றனர்.

அவர் ட்ராக்டர் டெய்லரைச் சுத்தம் செய்து கொண்டிருந்தார்.

"சைமன் அப்புவுக்கு இன்று சாணம் இழுத்துக் கொடுத்தேன், கூலிக்குத் தான். கழுவியும் நாற்றம் போகவில்லை."



# 16

அன்று சனிக்கிழமை.

வழியில் கமல் தபாற்காரனைச் சந்தித்தான்.

"உங்களுடைய ஸேருக்கு இன்று அரச கடிதமொன்று வந்தது. ஆப்தீன், ஆரிசிரி, சன்தி ஸேர்மாருக்கெல்லாம் அதே விதமான கடிதங்கள் வந்தன. போய்ப் பாரும்."

இந்தத் தகவலைத் தனது நண்பர்களுக்குச் சொல்வதற்காக ஓடிய கமலுக்குப் பொறுமையிருக்கவில்லை.

அவர்கள் சிரிநாத ஸேரின் வீட்டுக்குச் சென்றனர்.

டேலரிலிருந்து பிரிக்கப்பட்ட ட்ராக்டர் முற்றத்தின் ஓர் அந்தத்தில் தென்னோலைகளால் மறைக்கப்பட்டிருந்தது.

"ஆ! மகிழ்ச்சியான செய்தி. இருந்த பாடசாலைக்குத் திரும்பவும் நியமனக் கடிதம் கிடைத்திருக்கு."

மாணவர் முகங்கள் மலர்ந்தது போல், வெண்மயிர்களுக்கூடாக உடபீல்லகொட மாமாவின் மகிழ்ச்சியும் வெளிப்பட்டது.

அவரது முகத்தின் மகிழ்ச்சி, கணப்பொழுதில் கவலைப் பாங்கானதாக மாறியது.

"சூரியவெவ வாடியில் விறகு பிளக்கும் போது நெஞ்சுவலி பிடித்துச் செத்த சுமனயின் நினைவு வருகிறது. அவர் ஒரு ஆசிரியர். வேலை நிறுத்தத்தின் பின்பு குடும்பத்தை வாழ்விக்கச் சொல்ல

முடியாத துன்பங்களை அனுபவித்தார். சந்தையில் அவரது மனைவியைக் கண்டேன். உடுப்புக்கள் தைத்துச் சந்தைக்குக் கொண்டு வந்து விற்று வாழ்கிறார். இன்னும் இருபதுக்கு மேற்பட்டவர்கள் உயிரை மாய்த்துக் கொண்டனர். வாழ்க்கையே வேண்டாமென்றளவுக்குத் துன்பப்படுத்திய பின்பே ஒரு சிலருக்காவது தொழில் தந்திருக்கிறார்கள்."

"ஸேர் திரும்பவும் தொழிலுக்குப் போறீங்கள்தானே?" உடபீல்லகொட மாமா கேட்டார்.

"வேறென்ன? நாளை மறுநாள்- திங்கட்கிழமை வேலைக்குப் போறன்."

விஜேசூரிய ஆலை லயனல் ஐயா மோட்டார் சைக்கிளில் வருவதைக் கண்டு ஸேர் எழுந்தார்.

"கேள்விப்பட்டன். உங்களுக்குத் திரும்பவும் வேலை கிடைத்ததென்று?" சைக்கிளை முற்றத்தில் நிறுத்தியபடி சொன்னார்.

"இப்பொழுதுதான் கடிதம் வந்தது. அதற்கிடையில் எப்படித் தெரிந்து கொண்டீங்க?"

"கல்வி அதிகாரி அபேநாத் சொன்னார். பிறகென்ன பள்ளிக்கூடம் போறீங்களா?"

"ஆம்..... நாளன்னக்கி."

லயனல் ஐயா மெல்லிய புன்னகையோடு திரும்பி உடபீல்லகொட மாமாவைப் பார்த்தார். மீண்டும் சிரிநாத ஸேரைப் பார்த்தார்.

"இந்தத் தொழிலைக் கைகழுவி விடுங்கள் மிஸ்டர் சிரிநாத. பாடசாலைக்குச் சென்று மாதாந்தம் எழுநூறு எண்ணூறு ரூபா எடுத்து என்ன செய்ய? கடந்த காலங்களில் அதை இரண்டு நாட்களில் தேடினீர்கள். நாங்கள் உதவி செய்யிறம். அடுத்த போகத்துக்கு லொறியொன்று தந்து நெல் சேர்த்து அனுப்ப யோசித்துக் கொண்டிருந்தன். வெடிய பகுதியில் சிறிய ஆலையொன்று ஆரம்பிக்கச் சொல்லி சாந்த தம்பி கேட்க இருந்தானாம். சிறிய ட்ராக்டரும் இருப்பதால் நல்ல வியாபாரமொன்று பார்க்கலாம். இலங்கை வங்கி - மிஸ்டர் பதிரத்னவும் உதவுவார்."

சிரிநாத ஸேர் வீட்டினுள்ளே எட்டிப் பார்த்தார். சுனீதவுக்கு அது புரிந்தது. அவன் எழுந்து சமையலறைக்குச் சென்றான்.

"லயனல் ஐயா! நான் வாழ்வதற்கு கஷ்டப்பட்ட போது எனது மாணவர்கள் உதவி செய்தார்கள். தற்கொலை செய்து கொள்ளவிடாமல் உயிரைப் பாதுகாத்தார்கள். எனக்கு இந்தப் பிள்ளைகளைக் கைவிட முடியாது. நாளை மறுநாள் நான் வேலைக்குப் போறன்."

லயனல் ஐயா எழுந்தார்.

"அவசர அலுவலொன்றுக்குப் போகும் போது இந்தப் பக்கம் வந்தன். நீங்கள் போவதென்று உறுதியான முடிவுடன் இருப்பது தெரிகிறது. இன்னும் கொஞ்சம் யோசியுங்கள். வேண்டுமென்றால் பாடசாலையில் வேலை செய்து கொண்டே பிஸ்னஸூம் பண்ணலாம்."

சிரிநாத ஸேரும் எழுந்தார்.

"தேநீர் குடித்துவிட்டுப் போங்கள் ஐயா."

"நன்றி! நான் அவசரமாகப் போக வேணும்."

அவர் முற்றத்திற்கிறங்கினார். மோட்டார் சைக்கிள் அவரைச் சுமந்து கொண்டு வெகுதூரம் சென்றது. அந்த ஒலி மெல்ல மெல்ல மறைந்த போது உடபீல்லகொட மாமா விரலாட்டியாட்டிப் பேசத் தொடங்கினார்.

"லயனல் ஐயா சொன்னதில் உண்மையுண்டு. மறுபக்கம் ஸேர் சொன்னதும் சரி."

"உடபீல்லகொட அண்ணா இல்லாவிட்டால் எனக்கு என்ன நடந்திருக்குமோ தெரியாது. இப்பொழுது எனக்கு இன்னொரு உதவி தேவை."

உடபீல்லகொட மாமா கதிரையின் முன்பக்கம் சாய்ந்து காது கொடுத்தார்.

"எனக்கிந்த ட்ராக்ட்ரை விற்றுத் தாருங்கள். சாக்குகளெல்லாம் இன்னொரு வேலைக்குப் பயன்படுத்த முடியாத அளவுக்குக் கிழிந்துள்ளன. தராசு தூக்கும் இரும்புக் கோலை நான் வைத்தி

ருக்க வேண்டும். ஏனென்றால் ஹம்பாந்தோட்டை, சூரியவெவ, கிரிஇப்பன் ஆர சந்தைகளில் சாமான் விற்ற விதம் எனக்கு ஞாபகம் வருவதற்கு. அதை நான் எனது அறையிலேயே வைத்துக் கொள்வேன்....."

அவரது முகத்தில் உணர்ச்சி ததும்பியது.

"ஏன் அதையெல்லாம் விற்க வேணும்? படிப்பிக்கும் போது வேறு தொழில்களும் செய்பவர்கள் தாராளமாக இருக்கிறாங்கள்." மாமா சொன்னார்.

சிரிநாத ஸேர் கமலின் பக்கமாகத் திரும்பினார்.

"நல்லது. உங்களது அபிப்பிராயம் என்ன? நான் பாடசாலைக்குப் போவதற்கு விருப்பமா?"

கமல் நிமலின் பக்கமாகத் திரும்பினான்.

நிமல் பதில் மொழிந்தான்.

"ஸேர் பாடசாலைக்குப் போவதை நாங்கள் விரும்புறம். ஆனா ஸேர் இல்லாத பாடசாலைக்கல்லவா நாங்கள் போக வேண்டியுள்ளது."

எல்லோரும் சிரித்தார்கள்.



# 17

ஓய்வு பெற்ற அதிபரான குலதுங்க என்னும் பயிர்ச் செய்கை யாளர் சிரிநாத ஸேரின் ட்ராக்டரை விலைக்கு வாங்கினார். தராசைப் பெடி மஹத்தயா வாங்கினார்.

சந்திக்கு சிறிது தொலைவில் இருக்கும் காணித் துண்டை வேண்டு மாறு சிரிநாத ஸேரை, உடபீல்லகொட மாமா ஊக்குவித்தார். ட்ராக்டரை விற்ற காசினால் அவர் அக்காணியை வாங்கினார்.

அதில் வீடு கட்டுவதற்காக ஏழுமுழ அத்திவாரம் போடும் போது, கமல், நிமல், பிரபாத், அவர்களின் பெற்றோர், உடபீல்லகொட மாமா மட்டுமல்ல இன்னும் பல மாணவர்களும் வந்திருந்தனர். சிறிய பிக்குவும் சமுகமளித்தார்.

ஒருபக்கம் வயல்வெளியும் மறுபக்கம் பிரதான பாதைக்குமிடை யில் அமைந்திருந்த அந்தச் சிறிய இடத்தில் நின்றிருந்த ஈரப்பலா மரத்தை வெட்ட வேண்டி நேர்ந்தது.

கமலின் தகப்பன் கயிறிழுத்து, துண்டு பிரித்தபின் அத்திவாரம் வெட்டுப் வேலை ஆரம்பித்தது. பிரபாத், கமல், நிமல் ஆகியோர் கல், மண், நீர் இட்டு சீமெந்து குழைத்தனர். உடபீல்லகொட மாமா அத்திவாரம் போட ஆரம்பித்தார்.

கமலின் அம்மா பாற்சோற்றுப் பெட்டியும், நிமலின் அம்மா நெத்தலி அவியலும் கொண்டு வந்தனர். சிரிநாத ஸேரின் மனைவி தேநீர் போட்டாள்.

பிரித் ஓதி சமயக் கிரியைகளை சிறிய பிக்கு மேற்கொண்டார்.

"அதிகமான ஆசிரியர்கள் ஓய்வு பெற்றபின்பே வீடு கட்டுவார்கள். நானும் அப்படித்தான் நினைத்தேன். ட்ராக்டரை விற்காவிட்டால் காணி எடுப்பதற்கு, வீட்டு வேலை ஆரம்பிக்கவோ கிடைத்திருக் காது." சிரிநாத ஸேர் பிக்குவின் பக்கமாகத் திரும்பிச் சொன்னார்.

"வியாபாரத்திற்கல்லவா ட்ராக்டர் வேண்டினீங்கள்." பிக்கு கேட்டார்.

"அப்படித்தான் சுவாமி. உடபீல்லகொட அண்ணா போன்றவர்கள் உதவியதால் தான் வியாபாரம் செய்ய முடிந்தது."

உடபீல்லகொட மாமா பாற்சோற்றுக் கட்டியைக் கடித்தபடி நெருங்கினார்.

"நெல் வியாபாரம் செய்ய நான்தான் ஆலோசனை சொன்னேன். ஆனாலும், அந்தக் கருத்து இந்தப் பிள்ளைகளுக்கூடாகவே என்னை அடைந்தது. எனது நெல்லை ஸேருக்குக் கொடுக்கும்படி அவர்கள் தான் சொன்னார்கள். முதலில் நான் திக்குமுக்காடினேன். ஒரேயடியாக நான் விரும்பவுமில்லை." மாமா உண்மையை வெளிப் படுத்தினார்.

"நெல்லு கொஞ்சம் கிடைக்காதிருந்தால் இந்த வியாபாரம் நடந்தி ருக்காது." அவர் பக்கமாகத் திரும்பியபடி சிரிநாத ஸேர் நன்றியை வெளிப்படுத்தினார்.

"ஸேருக்குத் தெரியாமலிருக்கலாம். அதன் பிறகு இந்தப் பிள்ளைகள் முழு ஊரிலும் திரிந்து பாடசாலை மாணவர்களைச் சந்தித்தார்கள். ஸேருக்கு நெல் கொடுக்கும்படி அப்பாமாருக்குச் சொல்ல வைத்தார்கள்." சிறிய பிக்கு மெல்லச் சிரிப்பைச் சிந்தினார்.

பிக்குவிற்கு ஸேரின் மாமனாரின் மரணச் சடங்கு ஞாபகம். வந்தது.

"சவப்பெட்டி கிடைத்தவிதம் தெரியுமா?"

சிரிநாத ஸேர் உடபீல்லகொட மாமாவைப் பார்த்தார்.

"அதை முதலாளியின் வண்டியில் கொண்டு வந்தார்கள். உடபீல்லகொட மாமா தந்தார்."

சிறிய பிக்கு சிரித்தார்.

"முதலாளியின் வண்டியில் தான் கொண்டு வந்தார்கள். அதுவும் இந்த மூவரதும் வேலை தான். பலகை கொஞ்சம் பிரபாத்துடையது. விக்டர் செய்தான். பாடசாலையில் பணம் சேகரித்து மரண வீட்டுக் கான சாமான்கள் கொண்டு வந்ததும் இந்த மூவரும் தான்."

சிரிநாத ஸேரின் உதடுகள் முட்டிமோதின.

"எனக்கு ஞாபகம் மாணவர் தலைவர் காசு கொண்டு வந்து தந்தார்."

"விகாரையில் வகுப்பு ஆரம்பிக்க முயற்சித்ததும் இவர்கள் தான்."

மூன்று நண்பர்களதும் முகங்கள் நிலத்தை நோக்கியிருந்தன.

"அது மாத்திரமல்ல. நீங்கள் தேங்காய் விற்கும் போது தெரிந்த வர்களையெல்லதம் அங்கே அனுப்பியவர்களும் இவர்கள்தான்."

மூத்தவர்கள் அமைதியாக நின்றனர். சாந்தமான அவர்களது முகங்களிலே கண்ணீர் நிரம்பிய கண்கள்.

"அப்பா-" சுனீதவும் ஏதோ சொல்ல முனைந்தான்.

"இந்த அண்ணாமார் எனக்குப் பயிற்சிக் கொப்பிகள் தந்தாங்கள். அப்பாவுக்கு சொல்ல வேண்டாமென்றாங்கள். இரட்டை ரூள் கொப்பி இல்லாமல் நான் முட்டுக்காலில் நின்றதைக் கவனித்து விட்டு, எனது புத்தகங்களுக்குள் இரட்ரை ரூள் கொப்பியை இவங்கள் தான் வைத்திருந்தாங்கள்."

தாங்க இயலாத உணர்வுகளால் சிரிநாத ஸேரின் மனம நிறைந் திருந்தது.

கமல், நிமல், பிரபாத் ஆகியோரை அரவணைத்துக் கொண்டு சின்னக் குழந்தை போல் அவர் அழத்தொடங்கினார்.

ஆசிரியர் இப்படி அழுவதைப் பார்த்த சிறிய பிக்குவினதும் அங்கு நின்ற அனைவரதும் கண்கள் குளமாகின.

"நான் இப்பொழுது இந்தப் பிள்ளைகளுக்குக் கடனாளி. நான் எப்பொழுதும் இவர்களுடனேயே இருப்பேன்."

கொஞ்ச நேர அமைதிக்குப் பின் அவர் ஆணித்தரமாகச சொன்னார்.

# குருதட்சணை



**தெனகம சிரிவர்தன**

தமிழில் – திக்வெல்லே கமால்

"நண்பர்கள்" (மிதுரோ) என்ற இளைஞர் நாவலுக்காக சுவிட்சர்லாந்தின் அனைத்துலக இளைஞர் நூல் சபையின் இளைஞர் இலக்கிய விருதை வென்ற தெனகம சிரிவர்தன "குருதட்சணை" (குரு பண்டுரு) எனும் இந்த இளைஞர் நாவலுக்காக 1994 ம் ஆண்டு தேசிய இலக்கிய விருதைப் பெற்றுக் கொண்டார்.

மனிதாபிமானம் நிரம்பிய ஆசிரியர் ஒருவர் வேலை நிறுத்தத்தில் ஈடுபட்டதனால், உதவியற்ற நிலைக்குத் தள்ளப்படுவதை கண்ணுற்ற அவரது இளம் மாணவர்கள் பல்வேறு முயற்சிகளை மேற்கொள்கின்றனர். வாழ்க்கைப் பிரச்சினைகளுக்கு ஆத்மசக்தியுடன் முகம்கொடுத்து அம்மாணவர்கள் உண்மையான வீரர்களாக மாறுவதை எடுத்துக் கூறும் இந்த இளைஞர் நாவல், எமது மாணவர் சமுதாயத்திற்கு உலகத்தையும் வாழ்க்கையையும் பற்றிய சத்தியத்தைப் புரிந்துகொள்ள நிச்சயம் உதவும்.

சிபில் வெத்தசிங்க

தோதென்ன வெளியீடு
உஸ்வெவ வீதி, ஆனமடுவ, தொ. - 032 2263446

DIGITAL ART WORK - DAMMIKA SUDATH JAYAKODI
Printed by Jayan Print Graphics

ISBN 978-955-1848-11-8

200/-

101-1-2008-18